Sangathamil

சங்கத்தமிழ்

குரல் – 24 | சர்வதேச மின் செய்தித்தாள் | 01. மே. 2022

தமிழீழ தேசிய துக்க நாள்

தமிழ் இன அழிப்பு நாள்

Genocide Day

National Mourning Day of Thamileelam

மே May 18



Only In 2009 Over 146, 6797 Eelam Thamils Murdered, 70,000 Thamils unaccounted

Ontario Government Recognized Thamil Genocide Education Week (11May to 18 May) in Canada

மகிந்தவின் சிந்தனைகளே இன்றைய இலங்கையின் நெருக்கடிகளுக்கு முக்கிய காரணம்.

சம்பள கொடுப்பனவுகளின் எதிரொலி, இலங்கை இராணுவதினரிடையே பாரிய பிளவு ஏற்படும் அபாயம்!

இலங்கையில் மெய்ப் பாதுகாவலர்களால் இராஜபக்சா குடும்பமே அழியப்போகும் அபாயம்!

இலங்கையில் மிக விரைவில் அன்னிய நாட்டு இராணுவத் தலையீடு!

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

RANI TAILORS & FASHIONS

25 வருடம் அனுபவம் மிக்க மற்றும்
Sri Lanka, India, Germany போன்ற
நாடுகளில் தையல் கலையில் பிரபலமான
புஸ்பராணி மணியம் அவர்கள் இப்போது
Canadaவில் சேவையாற்றுகிறார்



தொடர்புகளுக்கு:
647.836.0654 Cell
647.945.8351 Home

NISHANTHAN LAW OFFICE

SERVICES
- Purchasing a Residential Property
- Selling a Residential Property
- Residential Mortgage Refinancing
- Wills and Powers of Attorney

NOTARY SERVICES




Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com

1200 Markham Rd., Lower Level Unit 5 & 7
Scarborough, On. (Markham / Ellesmere)

Ideal Auto Tech Ontario
For all your vehicle repair and Service needs
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.



We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.

Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D.
Personal Injury Lawyer
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

A TAMILAN CARPET CLEANING
PROFESSIONAL STEAM
CAR & VAN
உங்கள் வீடு தேடி வந்து செய்து கொடுக்கப்படும்
விருகள், கொண்டோக்கள், வாடகை வசியிடங்கள், வீட்டின் படிகள், தரை விரிப்புகள், சோபாகள், மெத்தைகள் வாகன உட்புறம்...



இந்த விளம்பரத்தாலோ எந்த வேலைகளும் நிரந்தரமாகாது



416.831.6343
416.265.6825
கார்த்திகேசு செல்வம்
Karthigesu Selvam

Annai's PRAGATI SIDDHA HERBAL CLINIC
A total wellness according to Natures Way!
Treatment based on Ancient Siddha Philosophy of Healing.



MASTER HEALER
PREMILA.S
Hereditary Genetic Siddha Practitioner (Royal Physician Treatment),
Spagyric Alchemist (CAN)
Alchemist (IND),
Natural Medicine Practitioner© (CAN)
Canada, Europe & India
TEL: 1 647-278-3100
Email: pragatishc@gmail.com | Web: www.pragatisiddha.com

அழகிய மனை நிறைவான வாழ்வின் தொடக்கம்! வீடு வாங்க விற்க அல்லது அது தொடர்பான விபரங்கள் அறிய இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்



7240 Woodbine Ave., Suite 103, Markham, ON. L3R 1A4 Tel: 905-305-1600 Fax: 905-305-1609

Preparation of Income Taxes
T1 and T2 with E/File
Location:
Unit 9-40 Winges Rd
Woodbridge, ON
L4L 6B2
Pearl Fortune Canada
Head Office
101 Laird Dr., Markham
ON L3S 3N6
Tel: 905.554.5606
Fax: 905-554-3236



Please contact:
Yo K Gamar (C.M.A)
Cell : 416-917-7263
Accountant since 1993

K.S PAINTING & HARDWOOD



PROVINTING THE BEST SERVICE
NIRANJAN SELVARAJAH 647.406.7706
www.kspaintingandhardwood.com

GRAND OFFER
this Offer Only December 31th to January 31th, 2022.
MAGAZINES
7" x 5" Size, 100 copys
Inside 32 Pages, B&W 20lb
with colour glossy cover
¢ $ 310.00
+ Graphic Extra....
Design Only
¢ $ 9.99 / Sq. Ft (¢$ 34.99 / h.)
Large Format Digital Printing
1000 Business Cards
with out design ¢ $ 59.99
One Side - 16pt Card Stock
with out design ¢ $ 29.99
One Side,10pt Card Stock
We print all kind of products
Call Me : Silver Print House - 647 712 1266

Residential, Commercial, Refinance
ALL YOUR MORTGAGE NEEDS
Ari Paramalingam
Mortgage Agent
T: 905.781.1356
F: 1.888.653.5161
E: arikaran@hotmail.com
MORTGAGE ALLIANCE
402-2 Country Court Blvd
Brampton, ON L6W 3W8

JRS AUTO TECH
ALL MECHANICAL & ELECTRICAL REPAIRS
OPEN FROM 9 AM - 9PM

AC	$99.99 +
OIL CHANGE	$39.99 +
USED TIRE	$49.99 +
BRAKES JOB	$249.99 +

Subas: 416-206-9489 Office: 416-628-4399
2655 Lawrence Ave., E, Unit 05, Scarborough ON M1P 2S2
JRSAUTOTECH@HOTMAIL.CA

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச ஆலோசனைகளும் வழங்கப்படும்



Nesan Chathanantham
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
RAISING YOUR VALUE
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

Samraj Insurance Group Inc.
வாகனக் காப்புறுதி, ஆயட் காப்புறுதி, வீட்டுக் காப்புறுதி, பயணக் காப்புறுதி உட்பட அனைத்துக் காப்புறுதித் தேவைகளுக்கு அழையுங்கள்
Siva Ananthamoorthy (Licensed Insurance Agent)



RE/ON வீடு வாங்க - விற்க சிறப்பான சேவை
Dr. Ananthamoorthy
416.823.3686 / 647.857.0086

MT CPA CA
MAYURAN THARMABALAN
PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT



* AUDIT	* CORPORATE TAXES
* REVIEW ENGAGEMENT	* PERSONAL TAXES
* NOTICE TO READER	* FINANCIAL PLANNING
* BUSINESS ADVISORY	* CRA AUDITS
* CONTROLLERSHIP SERVICES	* PAYROLL
	* BOOKKEEPING

Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298
647-748-6444 www.tharmabalan.ca
Suite 402 - 1585 Markham Rd, Scarborough ON M1B 2W1
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

எமது மக்கள் போற்றப்பட வேண்டியவர்கள் கௌரவிக்கப்பட வேண்டியவர்கள். தேசியப் போராட்டத்தில் எமது மக்களின் பங்களிப்பு சாதாரணமானதல்ல, அவர்களது பங்களிப்பு அளப்பரியது என்றுதான் சொல்வேன்





சங்கத்தமிழ்

தொடர்புகளுக்கு

தொலைபோசி

437 345 4203

மின்னஞ்சல் (Email)

sangathamilcanada@gmail.com

முகநூல் (Facebook)

Sangathamil Canada

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீடிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.



போராட்டத்தை ஆரம்பித்த வரலாற்று நாயகர்களுக்காக...

1972 களிலேயே தோற்றம் பெற்ற தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஓர் மாபெரும் திருப்பு முனையை, ஓர் புதிய சகாப்தத்தைப் படைத்தது, 1983 யூலை 23ம் திகதி திரு நெல்வேலியில் இடம்பெற்ற 13 இராணுவவீரர் மீதான தாக்குத லாகும். இம் மாபெரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தாக்குதலில் பங்கேற்ற விடுதலைப்பு புலிகளின் பலர் (தலைவர் பிரபாகரன் தவிர) இன்று எம்முடன் இல்லை. போராட்டத்தை ஆரம்பித்து வைத்த, இத்தாக்குதலில் பங்கேற்ற வரலாற்று நாயகர்களான **செல்லக்கிளி, பொன்னம்மான், விக்ரர், கணேஸ், ரஞ்சன், ரெஜி, லிங்கம்** ஆகியோரின் நினைவாக... அன்று கிட்டண்ணா அவர்களால் "போராட்டத்தை ஆரம்பித்த வர லாற்று நாயகர்களுக்காக..." எழுதப்பட்ட கட்டுரையே இது. திரு நெல்வேலித் தாக்குதலில் பங்கேற்ற வரலாற்று நாயகர்களில் ஒருவரான கிட்டண்ணாவும் இன்று எம்முடன் இல்லை. அதனால் இங்கு, கிட்டண்ணாவின் நினைவாகவும் இக் கட்டுரையில் மீள் பிரசுரம் செய்யப்படுகிறது.


லெப். கேணல் விக்ரர்

1983ம் ஆண்டு யூலை 23ம் திகதி இரவு 11மணியளவில் திருநெல்வேலிச் சந்தியைக் கடந்து யாழ்ப்பாணம் நோக்கி ஓர் வெள்ளை நிற டெலிக்கா வான் வந்துகொண்டிருக்கிறது. வானை செல்லக்கிளி செலுத்த அவனை அடுத்து கையில் S.M.G உடன் கம்பீரமாக உட்கார்ந்திருக்கிறான் விக்ரர். அவனை அடுத்து நான் வானின் பின்பகுதியில் தம்பி, மற்றும் ஏனைய தோழர்கள்.

நாம் முன்பு திட்டமிட்டபடி வான் தபால்பெட்டிச் சந்தியில் நிற்க எல்லோரும் கீழே இறங்குகிறோம்.

அங்குதான் கண்ணிவெடி புதைக்க வேண்டும்.

வான் அந்த இடத்தில் நின்று நாங்கள் இறங்க அயல் சனங்கள் அரவம் கேட்டு வெளிவரத்தொடங்க விக்ரரும், செல்லக்கிளியும் (இராணுவச் சீருடை அணிந்து இருந்தனர்) சிங்களத்தில் உரக்கத் கதைத்தபடி றோட்டிலே நடக்கத் தொடங்க வெளியே எட்டிப் பார்த்த தலைகளை காணவில்லை. வெளிச்சம் போட்ட இருவீடுகளின் விளக்குகளும் அணைந்து விட்டது. யாரும் வெளிவரவில்லை. இராணுவத்தினர் வந்து நிற்கின்றனர் என்று நினைத்து விட்டனர்.


முன்பு திட்டமிட்டபடி அப்பையா அண்ணை, விக்ரர், செல்லக் கிளி மூவரும் வெடிகளைப் புதைக்க ஆரம்பிக்கின்றனர். விக்ரரும் செல்லக்கிளியும் பிக்கானால் றோட்டிலே கிடங்கு வெட்டுகின்றனர். கண்ணிவெடி புதைப்பது பெரிய வேலை.

வெடிமருந்து தயார்படுத்துகையில் வெடிமருந்தின் நச்சுத் தன்மையால் தலையிடிக்கும். என்னுடைய அனுபவப்படி தாங்க முடியாத தலையிடி. அதன்பின் கிடங்குவெட்டி, (இறுகப் போடப் பட்ட தார் றோட்டிலே கிடங்கு வெட்டுவது அவ்வளவு இலகு வானதல்ல) இவற்றையும விட தாக்குதலின் போது சண்டையும்


லெப். கேணல் பொன்னம்மான்

போடவேண்டும்.

எமது தகவலின் படி சுமார் நள்ளிரவு 12 மணியளவில் பலாலியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு ஒரு ஜீப் வண்டியிலும், ஒரு ட்ரக் வாகனத்திலும் இராணுவத்தினர் வருவது வழக்கம். ஜீப்பில் 4 இராணுவத்தினரும் ட்ரக்கில் 10 பேர் அளவிலும் வருவார்கள் எனத் தகவல். எனவே யாழ். பல்கலைக்கழக பின்வீதி பலாலி றோட்டைச் சந்திக்கும் இடமாகிய தபால் பெட்டிச் சந்தியில், கண்ணிவெடிபுதைத்து இரண்டாவதாக வரும் வாகனத்துக்கு கண்ணி வெடியால் தாக்க முன்னால் வரும் வாகனத்தைச் சுட்டு மடக்குவது என்று நாம் வகுத்த திட்டம். அதன்படி திருநெல்வேலிச் சந்தியில் ஒரு வோக்கிரோக்கி. அது அவர்களுடைய வரவை எமக்கு அறிவிக்கும்.


கப்டன் றெஜி

விக்ரரும் செல்லக்கிளியும் அப்பையா அண்ணையும் கண்ணி வெடி தயார்படுத்திக் கொண்டிருக்கையில் மற்ற எல்லோரும் அருகில் உள்ள வீடுகளின் சுவர்களின் உள்ளே பாய்ந்து தத்தமக்கு உரிய இடத்தை தேர்ந்தெடுக்கத் தொடங்கினோம். ஒவ்வொருவருக்கும் இடம் கிடைத்தது. கண்ணிவெடியை புதைத்துக் கொண்டிருக்கையில் விக்ரர் விலகி தனக்கு ஒதுக்கப் பட்டிருந்த இடத்தின் சுவரின் உள்ளே பாய்கின்றான். சுவர் அவனை விட உயரமாக இருக்க பின்பு வெளியில் குதித்து உயரம் வைப்பதற்காக தெருவில் தேடி சில பெரிய கற்களை எடுத்து உள்ளே போட்டு தன் உயரத்தைச் சரிப்படுத்திக்கொண்டு அந்த சுவரின் மறைவைக் கொண்டு தன் நிலையை சீர்படுத்திக் கொள்கிறான். துப்பாக்கியை தோளில் வைத்து இயக்கிப் பார்க்கும் விதங்களையும், துப்பாகியை இலகுவாக இயக்க முடியுமா என்பதையும் சரி பார்த்துக் கொள்கின்றான்.

தம்பி (பிரபாகரன்) தபால் பெட்டிச் சந்தியில் இருந்து திருநெல வேலிப்பக்கமாக உள்ள ஒரு வீட்டின் சுவரின் பின்னே நிலையை எடுத்து தாக்குதலுக்கு தன்னை தயார்படுத்திக் கொண்டிருக்கையில் வோக்கி செல்லக்கிளியை கூப்பிடுகின்றது. செல்லக்கிளி அம்மான் மிக அவசரமாக தன் வேலையை முடித்துக்கொண்டு மீதி வேலையை அப்பையா அண்ணை யிடம் விட்டுவிட்டு தனது நிலைக்குச் செல்கின்றான். அம்மான் அருகில் உள்ள ஒரு கடையின் மேல் வெடிக்கவைக்கும் கருவியுடனும் தானியங்கி இயந்திரத் துப்பாக்கியுடனும் தயாராகின்றான்.

வெளிச்சம் எமக்கும் தெரிந்தது. அப்பகூட வேலை முடிய வில்லை. விக்ரர் "அப்பையா அண்ணை வெளிச்சம் வரு கின்றது கெதியா மாறுங்கோ" என்று கத்த அப்பையா அண் ணை வயர் ரோல்களுக்கு ரேப் சுத்திக் கொண்டிருக்கையில், வோக்கி மீண்டும் அலறியது.



மேஜர் கணேஸ்

"அம்மான் நாங்கள் பார்த்துக் கொண்டிருப்பவர்கள்தான். முன்னால் ஜீப், பின்னால் ட்ரக்" என்று அறிவித்தது. எனவே அம்மான் ட்ரக் வண்டிக்கு கண்ணிவெடியால் தாக்க முன்னால் வரும் ஜீப்புக்கு நாம் தாக்குதல் தொடுக்கத் தயாராகிக் கொண் டிருக்கையில் வெளிச்சங்கள் நெருங்கிக் கொண்டிருக்கின்றன.

ஜீப்பை எம்மிடம் வரவிட்டு, பின்னால் வரும் ட்ரக்வண்டியை கண்ணிவெடியால் தாக்கி அதில் தப்புபவர்களைச் சுடுவதாக எமது திட்டம். ட்ரக் வண்டியில் பின்பக்கமாக இருப்பவர்களை சுடக்கூடியவாறு விக்ரர் நிற்கின்றான். விக்ரரையும் தாண் டுபவர்களை கவனிக்க தம்பியும் சில தோழர்களும் நிற்கின் றனர். வெளிச்சங்கள் திருநெல்வேலிச் சந்தியைக் கடந்து வந்து கொண்டிருந்தது. நான் எட்டிப்பார்த்தேன். முன்னால் இரு விளக்குகளுடன் ஒரு வாகனம். அந்த விளக்குகளுக்கிடையி லான இடைவெளியைக் கொண்டு அது ஜீப் என்று புரிந்து கொண்டேன். அடுத்து ட்ரக். மெல்ல வந்து கொண்டிருக் கின்றன.

நாம் ஜீப்பைத் தாக்குவதற்குத் தயாராகிக்கொண்டிருக்க ஜீப் விக்ரர் நின்ற இடத்தைத் தாண்டி கண்ணிவெடி வைத்த இடத்தை அண்மித்த போது கண்ணிவெடி வெடிக்க வைக்கப்பட்டுவிடுகிறது. எமக்கு அதிர்ச்சி. ஏன் அப்படி நடந்தது? சிந்திக்க நேரமில்லை. உண்மையில் ஜீப்வண்டியை விட்டு பின்னால் வரும் ட்ரக் வண்டிக்கே கண்ணிவெடி வைக்க இருந்தோம். இன்றுவரை அது ஏன் ஜீப்புக்கு வெடிக்க வைக் கப்பட்டது என்பது தெரியாது. ஏனென்றால் அதை வெடிக்க வைத்த செல்லக்கிளி அதை விளக்கவில்லை. சண்டை முடிந்த போது அவனை நாம் இழந்துவிட்டோம்.

சிந்திக்க நேரமில்லை. உடனே நானும் என்னோடு நின்றவர் களும் சுடத்தொடங்கினோம். ஜீப்பின் வெளிச்சம் அணைய



வில்லை. எனவே பின்னால் நடப்பவை எமக்குத் தெரிய வில்லை. என்னுடைய ஜி 3 ஆல் இரு விளக்குகளையும் குறி பார்த்து உடைத்தேன். விளக்கு உடைந்ததும் பின்னால் நின்ற ட்ரக்கின் வெளிச்சத்தில் ஜீப்பில் இருந்த சில உருவங்கள் இறங்குவதைக் கண்டு அவற்றை நோக்கியும் ஜீப்பை நோக் கியும் ரவைக் கூட்டில் போடப்பட்டு இருந்த அத்தனை குண்டு களையும் சுட்டேன். அது இப்படி இருக்க விக்ரரைப் பார்ப்போம்.

ஜீப் வண்டி அவனைத் தாண்டும் போது விக்ரர் தன் தலையை சுவருக்கு உன்ளே இழுத்துக் கொண்டு நிற்கையில் மிகப்பெரிய சத்தத்துடன் கண்ணிவெடி வெடிக்கிறது. விக்ரர் தலையை நிமிர்த்திப் பார்க்க ஓரே புழுதிமண்டலம். மங்கலாக ஒருவன் வெடித்த ஜீப்பில் அருந்து ஓடிவருவது தெரிய அவனைக் குறிவைத்து விசையை அழுத்த. சில குண்டுகள் அவனின் உடலில் பாய அவன் தூக்கி எறியப்படுகின்றான். அப்படியே சுருண்டுவிழுந்து விட்டான். இன்னுமொருவன் ஓடிவர அவனை நோக்கிச் சுட அவன் மீண்டும் ஓடிவர மீண்டும் சுட குண்டுகள் அவனை வீழ்த்தவில்லை. ஆனால் காயத்துடன் பல்கலைக்கழக பின் வீதியால் ஓடினான். விக்ரர் அவனைத் திருப்பிச் சுட்டான். வானளாவ உயர்ந்த புழுதி மண்டலம் அடங்கவில்லை. மற்றும் தகுந்த வெளிச்சம் இல்லை. என வேதான் சரியாகச் சுடமுடியவில்லை. அவன் ஓடிவிட ஜீப்புக்குக் கிட்டே ஒன்றோ இரண்டோ துப்பாக்கிகள் விக்ரரை நோக்கிச் சுட்டன. அதன் சுவாலையை விக்ரர் கண்டான். தன் இயந்திரத் துப்பாக்கியால் அந்த சுவாலையை மையமாக வைத்து சில வேட்டுக்களைத் தீர்த்தான். பின்பு அடங்கிவிட்டது. மேலும் ஒருசில உருவங்கள் தெரிய அவற்றை நோக்கியும் சில குண்டுகளைச் சுட்டான் துப்பாக்கி திடீரென்று நின்றுவிட்டது. விக்ரருக்கு விளங்கிவிட்டது. போடப்பட்ட குண்டுகள் தீர்ந்து விட்டது. குண்டுகள் நிரப்பப்பட்ட மறு ரவைச் சட்டத்தைமாற்றி மீண்டும் சுட்டான். அதேவேளை பின்னால் வந்த ட்ரக் வண் டியின் சாரதி வெடி வெடித்ததைப் பார்த்தான். அவன் உடல் சில் லிட்டது. பெரிய வெளிச்சத்தையும், ஜீப் மேலே தூக்கி எறியப் பட்டதையும் கண்ட சாரதி தன்னை அறியாமலே பிரேக்கை இறுக அமத்தினான். ஏன் பிரேக் அழுத்தும் மிதி மீது ஏறி நின்றான் என்றே கூறலாம்.

ட்ரக் பிரேக் போட்டு நின்றதும் ட்ரக்கின் பின்புறத்தில் இராணு வத்தினர் தம் துப்பாக்கியை தயாராக்கியவாறு இருக்கையி லிருந்து எழத்தொடங்கினர்.

தம்பி இரு வாகனங்களும் தன்னைத் தாண்டு மட்டும் சுவரின் மறைவிலே குந்தியிருக்க, இரு வாகனங்களும் அவரைத் தாண்டுகிறது. சிறிதாக நிமிர்ந்து பார்க்கையில் ஜீப் வண்டி கண்ணி வெடியை நெருங்கிக் கொண்டிருக்க ட்ரக் அவருக்கு 20 யார் தூரத்தில் சென்றுகொண்டிருக்க கண்ணிவெடி வெடித்தது. ட்ரக் அவருக்கு மிகக் கிட்ட கையில் எட்டிப்பிடிக்குமாப் போல் துரத்தில் பிரேக் போட்டதால் குலுங்கி நிற்க தான் எப் போதும் உடன் வைத்திருக்கும் அவருடைய ஜி3 வெடிக்கத் தொடங்கியது.

ட்ரக்கின் இருக்கையில் இருந்து இராணுவத்தினர் எழுந்தும் எழாததுமான நிலையில் தம்பியின் ஜி3 வெடிக்கத் தொடங்கியது. ஜி3 யிலிருந்து புறப்பட்ட சூடான ரவைகள் தாக்கு தலுக்குத் தயாராக எழுந்த இராணுவத்தினரை வரிசையாக விழுத்தத்தொடங்கியது.

சற்றும் எதிர்பாரமல் ஏற்பட்ட இத்திருப்பம் தம்பியை ஆபத்தின் உச்ச எல்லைக்குள் சிக்கவைத்துவிட்டது.

ஆனால், இந்த எதிர்பாராத திருப்பமே இப்போரின் முழுவெற் றிக்கு வழி அமைத்தது எனலாம். மிகத் துரிதமாகவும் குறிதவ றாமலும் துப்பாக்கியை கையாள்வதில் முதன்னமையாளராகத் திகழும் தம்பியிடம் ட்ரக்கில் வந்த 9 இராணுவத்தினரும் சிக்கியதே எமது முழு வெற்றிக்கு வழி கோலியது.

ட்ரக் மிகக் கிட்ட நிற்பதால் இலகுவாக தம்பியால் அவர்களைச் சுடமுடிகிறது. வெடியன் அதிர்வில் தெரு விளக்குகள் அணைந்துவிட்ட பொழுதிலும் மிகக் கிட்டேயிருப்பதால் ஒவ்வொருவராகக் குறிவைத்துச் சுட்டார். ஆனால் மிக அபாயகரமான நிலை அவருக்கு. இராணுவத்தினரைப் பொறுத்தவரையில் தம்பி மிகக் கிட்டே நிற்கிறார். எதிர்பாராமல் இத்தாக்குதலில் மிக அபாயத்தின் எல்லையில் தம்பிதான் நிற்கிறார். ஆனால் தனது ஆளுமையால், ஆற்றலால் வரிசையாக இராணுவத்தினரை விழுத்தி வந்த போதிலும் இரண்டு சாதுரியமான இராணுவத்தினர் ட்றக்கிலிருந்து கீழே சில்லுக்குள் புகுந்துகொண்டு, மறைந்திருந்து தமது தாக்குதலை ஆரம்பித்தார்கள். தம்பி நின்ற சுவரில் வேட்டுக்கள் பட்டுத் தெறித்துக்கொண்டிருந்தன. இத்துடன் ட்றக்கின் முன்புறத்தில் இருந்தவர்களும் கீழே பாய எத்தனித்தனர். இதை நோக்கிய தம்பியின் ஜி3 இவர்களையும் நோக்கி முழங்குகிறது.

இதிலே மிகவும் சங்கடம் என்னவென்றால் தம்பிக்கு உதவிக்கு எவரும் இல்லை நாம் எமது திட்டத்தின் படி ஜீப்பை முன்னே விட்டு ட்ரக் வண்டிக்கு கண்ணிவெடித் தாக்குதல் செய்வதாக இருந்ததோம். அத்திட்டத்தின்படி தம்பியை மிகப் பின்னுக்கு வைத்திருந்தோம். ஆனால் இப்போ தனியாகவே ட்றக்கை சமாளிக்க வேண்டிய நிலைக்கு தம்பி தள்ளப்பட்டு விட்டார். இதே நேரம் ஜீப்பை நோக்கி சுட்டுக்கொண்டிருந்த விக்ரர் தனக்கு 20 யார் பின்னே ட்ரக் நிற்பதையும் அதிலிருந்து துப்பாக் கிகள் சடசடப்பதையும் அவதானித்தான். தன் இயந்திரத் துப்பாக்கியை ட்றக்கை நோக்கி திருப்பினான். ட்றக்கின் முன் கண்ணாடிகள் சிதறுகின்றன. கண்ணாடிக்கு குறுக்காக ஓர் நீளவரிசையாகச் சுட்டான்.

அப்பொதுதான் சாரதி இறந்திருக்க வேண்டும். நாம் பின்பு பார்த்தபோது தனது இருக்கையிலேயே ஸ்ரேறிங்கில் சாய்ந்து வாயால் இரத்தம் கக்கியபடி உயிரை விட்டிருந்தான்.


விக்ரரின் இடத்திலிருந்து சற்று முன்னோக்கி எதிரில் இருந்த ஒழுங்கையிலிருந்து "பசீர் காக்கா" றிப்பீட்டரால் ஜீப்பை நோக்கிச் சுட்டுக்கொண்டிருந்தார். றிப்பீட்டரில் தோட்டாக்கள் முடியும் போது அதை மாற்றித் திருப்பித் தாக்கும் படி செல்லி உற்சாக மூட்டிக் கொண்டிருந்தார் காக்காவின் அருகிலிருந்த அப்பையா அண்ணை. அப்போழுது ஒழுங்கையை நோக்கி ஒருவன் S.M.G உடன் ஓடி வந்தான். "சுடு" என்ற அப்பையா அண்ணை உடனே "கவனம் எங்கட பெடியளோ தெரியாது பார்த்துச் சுடு" என்றார். றிப்பீட்டர் சத்தம் ஓய வந்தவன் பிணமாகச் சரிந்தான். அவனது S.M.Gயை அப்பையா அண்ணை ஓடிவந்து எடுத்துக்கொண்டார். இவனே ரோந்துப் பிரிவுக்கு தலைமை தாங்கிய லெப்ரினன்ட் என்று பின்னர் தெரிந்து கொண்டோம். அவனது விசேட இராணுவப் பட்டிகள் அதை உறுதிப்படுத்தின.

இதே நேரம் தம்பி தனியே நிற்பதை உணர்ந்து ரஞ்சனையும் இன்னொரு போரளியையும் "தம்பியிடம் ஓடு" என்று துரத் தினேன். அவர்கள் அருகிலுள்ள வீடுகளால் பாய்ந்து தம்பியை நோக்கிச் சென்றனர்.


ஆனால் ரஞ்சனும் சக போராளியும் தம்பியை நோக்கி சென் றடைந்த போது ட்றக்கிலிருந்த அனைத்து துப்பாக்கிகளையும் தம்பியின் தனி ஒரு ஜி3 ஓயவைத்துவிட்டது.

சாதாரணமாக எவரும் நம்புதற்கரிய இவ்வீரச்செயலை முடித்து விட்டு அமைதியாக வீட்டின் அருகேயுள்ள மாமரத்தின் கீழிருந்து முடிந்த ரவைக்கூட்டிற்கு ரவைகளை நிரப்பிக் கொண்டிருந்தார் தம்பி.

மதிலேறிக்குதித்த ரஞ்சனும் மற்றைய போரளியும் ஆயுதத் தோடு ஒரு நபர் இருப்பதைக் கண்டு ஆயுதத்தைத் தயார் நிலைக்குக் கொண்டுவந்து "யாரது" என்று முன்னே வந்தனர்.



"அது நான்ராப்பா" என்றவாறு ரஞ்சனை அடையாளம் கண்ட தம்பி இங்கே எல்லாம் முடிந்தது. உங்கடை பக்கம் எப்படி என்றார். "அண்ணை எங்கடை பக்கம் பிரச்சினையில்லை" என்றார் ரஞ்சன்.



"இங்கையும் எல்லாம் முடிந்து விட்டது, ஆனால், எனக்கு சற்று முன்பாக எதிரேயிருந்த புலேந்திரனையும் சந்தோசத்தையும் காணவில்லை, வா பார்ப்போம" என்றவாறு தன் பிரியத் திற்குரிய ஜி3யை தூக்கிக்கொண்டு விரைந்தார் தம்பி.

மதிலேறிக் குதிப்பதற்குமுன் ரஞ்சனுடன் வந்த போராளி தம் பியின் அனுமதியைப் பெற்று எதற்கும் முன்னெச செரிக்கையாக ஓர் குண்டை வீசினான். குண்டு ட்ரக்கின் கீழ் விழுந்து வெடித்து எரிபொருள் தாங்கியை உடைத்தது.

இதன்பின் மதிலேறிக் குதித்து றோட்டைத் தாண்டி புலேந்திரன் சந்தோசத்தின் இடத்தையடைந்தான். அங்கு புலேந்திரன் சந் தோசத்தைக் காணவில்லை. "எதற்கும் முதலில் இறந்தவர் களின் ஆயுதங்களைச் சேகரியுங்கள்" எனக் கட்டளையிட்டார் தம்பி. மதிலேறி றோட்டில் குதிக்க ஆயத்தமான ரஞ்சனுடன் வந்த மற்ற வீரன் தம்பியைப் பார்த்து "அண்ணா அவன் அனுங்குகிறான்". மீண்டும் ஒருமுறை முழங்கிய ஜி3 அவனின் அனுங்கலுக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

இதன் பின் ட்ரக்கை நெருங்கி ஆயுதங்களை சேகரிக்கத் தொடங்கினர். தம்பி எதற்கும் என்று வெளியே கிடந்த இராணுவத்தினரின் தலையில் இறுதி அத்தியாயத்தை ஜி3ஆல் எழுதிவைத்தார். புயின் வேகம் மண்டையோடுகளைப் பிளக்க வைத்தது.

இதே நேரம் பல்கலைக்கழக பின் வீதியால் ஓடிய ஓர் இராணுவ வீரனை இன்னோர் போரளி துரத்திச் சென்று சுட்டான். ஜீப்பை முற்றாக முடித்துவிட்டு பொன்னம்மானும் நானும் என்னுடைய போரளிகளும் ட்ரக்கை நோக்கி நடு றோட்டால் ஓடினோம்.

"கரையால் வாருங்கள்" என்ற குரல் எம்மை வரவேற்றது. எல்லோரும் தம்பியை சூழ்ந்துகொண்டு மகிழ்சி ஆரவாரம் செய்து கொண்டு ஆயுதங்களைப் பொறுக்கத் தொடங்கினோம். இதற்கிடையில் பொன்னம்மான் அதீத மகிழ்ச்சியுடன் இறந்து

கிடந்த இராணுவத்தினரின் ஹெல்மெட்டை தலையில் போட்டுக் கொண்டு ட்ரக்கின் கீழே இறந்து கிடந்த இராணுவ வீரர்களினது ஆயுதங்களை தேடி எடுத்துக்கொண்டான்.

இத் தாக்குதல் இரவு நேரமாதலால் எம்மையும் இராணுவத் தினரையும் பேறுபிரிக்க நாம் ஹெல்மெட்டைத் தான் குறி யீடாகப் பாவித்தோம். எனவே ஹெல்மெட்டுடன் ஓர் உருவம் நகர்வதைக்கண்ட தம்பி உடனடியாக துப்பாக்கியை தயார் நிலைக்கு கொண்டு வந்து "யாரது" என்று வினவ அம்மான் "அது நான் தம்பி" என்றவாறு தனது தவறை உணர்ந்து ஹெல்மெட்டைக் கழற்றினார்.

பொன்னம்மானை செல்லமாக கண்டித்தவாறு எல்லாரையும் சரிபார்க்குமாறு தம்பி பணிக்க "அம்மானைக் காணவில்லை" என்று விக்ரர் கத்தினான். விக்ரரும் புலேந்திரனும் அம்மான் நின்ற கடையின் மேல் ஏறினர். "டேய் அம்மானுக்கு வெடி விழுந்திட்டுது" என்ற விக்ரரின் குரல் எங்கும் எதிரேலித்தது. எல்லோரும் அங்கே ஓட நான் வானை எடுத்து வந்தேன்.

வானில் அம்மானை ஏற்றும்போது அம்மானின் உடல் குளிர்ந்துவிட்டது.

லிங்கம் இறுதியாக இராணுவத்தினரின் தலையில் போட றெஜி ஆயுதங்களைப் பொறுக்கினான்.

வான் புறப்படத் தொடங்க மழையும் மெதுவாகத் தன் கரங்களால் வாழ்த்துத் தெரிவித்தது. எமக்கு செல்லக்கிளி அம்மானின் மரணத்திற்காக இடியும் மின்னலும் சேர்ந்து இறுதி வணக்கம் செலுத்த வான் எமது முகாம் நோக்கி பறந்தது.

- 05.1987 களத்தில் - கேணல் கிட்டு

[redacted]



காணாமல்போனவர்களின் உறவுகளுடன் ஒருநாள் போராடுங்கள்!

- நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன்-

ஏப்பிரல் - 17. 2022

காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களுடன் ஒருநாள் போராடுமாறு சிங்கள இளைஞர்களுடன் இணைந்து போராட செல்லும் தமிழ் இளைஞர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார்..

தர்மபுரம் பகுதியில் கண்டாவளை பிரதேச பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போதே அவர் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், “சிங்கள இளைஞர்களுடன் போராட்டத்திற்கு செல்ல தயாராகும் இளைஞர்களிடம் நான் பகிரங்கமாக கேட்கிறேன். இத்தனை நாட்களாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தெருக்களில் போராடிக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்காக ஒரு நாள் ஆயிரம் இளைஞர்கள் கிளிநொச்சியில் திரளுங்கள். அதற்கு எங்கள் இளைஞர்கள் தயாரில்லை.

கைகளால் ஒப்படைக்கப்பட்ட கணவன்மார், கைகளால் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகள், கைகளால் ஒப்படைக்கப்பட்ட பச்சிளம் குழந்தைகள், மஹிந்த ராஜபக்ஷவின் மனைவி சிராந்தி ராஜபக்ஷவிடம் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகள் யாருமே இல்லை. எங்கு என்றும் தெரியாது. இவர்களை தேடியவாறு இருக்கும் தாய்மார்களுடன் ஆயிரம் இளைஞர்கள் ஒன்று சேர்ந்து போராடுங்கள் என உங்களைப் பகிரங்கமாக கேட்கிறேன்.

சிங்கள இளைஞர்களின் போராட்டத்திற்கு குரல் கொடுக்க வேண்டும் என்று தயாராகிக்கொண்டிருக்கும் ஜனநாயகத்தின் இளைஞர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டம் பற்றி பேசினால் அந்த இளைஞர்களின் பாதங்களுக்கு பூப்போட்டு வணங்கவும் தயாராக இருக்கிறோம்.

நாங்கள் போராடியது எங்களுடைய உரிமைகளுக்காக, இழந்துபோன இறைமைகளை மீட்டெடுப்பதற்காக, எங்களுடைய மண்ணில் சுயாட்சி முறையிலான உரிமையை வென்றெடுக்க நாங்கள் போராடுகிறோம். இது முற்றுமுழுதான உரிமைக்கான போராட்டம். உயிர் வாழ்தலுக்கான போராட்டம். அடுத்த பரம்பரைக்கான நிம்மதிக்கான போராட்டம்தான் நாம் இந்த மண்ணில் நடாத்துகிறோம்.

நாங்கள் எரிபொருளுக்காக போராடவில்லை. எரிவாயுவிற்காக போராடவில்லை. நாங்கள் மின்சாரத்திற்காக போராடவில்லை. உணவிற்காக நாங்கள் போராடவில்லை. இவை இல்லாமால் நாங்கள் வாழ்ந்தவர்கள். நாங்கள் யாருடைய போராட்டத்தையும் கொச்சைப்படுத்தவில்லை. நீங்கள் போராடுவது ஒரு கொடுங்கோலனுக்கு



எதிராக, இனப்படுகொலையாளிக்கு எதிராக, மஹிந்த ராஜபக்ஷ, கோட்டபாய ராஜபக்ஷ என்ற இருவரும் இந்த மண்ணில் தமிழ்த் தேசிய இனத்தை படுகொலை செய்தவர்கள். அவர்களுக்கெதிராக போராடுகிறீர்கள்.

நாம் உங்களுக்கு முதலே இவர்களுக்கு எதிராக 2019ஆம் ஆண்டிலேயே போராடியிருக்கிறோம்.

கடந்த காலங்களில் சிங்கள மக்கள் போராடியபோது தமிழர்கள் ஆதரவு நல்கியிருக்கிறார்கள். அவர்கள் தங்களின் பிரச்சினை தீர்ந்ததும் தமிழர்களுக்கு எதிராக மாறியிருக்கிற பல சம்பவங்கள் வரலாறுகளில் நடைபெற்றிருக்கிறது” என்றும் அவர் மேலும் தெரிவித்தார்

மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் உயிர்த்த ஞாயிறு நாள் விசேட ஆராதனை!

ஏப்பிரல் 17, 2022



மட்டக்களப்பு மென்ரசா வீதியிலுள்ள சீயோன் தேவலாயத்தில் உயிர்த்த ஞாயிறு விசேட ஆராதனை இன்று ஞாயிற்றுக்கிழமை (17) போதகர் ரொசான் மகேசன் தலைமையில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு திருகோணமலை பிரதான வீதியிலுள்ள மென்ரசா வீதியில் புதிதாக சீயோன் தேவாலயம் அமைக்கப்பட்டு அங்கு இன்று உயிர்த்த ஞாயிறு விசேட ஆராதனையில் நூற்றுக்கணக்கான கிறிஸ்தவ மக்கள் கலந்து கொண்டு ஆராதரனையில் ஈடுபட்டனர்.

கடந்த 2019ம் ஆண்டு ஏப்பிரல் 21 ம் திகதி சீயோன் தேவலாயத்தில் உயித்த ஞாயிறு தினத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பின் ஸாரான் காசீம் தலைமையிலான தற்கொலை குண்டு தாக்குதலில் 31 பேர் உயிரிழந்ததுடன் 93 பேர் படுகாயமடைந்ததுடன் தேவலாயம் பாதிப்படைந்து இன்று 3 வருடங்கள் நிறைவடைந்துள்ளதுடன் குண்டுவெடிப்பில் உயிரிழந்தவர்களுக்கு சாந்திவேண்டி ஆராதரனையில் ஈடுபட்டனர்.



இதேவேளை இந்த உயிர்த்த ஞாயிறு ஆராதரனையிட்டு மாவட்டத்திலுள்ள அனைத்து கிறிஸ்தவ தேவாலயங்கள் பொலிசார் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது

இரம்புக்கனையில் இடம்பெற்றது உட்பட அனைத்து படுகொலைகளிற்கும் நீதி கோரி நாடாளுமன்ற சுற்றுவட்டத்தில் போராட்டம்! -20.04.2022







தமிழ் தரப்புக்களால் நடத்தப்படும் கூட்டங்களில் பங்கேற்கமாட்டோம்!

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

ஏப்பிரல் 16, 2022

தமிழ் தரப்புக்களால் நடத்தப்படும் இரண்டு கூட்டங்களுக்கு எமக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் அதில் பங்கேற்க மாட்டோம் என காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர் கள் தெரிவித்துள்ளனர்.

இன்று வவுனியா ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.
தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,
இரண்டு தமிழ் தரப்புகளால் இரண்டு கூட்டங்களில் பங் கேற்க எங்களுக்கு அழைப்பு வந்தது. இந்த நிகழ்ச்சிகளில் பங்கேற்க மாட்டோம் என முடிவு செய்துள்ளோம்.

இந்த இரண்டு தரப்பும் தமிழர்களின் அரசியல் ஆசையை தீர்க்க அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளை அழைத்து உதவி கோர முடிவு செய்தால், நாங்கள் எதிர்கால கூட்டத்தில் பங்கேற்போம்.

கடந்த 74 வருடங்களாக சிங்களவர்களுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடுவது வீண் வேலை என வரலாறு கூறுகிறது. இதன் அடிப்படையிலேயே வட்டுக்கோட்டைத் தீர்மானம் எடுக்கப்பட்டது. ஆட்சி மாற்றத்திற்காக சிங்களவர்களுடன் ஒப்பந்தம் செய்வது செய்யும் துரோகமாகும்.

சிங்களவர்களுடன் ஒப்பந்தம் போடுவது சர்வதேச அரங் கில் தமிழர்களை பலவீனப்படுத்தும். தமிழர்களும் சிங்கள வர்களும் ஒன்றிணைந்து செயற்பட முடியும் என்பதை இது உணர்த்தும். இந்த வகையான பார்வை அமெரிக் காவையும் ஐரோப்பிய ஒன்றியத்தையும் அவர்களின் எதிர்கால மத்தியஸ்த நிலையை புறக்கணிக்க வைக்கும்.

மேலும் தமிழ் இளைஞர்கள் சிங்கள இளைஞர்களுடன் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவது தமிழர்களை மேலும் பலவீனப்படுத்தும். தமிழ் இளைஞர்களை பயங்கரவாத சட்டத்தின் கீழ் கைது செய்ய இது வழி வகுக்கும்.மேலும் அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் தற்போது ஜெனிவாவில் உள்ள ஐ.நா தீர்மானத்தை வாபஸ் பெறுவது பற்றி சிந்திக்கலாம்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலை தொடரட்டும். இலங்கை நிதி ரீதியாக உடைந்தால் அது அவர்களை நில அபகரிப்பு வடக்கு கிழக்கில் இலங்கை பௌத்த சின்னங்கள் கட்டுதல் மற்றும் சிங்கள இராணுவத்தை வைத்திருப்பதை நிறுத்தச் செய்யும். இவை நமது தாயகத்தை பொருளாதார மந்தநிலையி லிருந்தும்இ நமது இளைஞர்களை குற்றச்செயல்கள் மற்றும்.

புத்திஜீவிகள் அமைப்பொன்றும் அரசியல் கட்சி ஒன்றும் எம்மை அழைத்துள்ளனர். இவ் இரு அமைப்புகளும் சிங்கள தரப்போடு ஒப்பந்தம் செய்வது தமிழினத்துக்கு செய்கின்ற துரோகம் என்று நாங்கள் கூறுகின்றோம்.


அதாவது இந்திய அரசிற்கு கடிதம் அனுப்பிய சிவாஜி லிங்கம் தரப்பும் மற்றும் செல்வராசா கஜேந்திரன் தரப் புமே எம்மை அழைத்துள்ளனர்.

மே 18 தொடர்பாகவும் கலந்துரையாடுவதற்கு அழைத் தனர். நாங்கள் கடந்த முறை முக்கிய நிபந்தனைகளை முன்வைத்திருந்தோம். அதன் அடிப்படையில் இத்தரப் பினர் எங்களை அழைப்பது, அரசியல் ரீதியாகவும் செயற் பாட்டு ரீதியாகவும் அதிர்ப்தி அடைந்திருக்கும் மக்கள் மத் தியில் தங்களை பாதுகாப்பதே அவர்களது நோக்கமாகும்.

அவர்கள் தமிழ் மக்களிற்கு ஒரு கொள்கை ரீதியாக உண்மையான நிலைப்பாட்டை அறிவித்த பின் எம்மை சந்திப்பது பொறுத்தமாக இருக்கும். ஒற்றை ஆட்சியை எதிர்க்கும் முகமாகவே சிலதரப்புகளுடன் இணைந்து செயற்பட்டோம். அவர்கள் எமது கோரிக்கையை ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்பியிருந்தோம். ஆனால் தற் போது அவர்கள்ளது கொள்கையை. தமிழ் மக்களுக்கு பகரங்கமாக அறிவிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. சர்வதேச இராஜதந்திர சூழலுக்கும் அவர்களது கொள் கையை அறிவிக்க வேண்டியுள்ளது. அதனாலேயே இந்த

மட்டு நாவலடியில் அன்னை பூபதியின் சமாதியில் வணக்கம் செலுத்த சென்ற அவரது பிள்ளைகளை வணக்கம் செய்யவிடாது தடுத்து நிறுத்திய சிங்கள பொலிசார்

ஏப்பிரல் 19, 2022



மட்டக்களப்பு நாவலடியில் அமைந்துள்ள அன்னை பூபதியின் சமாதிக்கு அஞ்சலி செலுத்த சென்ற தங்களை விடுதலைப்புலிகளிற்கு அஞ்சலி செலுத்துவதாக தெரிவித்து பொலிஸார் தடுத்துநிறுத்திவிட்டனர் என அன்னை பூபதியின் மகள் லோகேஸ்வரன் சாந்தி தெரிவித்துள்ளார்.

அன்னை பூபதியின் 34 நினைவுதினத்தை முன்னிட்டு அஞ்சலி செலுத்தசென்றவேளையே தங்களை பொலிஸார் தடுத்து நிறுத்தியுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பு சீலாமுனை பகுதியில் அமைந்துள்ள அன்னை பூபதியின் மகளின் வீட்டில் அவரது குடும்பத் தினர் அன்னை பூபதியின் திருவுருவபடத்திற்கு மலர் தூவி இரண்டுநிமிட அங்சலி செலுத்தினர். இதனை தொடர்ந்து ஊடகங்களுக்கு பூபதியின் மகள் கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

இன்று எனது தாயாரான அன்னை பூபதியம்மாவின் 34 வது ஆண்டு நினைவு நாள் அதனையிட்டு நாவலடியில் அமைந்துள்ள அவரது சமாதிக்கு அஞ்சலி செலுத்துவதற்கு எனது குடும்பத்தினர் சென்றோம் அப்போது அங்கு இருந்த பொலிசார் எங்களை விசாரித்துவிட்டு நீதிமன்ற உத்தரவு என ஒரு பேப்பரை வாசித்துவிட்டு அவர் விடுலைப் புலிகளுக்காக உண்ணாவிரம் இருந்துள்ளர் எவரும் அஞ்சலி செலுத்த முடியாது என பொலிசார் தெரிவித்து அங்கு அஞ்சலி செலுத்த செல்லவிடாது தடுத்தனர்.

எமது தாயார் அப்போது மட்டு அம்பாறை அன்னையர் முன்னணி சார்பில் அமைதியான முறையில் இந்திய இராணுவத்துக்கு எதிராக உண்ணாவிரம் இருந்தார் எனவும் என பொலிசாருக்கு எடுத்துரைத்தேன் இருந்த போதும் எங்கள் மூன்று பேரையும் அஞ்சலி செலுத்த விடாது பொலிசார் தடுத்ததையடுத்து அங்கிருந்து வெளி யேறி வீட்டிற்கு வந்துள்ளோம்.

கடந்த 3 வருடங்களுக்கு முதல் காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அப்போது எனது தாயாருக்கு சென்று அஞ்சலி செலுத்தவேண்டும் அதற்கு தடை இல்லை எனவும் அவருடைய அஞ்சலியை தொடர்ந்து செய்துவரவேண்டும் அதற்கான உரிமை இருக்கின்றது என அவர் தெரிவித்தார். ஆனதல் இப்போது பொலிசார் தடுக்கின்றனர்.

எனவே எனதாயாருக்கு அஞ்சலி செலுத்த பிள்ளைகளுக்கு உரிமை இல்லையா? எனவே இதற்கு நடவடிக்கை எடுத்துதரவேண்டும் அதேவேளை அன்னை பூபதியை வைத்து அவரின் பிள்ளைகளுக்கு உதவுவதாக எனது உறவினர் உட்பட சிலர் வெளிநாடுகளில் பணம் வசூலித்து மோசடி செய்கின்றனர்.

எங்களுக்கு எனது சகோதரங்களுக்கோ ஒரு உதவியும் தரப்படவில்லை அதேவேளை அரசியல் வாதிகள் உட்பட பலர் வந்து அன்னை பூபதியின் சமாதியை அபிவிருத்தி செய்வோம் பூங்கா அமைப்போம் சிலைவைப்போம் என தெரிவித்து வாக்குறுதி தந்துவிட்டு சென்றவர்கள் சென் றவர்கள் தான்.

எனவே இவ்வாறான நிலையில் இன்று நாங்கள் சென்று அஞ்சலி செலுத்துவதற்கு பொலிசார் தடுத்து நிறுத்தியது மிகவும் மனவேதனையான விடையம் எனவே எதிர் வரும் காலத்தில் அன்னை பூபதியின் பிள்ளைகள் உறவினர்கள் அஞ்சலி செலுத்துவதற்காவது அனுமதியை பெற்றுத்தர அனைவரும் உதவவேண்டும் என அவர் கோரிக்கைவிடுத்துள்ளார்.







மட்டக்களப்பில் அன்னை பூபதியின் 34வது ஆண்டு நினைவேந்தலுக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 11 பேருக்கு தடை உத்தரவு

ஏப்பிரல் 18, 2022

மட்டக்களப்பு நாவலடியில் அமைந்துள்ள தியாகதீபம் அன்னை பூபதியின் சமாதியில் 19 ம் திகதி செவ்வாய் கிழமை 34 வது ஆண்டு நினைவேந்தல் செய்வதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப பினர்கள் உட்பட 11 பேருக்கு எதிராக திங்கட்கிழமை (18) நீதிமன்றம் தடை உத்தரவு ஒன்றை பிறப்பித்து கட்டளை யிட்டுள்ளதாக காத்தான்குடி பொலிசார் தெரிவித்தனர்.

அன்னை பூபதியின் தினம் நாளை அவரது நாவலடியில் அமைந்துள்ள சமாதியில் இடம்பெறவுள்ளது இந்த நிலை யில் பாராளுமன்ற உறப்பினர்களான இராசமாணிக்கம் சாணக்கியன் கோவிந்தன் கருணாகரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஞானமுத்து சிறிநேசன் சீனித் தம் பி யோகேஸ் வரன் பாக் கியசெல் வன் அரிநேந்திரன்.

மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தியாகராசா சரவணபவன் முன்னாள் கிழக்கு மாகாண சபை பிரதி தவிசாளர் பிரசன்னா என்றழைக்கப்படும் இந்திரகுமார் நித்தியானந்தன் தமிழரசுகட்சி இளைஞர் அணித் தலைவர் லோகநாதன் திவாகரன் சீலன் என்றழைக் கப்படும் சபாரெத்தினம் சிவயோகநாதன் கிருஸ்ண பிள்ளை செயோன் தமிழ் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் குணராசா குணசேகரம் ஆகியோர் தலை மையில் நினைவேந்தல் இடம்பெறவுள்ளதாகவும். காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சுமிந்த நயனசிறி மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் குறித்த 11 பேரும் 19 ம் திகதி நடக்கவிருக்கும் இந்த நினைவேந்தலில் செய்வதற்கு தடை உத்தரவு கோரியதையடுத்து நீதிமன்றம் இவர்களுக்கு இந்த நிகழ்வில் பங்குபற்று வதற்கு தடை உத்தரவு பிறப்பித்து கட்டளை பிறப்பித் துள்ளா.

உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு 3ம் ஆண்டு நினைவேந்தல் யாழ் பல்கலைக்கழகத்தில் மாணவர்களால் வணக்கம் செலுத்தப்பட்டது







சர்வதேச ஐக்கிய மகளிர் கூட்டமைப்பின் (கனடா) முன்னெடுப்பில் அன்புநெறி (USA) நிதி உதவியுடன் கஞ்சிகுடியாறு வாழ்வாதார திட்டம்

ஏப்பிரல் 26, 2022

அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் பிரதேசத்தில் கஞ்சிக்குடியாறு கிராமத்தில் மீனவ குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக, கஞ்சிக் குடியாறு கிராமிய கூட்டுறவு சங்கம் ஊடாக வள்ளங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு 26.04.2022, அன்று மிகச்சிறப்பாக நடை பெற்றது.

இந்நிகழ்வு திருக்கோவில் பிரதேச செயலக செயலாளர் திரு கஜேந்திரன் அவர்களின் தலைமையிலும் , கிராம சேவகர் திரு நிரோஷன் அவர்களின் ஒருங்கிணைப் பிலும் நடந்தேறியது.

இந்த நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக திருக்கோவில் பிரதேச செயலக செயலாளர் திரு கஜேந்திரன், உதவி பிரதேச செயலாளர் சதிசேகரன், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு விஜயன் ,மீன்வளர்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.ரவிக்குமார்,கஞ்சிக்குடியாறு மீனவ சங்க தலைவர் திரு. மகேந்திரன் , கிராம சேவகர் திரு. நிரோஷன் மற்றும் கஞ்சிக்குடியாறு கிராமிய கூட்டுறவு சங்கத்தலைவர் குகதீபன் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இவர்களுடன் கனடாவில் இருந்து சர்வதேச ஐக்கிய மகளிர் கூட்டமைப்பின் சர்வதேச பணிப்பாளர் திருமதி சுபாங்கி அவர்களும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தது குறிப்பிடத்தக்கது.

இந்த திட்டம் சர்வதேச ஐக்கிய மகளிர் கூட்டமைப்பின் , அன்புநெறி (USA) நிதி உதவியுடனும் Assist RR. IMHO USA, இணை அனுசரணையுடனும் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

இந்நிகழ்வில் கஞ்சிகுடியாறு கிராமிய கூட்டுறவு சங்கம் உருவாக்கப்பட்டதன் அவசியம் தொடர்பிலும், கிராம மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து விவசாயம் மற்றும் மீன் வளங்களை பயன்படுத்தி கிராம முன்னேற்றத்தை நீண்ட கால நோக்கில் திட்டங்களை வகுத்து அபிவிருத்தி பணியில் ஈடுபட வேண்டும் எனவும் திருக்கோவில் பிரதேச செயலக செயலாளர் திரு கஜேந்திரன் அவர்களால் கருத்துக்கள் முன் வைக்கப்பட்டது. கஞ்சிகுடியாறு கிராமிய கூட்டுறவு சங்கம் ஊடாக பல கிராம அபிவிருத்தி



பணிகள் மேற்குறிப்பிடப்பட்ட அமைப்புக்களால் கிராம மக்கள் ஆதரவுடன் முன்னெடுக்கப்பட உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த கிராமத்தில் 89 மீனவர்கள் நன்னீர் மீன்பிடியை வாழ்வாதாரமாக கொண்ட குடும்பங்களாக காணப் படுகின்றனர். இவர்களின் வாழ்வாதாரத்தை முன் னேற்றும் முகமாக கடந்த நவம்பர் மாதம் 2020, ல் குளத்தில் மீன்குஞ்சுகளை விடும் திட்டம் மேற்குறிப் பிடப்பட்ட இதே அமைப்புக்களால் ஆரம்பிக்கப்பட் டிருந்தது. அவர்களில் இருபது மீனவர்கள் சொந்த மீன்பிடி வள்ளங்கள் இன்றி தமது நாளாந்த தொழிலை மேற் கொள்ள மிகவும் சிரமத்தை எதிர்நோக்கியதை கருத்தில் கொண்டு அவர்களுக்கு சொந்தமாக மீன்பிடி வள்ளங்கள் வழங்க முயற்சி எடுக்கப்பட்டிருந்தது இங்கு குறிப்பிடத் தக்கது.

திருகோணமலை மூதூர் 64ம் கட்டை இராஜவந்தான் மலைக்குச் சென்ற தமிழர்களை தடுத்து அச்சுறுதுதிய சிங்கள பௌத்த பிக்கு மற்றும் சிறீலங்கா இராணுவம்!

ஏப்பிரல் 23, 2022

தமிழர்களின் தொல்பொருள் அடையாளங்கள் பல உள்ள திருகோணமலை மூதூர் 64ம் கட்டையில் உள்ள இராஜவந்தான் மலைக்கு இன்று காலை தமிழ் மக்கள் மற்றும் சைவ மதகுருக்கள் வழிபாடுகளில் ஈடுபடுவதற் காகச் சென்ற போது பௌத்த பிக்கு ஒருவர் வீதியை மறித்து மக்களை தொடர்ந்து செல்லவிடாது தடுத்துள்ளார்.

அத்துடன் அங்கு சென்ற தமிழர்களை இனவாதத்தைத் தூண்டும் விதத்தில் மிகவும் கீழ்த்தரமாக பேசியும் அவர்களின் தொலைபேசிகளை பறித்து எறிந்தும் அடாவடியில் ஈடுபட்டுள்ளார்.

இதன் போது அங்கு நின்ற பொலிஸார் மற்றும் புலனாய்வாளர்களும் மக்களை அச்சுறுத்தும் விதமாக புகைப்படங்களையும் எடுத்துள்ளனர்.

இந்த இராஜவந்தான் மலையின் கீழ் சகாயபுரம் (வெட்டுக் காட்டுச்சேனை) மாணிக்கப்பிள்ளையார் ஆலயம் அமைந்துள்ளது. அப்பிரதேச மற்றும் அயல்ப்பிரதேச மக்கள் மலையின் மீது சென்று வழிபட்டுவந்த நிலையில் மூன்று வருடங்களிற்கு முன்னர் மலையின் மேல் இருந்த வழிபாட்டிடம் அழிக்கப்பட்டு அங்கு பௌத்த சின்னங்களை நிறுவும் வேலைகள் நடைபெற்று வருகின்றதெனவும் தெரியவருகின்றது.











தமிழர்களின் நீண்டகால கேள்விக்கு தெற்கில் இடம்பெறும் போராட்டங்களில் பதிலேதும் உண்டா?

தமிழ் சிவில் சமூக அமையம்

ஏப்பிரல் 21, 2022

இன்று தெற்கில் போராடிக் கொண்டிருக்கும் பொதுமக்கள், இளைஞர்களுக்கு எம் தோழமையைத் தெரிவிக்க விரும் புகின்றோம். உறுதியாகத் தெரிவிக்கின்றோம். ஆனால் நீங்கள் இன்று போராடப் புறப்பட்டதற்கான காரணங் களான பொருளாதார விடயங்கள் எம்மையும் தாக்குகின் றனவே. ஆனாலும், எம் தோள்களை உங்களுடன் இணைப்பதில் உள்ள மனத்தடைக்கான காரணம் தமிழர்களாகிய எம் மனதில் எழுந்து நிற்கும் அச்சமும், களைப்பும் தருகின்ற கேள்வியே. ஒரு தேசமாக எமது இருப்பைப் பாதுகாத்துக் கொள்வது தொடர்பான தமிர் களின் நீண்டகாலக் கேள்விக்கு தங்களிடமாவது பதி லேதும் உண்டா? என தமிழ் சிவில் சமூக அமையம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் வினவியுள்ளது.

அண்மைய நாட்களில் தென்னிலங்கையில் இடம்பெற்று வரும் பொதுமக்கள் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவித் துக் கொள்ள விரும்பும் வகையில் தமிழ் சிவில் சமூக அமையத்தினால் இன்றைய தினம் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

காலி முகத்திடலில் இருந்து முன்வைக்கப்பட்ட முன் மொழிவுகளில் இன்றைய பொருளாதாரச் சிக்கல்களுக்கு உண்மையான அடிப்படைக் காரணமான சிங்கள பௌத்த மேலாதிக்க அபிலாசைகளுக்கு மாற்றீடுகள் முன்வைக்கப்படவில்லை. வெறுமனே முன்மொழியப் பட்டுள்ள ஆட்சி மாற்றம் தமிழருக்கு எதையும் தந்துவிடப் பொவதில்லை எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்த் சிவில் சமூக அமையத்தின் இணைப்பேச்சாளர் களான அருட்தந்தை வீ.யோகேஸ்வரன் மற்றும் பொ.ந.சிங்கம் ஆகியோரால் 'அண்மைய நாட்களில் தென்னிலங்கையில் முகிழ்த்து வரும் பொதுமக்கள் போராட்டங்களுக்கான ஆதரவைத் தமிழ் சிவில் சமூக அமையம் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றது' என்ற தலைப்பின் அடிப்படையில் 27 குறிப்புகளை உள்ளடக்கி இவ் ஊடக அறிக்கை வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதுதமிழர்களின் நீண்டகால கேள்விக்கு தெற்கில் இடம்பெறும் போராட்டங்களில் பதிலேதும் உண்டா?.

பொன்னாலை காணி அபகரிப்பு முயற்சி தடுத்து நிறுத்தம்!
26.04.20222






வீரவணக்கம்



பண்பின் உறைவிடம் லெப். கேணல் கலையழகன்

தலையுடன் பெயர்:- லெப்டினன்ட் கேணல் கலையழகன்

சொந்தப்பெயர்:- சிவபாதசுந்தரம் ஞானசீலன்

சொந்தமுகவரி:- யாழ்மாவட்டம்

மாவீரரானநாள்:- 18.04.2007

சம்பவம்:- முல்லை மாவட்டத்தில் ஏற்பட்ட தவறுதலான வெடி விபத்தின்போது

கனடிய செய்திகள்

உக்ரைனில் ரஷ்யாவின் நடவடிக்கைகளை இனப்படுகொலை என அழைப்பது முற்றிலும் சரி

கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ

ஏப்பிரல் 13, 2022

உக்ரைனில் ரஷ்யாவின் நடவடிக்கைகளை இனப்படு கொலை என அழைப்பது முற்றிலும் சரியானது என பிரதமர் ஜஸ்ரின் ரூடோ கூறினார். ரஷ்யாவின் நடவடிக் கையை இனப்படுகொலை என வகைப்படுத்துவதை பிரதமர் வரவேற்கிறார். போர்க்குற்றங்கள், பிற மனித உரிமை மீறல்கள் குறித்த பரவலான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இனப்படுகொலை என்ற வார்த்தை பயன்படுத்தப்படுவது முற்றிலும் சரியானது என ஜஸ்ரின் ரூடோ தெரிவித்தார்.



ஆனாலும் அதற்கு அதிகாரபூர்வ செயல்முறை இருப்பதாகக் கூறி, பிரதமர் இனப்படுகொலை என்ற வார்த்தையைப் பயன்படுத்தவிர்த்தார். ICC எனப்படும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் ரஷ்ய போர்க்குற்றங்கள் குறித்து விசாரிப்பது, ICCக்கு RCMP புலனாய்வாளர்களை அனுப்புவது உட்பட கடமைப்பட்ட அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது என பிரதமர் தெரிவித்தார். உக்ரைனில் நிகழ்வது ஒரு இனப்படுகொலையாக தன் பார்வைக்குத் தோன்றியதாக அமெரிக்க அதிபர் Joe Biden கூறியிருந்தார்.

ரஷ்யாவின் நடவடிக்கைகள் இனப்படுகொலைக்கான சர்வதேச தரத்தை எதிர்கொள்கிறதா என்பதை வழக்கறிஞர்கள் தீர்மானிக்க வேண்டும் என கனடிய, அமெரிக்கா தலைவர்கள் கூறினார்

கனடா ஒன்ராறியோ மாநில பொதுத் தேர்தல் ஜூன் 02, 2022

ஏப்பிரல் 21, 2022

ஒன்ராறியோ லிபரல் கட்சி இப்போது டக்ஃபோர்டின் முற்போக்கு கன்சர்வேடிவ் கட்சியை தாக்கும் தூரத்தில் இருப்பதால், வாக்குப்பதிவு நாள் நெருங்கி வருவதால் மாகாண தேர்தல் போட்டி இறுக்கமடைந்து வருகிறது, குளோபல் நியூஸ் நிகழ்ச்சிகளுக்காக பிரத்யேகமாக நடத்தப்பட்டபுதிய இப்சோஸ் (Ipsos) கருத்துக்கணிப்பு தெரிவிக்கிறது.

ஏப்ரல் 13 முதல் ஏப்ரல் 14 வரை நடத்தப்பட்ட கணக் கெடுப்பில், நாளை தேர்தல் நடத்தப்பட்டால், கன்சர்வேடிவ் கட்சி 35 சதவீத பொதுவாக்குகளைப் பெறும் என்று கண்டறியப்பட்டுள்ளது. ஸ்டீவன் டெல்டுகா தலைமை யிலான லிபரல் கட்சி 32 சதவீதத்தைப்பெறுவார்கள். ஆண்ட்ரியா ஹோர்வத்தலைமையிலான ஒன்டாரியோ



என்.டி.பி 23 சதவீத வாக்குகளை வெல்வார்கள் மற்றும் மைக்ஷ் ரைனர் தலைமையிலான பசுமைக்கட்சி ஐந்து சதவீதத்தைப்பெறும். புதிய புள்ளி விவரங்கள் லிபரல் மற்றும் கன்சர்வேடிவ் கட்சிகளுக்கு ஊக்கத்தை அளிக்கின்றன மற்றும் கன்சர்வேடிவ் மற்றும் என்.டி.பி இரண்டிற்கும் ஆதரவில் சிறிது சரிவைக் குறிக்கின்றன.

ஒன்ராறியோ லிபரல்களுக்கான ஆதரவு நான்கு புள்ளிகள் அதிகரித்தது, இப்சோஸ் கருத்துப்படி, கன்சர்வேடிவ் ஆதரவில் மூன்று புள்ளிகள் வீழ்ச்சி ஏற்பட்டது. என்.டி.பி ஒரு புள்ளியில் குறைந்துள்ளது மற்றும் பசுமை வாதிகள் ஒரு புள்ளியில் உயர்ந்துள்ளனர் என்று தரவு காட்டுகிறது.

ஐந்து சதவீதமக்கள் வேறு கட்சிக்கு வாக்களிப்பார்கள் என்றும், 14 சதவீதம் பேர் முடிவு எடுக்காமல் இருப் பதாகவும் கருத்துக் கணிப்பு முடிவுகள் காட்டுகின்றன.

7 சதவீதம் பேர்வாக்களிக்க மாட்டோம் என்று கூறியுள் ளனர். ஒன்ராறியோ பொதுத்தேர்தல் ஜூன் 2 ஆம் தேதி நடைபெறும்.

முன்னாள் வதிவிட பாடசாலையின் தளத்தில் 14 புதைகுழிகள் கண்டுபிடிப்பு

ஏப்பிரல் 21. 2022

சஸ்கச்சுவான் (Saskatchewan) முதற் குடியிருப்பாளர்களின் முன்னாள் வதிவிடப்பாடசாலையின் தளத்தில் 14 சாத்தியமான புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

George Gordon முதற் குடியிருப்பு புதன்கிழமை (20) இந்த கண்டு பிடிப்பை அறிவித்தது. சுயனய சமூலம் தரையை ஊடுருவும் தேடல்களின் ஒரு பகுதியாக இந்த கண்டு பிடிப்பு மேற்கொள்ளப்பட்டது. தமது சமூகத்தின் நான்கு வெவ் வேறு பகுதிகள் அடையாளம் காணப்பட்டு அங்கு தேடுதல் மேற்கொள்ளப்பட்டதாக George Gordon தலைவர் கூறினார்.



உண்மை மற்றும் நல்லிணக்கத் திற்கான தேசிய மையம் இந்த பாடசாலை யில் 49 மாணவர்கள் இறந்ததாக பதிவு செய்துள்ளது. கடந்த பெப்ரவரி மாதம், (Saskatchewan) சஸ்கச்சுவான்னின் மற்றுமொரு முதற்குடியிருப்பு பகுதி யில் நிகழ்ந்த தேடுதலின் போது கல்லறைகள் என நம்பப்படும் 54 நிலகுறிப்புகள் கண்டறியப்பட்டதாக அறிவிக் கப்பட்டது குறிப்பிடத்தக்கது

வருமான வரி சேவை Income Tax preparation
100% FREE For Health Care Workers
50% OFF For Frontline Workers & First Time Filers
SCAN ME
File Your TAXES Remotely www.etaxcan.ca
Walk-In & Online Services Are Available - 7 Days 9am to 9pm
etaxcan
ETAXCAN FINANCIAL CORP.
10 MILNER BUSINESS COURT, 3RD FLOOR
SCARBOROUGH ON M1B 3C6
416-869-8265

146, 679

Killed by Sri Lanka Government



Not Just War Crime, It's Genocide

Mr. Prime Minister, Don't Turn your Back!

RECOGNIZE

TAMILEELAM GENOCIDE



தமிழக செய்திகள்



இலங்கையின் பொருளாதார நெருக்கடி நிலை இந்தியாவுக்கும் வரலாம்!

முன்னாள் நிதி அமைச்சர் ப. சிதம்பரம்

ஏப்பிரல் 15. 2021

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலை இந்தியாவிலும் ஏற்படலாம் என்று முன்னாள் நிதி அமைச் சரும் காங்கிரஸ் எம்பியுமான ப. சிதம்பரம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சிவகங்கையில் நடைபெற்ற காங்கிரஸ் நிர்வாகிகள் கூட்டத்தில் எம்பி ப. சிதம்பரம் கலந்து கொண்டார். மாவட்ட காங்கிரஸ் நிர்வாகிகளின் செயல் குறித்து ஆராயும் இந்த கூட்டத்தில் பல்வேறு விஷயங்கள் குறித்து ஆலோசனை செய்யப்பட்டது.

இந்த கூட்டத்திற்கு பின் செய்தியாளர்களை சந்தித்த ப. சிதம்பரம், இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி இந்தியாவிலும் ஏற்படலாம். மத்திய அரசு தொடர்ந்து தவறான பொருளாதார கொள்கைகளை கொண்டு இருந்தால் இந்தியாவும் பொருளாதார நெருக்கடி சந்திக்கும் அபாயம் உள்ளது. இலங்கையில் ஏற்பட்ட பாதிப்பிற்கும் பொருளாதார நெருக்கடிக்கும் தவறான கொள்கைகளே காரணம்.

இலங்கை பொருளாதாரத்தை நிர்வகிக்க தெரியாமல் அவர்கள் எடுத்த தவறான முடிவுகள்தான் இதற்கு காரணம். அந்த தவறான பொருளாதார கொள்கையின் அடையாளங்கள் இந்தியாவிலும் தெரிகிறது. மத்திய பாஜக அரசின் கொள்கைகளிலும் அதற்கான சாயல்கள் தெரி கின்றன. இலங்கையில் விலை ஏற்றத்தை கட்டுப்படுத்த முடியவில்லை. அவர்களால் வேகமாக உயர்ந்த விளை வாசி உயர்வை கட்டுப்படுத்த முடியவில்லை.

இந்தியா கடன் அவர்கள் பொருளாதார சரிவை சரி செய்ய கடன் வாங்கி, மேலும் சரிவை சந்தித்து மேலும் கடன் வாங்கி உள்ளனர். அங்கு சில்லறை பணவீக்கம் இன்று 7 சதவீதத்திற்கு மேல் உள்ளது. பெட்ரோல் டீசல் விலை உச்சம் தொட்டுள்ளது. இந்தியாவிலும் எக்கச்சக்க கடன் வாங்கி எதற்கு செலவு செய்கிறார்கள் என்றே தெரியாமல் செலவு செய்கிறார்கள். இந்தியாவும் தவறான கொள்கை களை பின்பற்றினால் இலங்கையில் ஏற்பட்ட நிலைதான் இங்கும் ஏற்படும்.



இலங்கை கடன்
முறையாக திட்டமிடப்பட்ட பொருளாதார கொள்கை இந்தியாவிற்கு தேவை. இந்தியாவில் பொருளாதாரம் சரிந்து வரும் நிலையில் ஒரே நாடு - ஒரே மொழி - ஒரே தேர்தல் - ஒரே உணவு என்று பிரச்சாரம் செய்கிறார்களா.. நாம் இருப்பது என்ன சமதர்ம நாடா அல்லது சர்வாதிகார நாடா என்ற கேள்வி எழுந்துள்ளது, என்று ப. சிதம்பரம் விமர்சனம் செய்துள்ளார்.

இலங்கையில் இருந்து தனுஷ்கோடிக்கு வந்த 13 ஈழத்தமிழர்கள்

ஏப்பிரல் 22, 2022

இலங்கையிலிருந்து 2 படகுகளில் கைக்குழந்தையுடன் மூன்று குடும்பத்தைச் சேர்ந்த 13 பேர் அகதிகளாக தனுஷ்கோடியில் தஞ்சம், கடலோர காவல் குழுமம், கியூ பிராஞ்ச் போலீசார்



விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

இலங்கையில் கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு நாளுக்கு நாள் அத்தியாவசிய பொருட்களின் விலை கிடு கிடுவென உயர்ந்துள்ளது. இதனால் மக்கள் வாழ்வதற்கு வழி யின்றி வேலைவாய்ப்பை இழந்துள்ளனர். ஒருவேளை உண விற்கே திண்டாடும் நிலைமைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் இலங்கையில் ஆளும் அரசுக்கு எதிராக மக்கள் கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக வீதியில் இறங்கி கடுமையான போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் கடந்த மார்ச் மாதம் 22 ஆம் தேதியிலிருந்து இலங்கையில் வாழ வழியின்றி அகதிகளாக தமிழகத்திற்கு ஈழத்தமிழர்கள் வரத்தொடங்கினர்.

இதைத் தொடர்ந்து இலங்கையில் இருந்து அகதிகளாக வந்த 11 குடும்பத்தை சேர்ந்த 42 பேர் மண்டபம் அகதிகள் மறுவாழ்வு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் இந்த நிலையில் நேற்று நள்ளிரவு 2 படகில் கைக்குழந்தையுடன் வந்த மூன்று குடும்பத்தைச் சேர்ந்த 13 பேர் ஆபத்தான முறையில் கடல் கடந்து தனுஷ்கோடி பகுதியில் அகதிகளாக தஞ்சமடைந்தனர்.



இதையடுத்து கடலோர காவல் குழும போலீசார் மற்றும் கியூ பிராஞ்ச் போலீசாருக்கு தகவல் கிடைத்ததை அடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற போலீசார் அவர்களை விசாரணைக்காக மண்டபம் கடலோர காவல் குழுமம் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

தஞ்சாவூா களிமேடு பகுதியில் தேர் திருவிழாவில் மின்கசிவினால் 11 பேர் பலி

ஏப்பிரல் 27, 2022

தஞ்சாவூர் அருகே களிமேடு பகுதியில் தேர்திருவிழாவில் மின்கசிவினால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 11 ஆக



அதிகரித்துள்ளது.



தஞ்சாவூர் அருகே களிமேடு கிராமத்தில் அப்பர் குருபூஜைக் கான சித்திரை திருவிழா தேரோட்டம் நள்ளிரவு 12 மணிக்கு தொடங்கி அதிகாலை வரை நடைபெறுவது வழக்கம்.

இந்த சூழலில் களிமேடு அப்பர் கோவிலில் 94-வது ஆண்டு சித்திரை திருவிழாவை முன்னிட்டு, திருவிழா தேரோட்டம் நேற்று இரவு வெகு விமரிசையாக நடைபெற்று வந்தது. தேர் களிமேடு பகுதியில் உள்ள பல்வேறு தெருக்கள் வழியாக கொண்டுவரப்பட்டது.

இந்நிலையில், அதிகாலை 3 மணியளவில் களிமேடு பகுதியில் உள்ள பூதலூர் சாலையில் திருத்தேர் வந்தபோது உயர்மின் அழுத்த கம்பி உரசியதில் தேர் மீது மின்சாரம் பாய்ந்தது. இதில் 2 சிறுவர்கள் உள்பட 10 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். 10-க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இதனை தொடர்ந்து படுகாயமடைந்த அனைவரும் தஞ்சை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டனர். படுகாயமடைந்தவர்களில் 4 பேரின் நிலைமை மிகவும் கவலைக்கிடமான நிலையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தனர்.

சேதுக்கால்வாய் திட்டத்தை எதற்காக இழக்க வேண்டும்? இலங்கை – இந்தியா மின்பாதையை கைவிடுக!

பா.ம.க. நிறுவனர் ராமதாஸ்

ஏப்பிரல் 23, 2022

!இலங்கை -இந்தியா மின்பாதையை மத்திய அரசு கைவிட வேண்டும் என்று ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.







இதுகுறித்து பாமக நிறுவனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில், "இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை இலங்கைக்கு கொண்டு செல்வதற்கு வசதியாக மதுரையிலிருந்து இலங்கையின் அனுராதபுரம் பகுதிக்கு கடல் வழியாக மின்பாதை அமைக்கும் திட்டம் நீண்ட காலமாக இரு நாடுகளின் பரிசீலனையில் இருந்து வருகிறது. 2000-ஆவது ஆண்டுகளின் பிற்பகுதியில் இத்திட்டத்தை செயல்படுத்த முயற்சிகள் நடந்த போது, அதற்கு தமிழ்நாட்டில் கடுமையான எதிர்ப்பு எழுந்தது. அதனால் அத்திட்டம் கைவிடப்பட்டது. அதன் பின் 2010-ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் இந்தியா - இலங்கை இடையே மின்சார கோபுரங்களை அமைத்து மின்சாரத்தை கொண்டு செல்வதற்கு திட்டமிடப்பட்டது. ஆனால், அத்திட்டமும் தமிழ்நாட்டின் ஆதரவு இல்லாததால் கிடப்பில் போடப்பட்டது.

கடந்த 20 ஆண்டுகளில் இரு முறை கைவிடப்பட்ட இந்தியா - இலங்கை மின்பாதை திட்டத்தை மீண்டும் செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையே பேச்சுகள் தொடங்கியிருப்பதாகவும், அவை தொடக்க நிலையில் இருப்பதாகவும் இலங்கை அரசின் மின்துறை செயலாளர் வசந்த பெரேரா தெரிவித்துள்ளார். இந்த முயற்சி பொதுவாக இந்திய நலனுக்கும், குறிப்பாக தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும் பாதகமாக அமையும் என்பதே உண்மை.

இலங்கைக்கு கடல் வழியாக மின்சாரப் பாதை அமைக்கும் திட்டம் குறித்து இதற்கு முன் பேசப்பட்ட போதெல்லாம் அதற்கு தமிழகத்தில் கடுமையான எதிர்ப்பு எழுந்தது. அதற்கான முக்கியக் காரணம், கடந்த காலங்களில் இத்திட்டம் குறித்த பேச்சுகள் தொடங்கப்பட்ட போது தமிழ்நாடு கடுமையான மின்வெட்டை எதிர்கொண்டு வந்தது. இப்போது தமிழகத்தின் மின்வெட்டு கட்டுப்படுத்தப்பட்டு விட்ட போதிலும் கூட, இலங்கைக்கு மின்பாதை அமைப்பதை எதிர்க்க இன்னும் பல காரணங்கள் உள்ளன.

சேது சமுத்திரம் திட்டம் தென் தமிழகத்தின் வளர்ச்சிக்கான கனவுத் திட்டம் ஆகும். பல்லாண்டு கால போராட்டத்திற்குப் பிறகு தான் அத்திட்டத்திற்கு செயல்வடிவம் கொடுத்து தொடங்கப்பட்டது. ஆனால், அத்திட்டத்திற்கு எதிராக உச்சநீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்குகள் காரணமாக சேது சமுத்திர திட்டப் பணிகள் முடக்கி வைக்கப்பட்டுள்ளன. இன்றைக்கு இல்லாவிட்டாலும் என்றாவது ஒரு நாள் சேதுக்கால்வாய் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும் இலங்கையை சுற்றிச் செல்லும் பன்னாட்டு சரக்குக் கப்பல்கள் தூத்துக்குடி, இராமேஸ்வரம், வேதாரண்யம், காரைக்கால் வழியாக செல்ல வேண்டும் அதன் காரணமாக அப்பகுதிகளில் பொருளாதார வளர்ச்சி ஏற்படுத்தப்பட வேண்டும் என்பது தான் தமிழகத்தின் எதிர்பார்ப்பு ஆகும். அது நிறைவேறுவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன. ஆனால், இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையே கடலுக்கு அடியிலோ, மின் கோபுரங்கள் அமைத்து கடலுக்கு மேலாகவோ மின் பாதை அமைக்கப்பட்டால், அத்துடன் சேதுக்கால்வாய் திட்டத்திற்கு மூடு விழா நடத்தப்பட்டு விடும். இது இந்தியாவுக்கு பாதகமாகவும், இலங்கைக்கு சாதகமாகவும் அமையும். இலங்கைக்கு மட்டுமே பயனளிக்கக்கூடிய மின்பாதை திட்டத்திற்காக தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், இந்தியாவின் முன்னேற்றத்திற்கும் பங்களிக்கக்கூடிய சேதுக்கால்வாய் திட்டத்தை எதற்காக இழக்க வேண்டும்? சேதுக்கால்வாய் திட்டம் கைவிடப்படுவதும் இலங்கை அரசுக்குத் தான் லாபமாக அமையும்.

இவை அனைத்தையும் கடந்து இலங்கை போர்க்குற்றங்களை நிகழ்த்திய நாடு, தமிழர்களை இனப் படுகொலை செய்த நாடு, இத்தகைய குற்றங்களுக்காக ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் விசாரணையை எதிர்கொண்டு வரும் நாடு என்பதை மத்திய, மாநில அரசுகள் மறந்து விடக் கூடாது. இலங்கை கடுமையான அரசியல், பொருளாதார நெருக்கடிகளை சந்தித்து வரும் சூழலில், அந்நாட்டுக்கு கருணை அடிப்படையில் உதவிகளை செய்வது வேறு அந்நாட்டின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த உதவுவது வேறு என்பதில் இந்தியா தெளிவாக இருக்க வேண்டும். அதேபோல், சீனாவின் ஆதிக்கத்தைத் தடுப்பதாகக் கூறிக் கொண்டு, கண்களை மூடிக் கொண்டு இலங்கைக்கு உதவுவதும் தவறு ஆகும். இலங்கைக்கு செய்யப்படும் உதவிகள் ஒருபோதும் இந்தியாவுக்கு எதிராக அமைந்து விடக் கூடாது. பாகிஸ்தானின் பக்கம் இலங்கை சாய்ந்து விடக் கூடாது என்பதற்காக கச்சத்தீவை தாரை வார்த்ததன் விளைவை இப்போது வரை தமிழகம் தான் அனுபவித்துக் கொண்டிருக்கிறது. அதேபோல், சேதுக்கால்வாய் திட்டத்தை தாரை வார்த்து இலங்கைக்கு மின்பாதை அமைப்பதன் பாதிப்பையும் தமிழகம் தான் அனுபவிக்கும். இவற்றைக் கருத்தில் கொண்டு இலங்கை ரூ இந்தியா மின்பாதையை மத்திய அரசு கைவிட வேண்டும்" என்று கேட்டுக்கொண்டுள்ளார்



உலக செய்திகள்

உக்ரேனின் மரியோபோலை கைப்பற்றிவிட்டதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் தகவல்!

ஏப்ரல் 21, 2022

உக்ரேனின் மரியோபோலை கைப்பற்றியதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

யுக்ரேனில் ரஷ்யப்படையினரால் முற்றுகையிடப்பட்ட துறைமுக நகரமான மரியோபோலில் உள்ள அசோவ்ஸ்டல் ஆலையை முற்றுகையிடும் திட்டத்தை ரத்து செய்யுமாறு தனது ராணுவத்திற்கு ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் உத்தரவிட்டுள்ளார். மேலும், அதற்கு பதிலாக அந்த ஆலை பாதுகாப்பாக சீல் வைக்கப்பட வேண்டும் என்று தான் விரும்புவதாகக் கூறியுள்ளார்.

கடைசியாக அங்கு உள்ள உக்ரேன் படையினர் அந்நகரின் மிகப்பெரிய எஃகு ஆலையில் தஞ்சமடைந்துள்ளனர், அங்கு பொதுமக்கள் சுமார் 1,000 பேர் மோசமான நிலையில் உள்ளனர்.

புதின் மற்றும் ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் செர்கேய் ஷோய்கு இருவரின் உரையாடல் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது. இந்த உரையாடலில் அசோவ்ஸ்டல் ஆலைக்கு சீல் வைக்க புதின் உத்தரவிட்டார்.

மேலும், ரஷ்யப் படையினர் மரியோபோல் நகரை கைப்பற்றிவிட்டதாக, செர்கேய் ஷோய்கு தெரிவித்துள்ள நிலையில், அதற்காக பாதுகாப்பு அமைச்சரை புதின் பாராட்டியுள்ளார்.

2,000க்கும் மேற்பட்ட உக்ரேனிய படையினர் அந்த ஆலையில் இருப்பதாக புதினிடம் ஷோய்கு முன்னர் கூறியிருந்தார். அந்த ஆலையில் விரிவான பதுங்கு குழி உள்ளது.

அங்குள்ள உக்ரேன் படையினர் தீவிர வலதுசாரிகளுடன் தொடர்புகளைக் கொண்ட அசோவ் பட்டாலியன் மற்றும் உக்ரேனிய கடற்படையினர் ஆவர். ரஷ்ய தாக்குதலுக்கு



எதிராக வாரக்கணக்கில் எதிர்த்து வருவதற்காக உக்ரேன் அதிபர் ஸெலென்ஸ்கியால் அப்படையினர் முன்பு பாராட்டப்பட்டனர்.

ஆப்கானிஸ்தான் பள்ளியில் குண்டுவெடிப்பு 6 பேர் உயிரிழப்பு 20 பேர் காயம்

ஏப்ரல் 19, 2022

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள ஆண்கள் பள்ளியில் நடைபெற்ற 2 குண்டு வெடிப்புகளில் தற்போது வரை 6 பேர் உயிரிழந்தனர். இருபதிற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

காபூல் நகரின் மேற்கு பகுதியில் ஷியா பிரிவினர் அதிகம் வசிக்கும் பகுதியில் உள்ள ரஹீம் ஷாகிட் உயர் நிலைப்பள்ளியில் இந்த குண்டு வெடிப்பு நடந்துள்ளது.



அருகில் உள்ள தனிப்பயிற்சி மையத்தின் மீதும் தாக்குதல் நடைபெற்றுள்ளது.

குண்டு வெடிப்பில் உயிரிழப்பு மற்றும் படுகாயமடைந்தவர்களின் எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கலாம் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த தாக்குதல் சம்பவத்திற்கு தற்போது வரை எந்த அமைப்பும் பொறுபேற்கவில்லை. போலீசார் விசாரணையைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

பாகிஸ்தானில் இலங்கையைச் சேர்ந்தவர் கொல்லப்பட்ட வழக்கு 6 பேருக்கு மரண தண்டனை!

ஏப்ரல் 19, 2022

பாகிஸ்தானில் கடந்த டிசம்பர் மாதம் மத நிந்தனை செய்ததாக பரவிய தகவலையடுத்து, ஏற்பட்ட கும்பல் வன்முறையில் இலங்கையைச் சேர்ந்த பிரியந்த தியவதனகே (48) என்பவர் கொல்லப்பட்டார்.

சியால்கோட் நகரில் உள்ள தொழிற்சாலையில் மேலாளராக பணியாற்றிய அவர் வன்முறைக் கும்பலால் தாக்கப்பட்டு, உயிரிழந்தார். பின்னர் சடலத்தை தீ வைத்து எரித்தனர். இது நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. அப்போதைய பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் “அவமானகரமான தினம்” என்று குறிப்பிட்டார்.

இந்த வழக்கில் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்ட 88 பேரில் 6 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. ஒன்பது பேருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. மற்றவர்களுக்கு 2 முதல் 5 ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

முகமது நபியின் பெயர் கொண்ட சுவரொட்டியை தியவதனகே கிழித்து, மத நிந்தனை செய்ததாக வதந்தி பரவியது. ஆனால், சக ஊழியர்கள் இதை மறுத்தனர். அவர் கட்டட தாய்மைப் பணியில் ஈடுபட்டிருந்தார் என்று



தெரிவித்தனர்.

பிரான்ஸ் ஜனாதிபதித் தேர்தலில் இமானுவல் மக்ரோனி வெற்றி

ஏப்பிரல் 25, 2022

பிரான்ஸ் ஜனாதிபதித் தேர்தலின் முதல் கட்டம் கடந்த 10ஆம் திகதி நடைபெற்றது. இந்தத் தேர்தலில் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடும் மக்ரான் உட்பட மொத்தம் 12 வேட்பாளர்கள் களத்தில் இருந்தனர்.

இமானுவல் மக்ரோனுக்கும், வலதுசாரி வேட்பாளரும், பெண் சட்டத்தரணியுமான மரைன் லு பென்னுக்கும் இடையே கடும் போட்டி நிலவியது. முதல் சுற்றுத் தேர்தலில் எந்த வேட்பாளரும் பெரும்பான்மை வாக்குகளைப் பெறவில்லை.


இதனால் நேற்று நடந்த பிரான்ஸ் ஜனாதிபதித் தேர்தலின் இரண்டாம் கட்டத்தில் விறுவிறுப்பாக வாக்குப்பதிவு நடை



பெற்றது. வாக்கு எண்ணிக்கையில் மக்ரோன் 58.2 சதவீதம் வாக்குகள் பெற்று மீண்டும் ஜனாதிபதியாக பதவியேற்க உள்ளார்.

இந்நிலையில், இரண்டாவது முறை ஜனாதிபதியாக மீண்டும் தேர்வு செய்யப்பட்டதை அறிந்த இமானுவல் மக்ரோன், வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவித்தார்.

மேலும், இரண்டாவது முறையாக பிரான்ஸ் ஜனாதிபதியாக வெற்றி பெற்றுள்ள இமானுவல் மக்ரோனுக்கு பிரிட்டன் பிரதமர் பொரிஸ் ஜோன்சன், இத்தாலிப் பிரதமர் மரியோ டிராகி, போர்த்துக்கல் பிரதமர் அண்டோனியோ கோஸ்டா உள்ளிட்ட பல்வேறு நாட்டுத் தலைவர்களும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.





ஈழத்தமிழர்களுக்கு நிவாரண உதவி! தமிழக சட்டசபைத் தீர்மானத்தினை வரவேற்கின்றோம்! நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

ஏப்பிரல் 29, 2022

இலங்கைத்தீவில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் சிக்குண்டுள்ள ஈழத்தமிழ் மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கும் வகையில் இன்று வெள்ளிக்கிழமை தமிழக சட்டமன்றில் ஏகமானதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினை வரவேற்கின்றோம் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அத்தியாவசிய பொருட்கள், உயிர்காக்கும் மருந்துகள் ஆகியனவற்றை தமிழ்நாட்டில் இருந்து நேரடியாக இலங்கைத்தீவுக்கு அனுப்பி வைக்கும் வகையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களினால் தனித்தீர்மானமாக இது முன்மொழியப்பட்டிருந்தது.

இச்சிறப்பு தீர்மானம் தொடர்பில் பேசிய முதல்வர் அவர்கள், "இலங்கைத் தமிழர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் தமிழ்நாடு அரசு உதவ தயாராக உள்ளது. இலங்கைத் தமிழர்களுக்கு உணவு அத்தியாவசிய பொருட்களை தமிழ்நாட்டில் இருந்து அனுப்பி வைக்க வேண்டும் இலங்கை தமிழர்களுக்கு உதவிட அனுமதி கோரி தமிழ் நாடு அரசு கடிதம் எழுதியும் மத்திய அரசிடமிருந்து தெளிவான பதில் கிடைக்கவில்லை. இலங்கை தமிழர்களுக்கு மட்டுமல்ல, இலங்கை சிங்களவர்களுக்கும் உதவ தயார்" என பேசியிருந்தார்.

பிரதான எதிர்கட்சியான அதிமுக உள்ளிட்ட பல்வேறு கட்சிகளும் தமது கருத்துக்களை வழங்கியிருந்ததோடு, குரல் வாக்கெடுப்பு மூலம் ஒருமனதாக இத்தீர்மானம் நிறைவேறியது சபாநாயகர் அறிவித்திருந்தார்.

அனைத்துக்கட்சிகளும் ஒருமனதாக நிறைவேற்றியுள்ள இத்தீர்மானத்தினை நன்றியோடு வரவேற்பாதாக தெரிவித்துள்ள நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமைதாங்கி இந்த முயற்சியினை முன்னெடுப்பதனை நன்றியோடு வரவேற்பதாகவும் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு அரசின் சார்பில் ஈழத்தமிழர் தேசத்தின் உண்மை நிலையையைக் கண்டறிவதற்கான குழு ஒன்றினை அங்கு உடன் அனுப்பி வைப்பதும் இம் முயற்சிக்கு வலுச் சேர்க்கும் என்பதோடு, நேரடி உதவிப் பொறிமுறை ஊடாக ஈழத்தமிழ் மக்களுக்கு அனுப்பி வைக்கும் முயற்சியில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தனது பங்களிப்பை வழங்கும் எனவும் பிரதமர் வி.உருத்திரகுமாரன் தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு முன்னராக அனுப்பியிருந்த கடிதமொன்றில் தெரிவித்தார்.

MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC

www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3



ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

Allstate.
You're in good hands.

உங்களுக்கு சேமிக்க உதவும்
தள்ளுபடிகள் பற்றி என்னிடம் கேளுங்கள்

பயணக் காப்புறுதி
கனடாவுக்கு வருபவர்களுக்கான காப்புறுதி

செல்லப் பிராணிக் காப்புறுதி

ஆயுள் காப்புறுதி
முதலீடுகள் மற்றும் நிதித் திட்டமிடல்

தனிப்பட்ட சேவைக்கும் ஆலோசனைக்கும்
என்னைத் தொடர்பு கொள்ளுங்கள்




Raji Linghan
Ajax Agency
15 Westney Road, N
(416) 817 5060
rlinghan@allstate.ca

Trademark owned by Allstate Insurance Company used under licence by Allstate Insurance Company of Canada. ©2020 Allstate Insurance Company of Canada. 011E | 201316




BOROS CANADIAN
PAPER CONVERTING INC.





















Alan Maniam 647 299 2450
Director

235 Nugget Ave., Unit 12, Scarborough ON M1S 3L3

boroscanadianpaper@gmail.com

மக்கள் சமூகம் விழிப்படையும் போது விடுதலை சாத்தியமாகிறது

–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –



தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் மாபெரும் விடுதலைச் சக்தியாக எமது இயக்கம் வளர்ச்சி கண்டிருக்கிறது. ஆயுதப் போராட்ட களத்திலும் எமது விடுதலை வீரர்களே முன்னணிப்படையாக விளங்குகின்றனர். அரசியல் இலட்சியத்திலும் எமது இயக்கமே தெளிவுடனும் உறுதியுடனும் செயற்படுகிறது. வெகு சன அரங்கிலும் மிகப் பிரபல்யம் பெற்று மக்களின் நல்லாதரவு பெற்றிருப்பதும் எமது விடுதலை இயக்கமே. எமது இயக்கத்தின் இந்த மகத்தான வளர்ச்சிகண்ட பொறாமையும் எரிச்சலும் கொண்ட தீய சக்திகள் எமது இயக்கத்திற்கு மாசு கற்பிக்கும் வகையில் மிகவும் கீழ்த்தரமான, விசமத்தனமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றன. மக்களிடமிருந்து எம்மை அந்நியமாக்கும் நோக்குடன் எமக்கு எதிராக மிகவும் அபாண்டமான பொய்ப் பிரச்சாரத்தை இவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். மக்களின் விடுதலை என்ற இலட்சியத்திற்காக இவர்கள் இயங்கவில்லை. எமது விடுதலை இயக்கத்தை அழித்துவிடும் ஒரே நோக்கத்திற்காவே இந்த சக்திகள் செயற்படுகின்றன. இவர்களின் சூத்திரதார நட வடிக்கைகளிலும், பொய்ப் பிரச்சாரங்களிலும் ஏமாந்து போகாது வழிப் புடன் இருக்க வேண்டுமென மக்களை நாம் கேட்டுக்கொள்கிறோம்.

ஒடுக்கப்படும் மக்கள் சமூகம் வழிப்படைந்து, புரட்சிகரப் பிரக்ஞை பெற்று, தேசியப் போராட்டத்தில் முழுமையாகப் பங்கு கொள்ளும் பொழுதே விடுதலை சாத்தியமாகிறது. மக்கள் மத்தியில் விரக்கதியும் சோர்வும், குழப்பமும், நம்பிக் கையின்மையும் தோன்றும் பொழுது ஒரு தேசத்தின் போராட்ட சக்தி வலுவிழக்கின்றது. இந்த அரசியல் உண்மையை விடுதலைக்கு விரோதமான சக்திகள் நன்கறிவர். ஆகவேதான் மக்களின் நம்பிக்கையைத் தளர்த்தி, விடுதலைப் பற்றை மழுங்கடித்து, உறுதிப்பாட்டை உடைத்து, உண்மையான விடுதலை இயக்கத்திலிருந்து மக்களை அந்நியப்படுத்த இந்த சதிகார சக்திகள் செயற்படுகின்றன.

(தேசியத் தலைவரின் “எனது மக்களின் விடுதலைக்காக...” கருத்துத் தொகுப்பு நூலிலிருந்து)









TAX ANALYST

ACCOUNTING | BOOKKEEPING | & MORE



- Affordable and Reliable Services
- Experienced Accountants
- Presonal & Corporate Tax
- Tax Planning / Audit Appeal
- HST/GST/WSIB
- Bookkeeping & Payroll
- UBER/LYFT Tax Filling

CRB/CERB HELP

OFFICE
416-898-8879

CALL FOR APPOINTMENT
416-838-2826

105Consumers Drive.
Whitby ON L1N 1C4

115 Mathesan Blvd W.
Mississauga ON L5R 1C6

www.taxanalyst.ca
taxmatters@kannantax.com



சிவஶ்ரீ சிவ.ஜனா குருக்கள்
Shiva Sri S.JANARTHANA KURUKKAL
Priest (JANA IYA)
உங்கள் இல்லங்களில் நடைபெறும்
அனைத்து மங்கள வைபவங்களையும்
ஆகம முறைப்படி சிறப்பாக நடத்தி
வைப்பதற்கு அழையுங்கள்
Tel: 647.449.6542
aarthanan@hotmail.com
aarthananyathu@gmail.com

HIGH EFFICIENCY HEATING & COOLING AIR SOLUTIONS

24h EMERGENCY SERVICES

ALL MAKES & MODEL Furnance, Air Conditioner, Hot Water Tank
Tankless Water Heater, HRV, Fireplace, Attic Insulation,
Duct Work, Gas Line For BBQ, Stove, Dryer

up to **$5000 REBATE**

0 Down, Rental
Rent - to - Own
10 Years Warranty



WHY UPGRADE TO TANKLESS?

- Endless Supply of Hot Water
- No Up-front Equipment Cost
- Save Up To 40%
- Save Money & Space Design
- 15 Years Warranty
- No More Risk of Flooding or Explos

KD Navien®
The Leader in Condensing Tankless Technology

FREE ESTIMATE
Sales, Service & Repair

S.Kumar
416-993-8001
geansam@yahoo.com

FINANCING WITH $0 DOWN
HOME ENERGY LOAN
$15,000

PEEL TAE KWON DO
Family Martial Arts

Trusted Local Taekwon - Do Training School




- Over 20+ Years Taekwon-Do Training Experience
- For All Your Taekwon-Do, Martial Arts, Kickboking, Self Defense and Yoga Needs
- Top Quality Training for Kids, Teens and Adults

2016 READERS' CHOICE AWARDS



Ebenezer Location:
4255 Ebenezer Road,
Unit #25
Brampton, Ontario. L6T 2K8.
Tel: 905 913 2571

Bovaird Location:
170 Bovaird Drive, Unit #9, West,
Brampton, Ontario. L7A 1A1
Tel: 905 840 5268





முல்லைப்பெரும் சமர் ஓயாத அலை 01



விடுதலைப்புலிகளால் ஓயாத அலைகள் என்று பெயரிடப்பட்டு முல்லைத்தீவு இராணுவ முகாம் மீதான தாக்குதல் தொடுக்கப்பட்டு அப் படைமுகாம் வெற்றி கொள்ளப்பட்டது. அதன் மூலம் முல்லைத்தீவு என்ற நகரம் மீட்கப்பட்ட தோடு போராட்டத்தின் அபாரப் பாய்ச்சலுக்கும் வித்திடப்பட்டது.

இத்தாக்குதல் நடத்தப்பட்ட காலகட்டம் மிகவும் முக்கியமானது. அதுவரை புலிகளின் கோட் டையாகவும் போராட்டத்தின் மையமாகவும் தலைமையிடமாகவும் கருதப்பட்ட யாழ்ப் பாணம் சிங்களப் படைகளால் முற்றாகக் கைப்பற்றப்பட்ட நிலையில், இனிமேல் புலிகள் என்ன செய்யப்போகிறார்களென்று எல் லோரும் கேள்வி கேட்ட நேரத்தில், புலிகளில் 80 சதவீதம் பேர் அழிந்து விட்டார்கள், இன் னும் 20 சதவீதம் பேரே மிஞ்சியிருக்கிறார் களென்று ஜெனரல் ரத்வத்த (இவர் அதுவரை கேணலாயிருந்து யாழ் கைப்பற்றலோடு திடீரென ஜெனரல் பதவி வரை தாவினவர். பிரிகேடியர், மேஜர் ஜெனரல், லெப்டினன்ட் ஜெனரல் என்பவற்றுக்குப் போகாமல் நேர டியாக நாலாம் கட்டத்துக்குத் தாவினார். நல்ல வேளை பீல்ட் மார்ஷல் பதவி கொடுக்கப்பட வில்லை.)

சொன்ன நேரத்தில் நடத்தப்பட்ட பாரிய தாக் குதல். தமிழ்மக்களே போராட்டத்தின் பால் அவநம்பிக்கை கொண்டிருந்த நேரம். யாழ்ப்பாணமே போய்விட்டது இனியென்ன என்று வெறுத்துப்போயிருந்த நேரம். ஓயாத அலைகள் ஏறத்தாள இரண்டாயிரம் வரை யான துருப்பினரையும் இரு ஆட்லறிகளுட்பட வலுமிக்க படைத்தள பாடங்களையும் கொண் டிருந்த படைத்தளம் தான் முல்லைத்தீவுப் படைத்தளம்.

நேரடியாக மற்றப் பிரதேசங்களோடு தரை வழித்தொடர்பு ஏதும் இல்லாவிட்டாலும் கடல் வழி மற்றும் வான்வழித் தொடர்புகளைச் சீரா கப் பேணிவந்த படைத்தளம். முல்லைத் தீவின் ஆழ்கடற்பகுதிக் கரையோரத்தின் குறிப் பிட்டளவைக் கொண்டிருந்த இப்படைத்தளம் சீரான கடல்வழித்தொடர்பைக் கொண் டிருந்தது. ஏதும் அவசரமென்றால் திருகோண மலைத் துறைமுகம் ஒரு மணிநேரக் கடற்



பயணத்தூரத்தில் இருந்தது.

இப்படைத்தளம் மீதான தாக்குதல் ஒத்திகை கள் யாவும் பூநகரிப் படைத்தளத்தை அண் மித்த பகுதிகளில் நடத்தப்பட்டன. பூநகரி மீது தான் தாக்குதல் நடத்தப்படப் போகிறதென்று மக்களிடையேகூட இலேசாகக் கதை பரவி யிருந்தது. போராளிகளுக்குக்கூட பூநகரிதான் இலக்கென்ற அனுமானமேயிருந்தது. திடீ ரென இரவோடிரவாக அணிகள் மாற்றப்பட்டு திட்டம் விளங்கப்படுத்தப்பட்டது. மக்களுக்குத் தெரியாமல் அணிகள் மாற்றப்பட்டு மறைக் கப்பட்டிருந்தன.

திட்டமிட்டபடி பதினெட்டாம் திகதி அதிகாலை படைத்தளம் மீது பலமுனைகளில் தாக்குதல் நடத்தப்பட்டது. தாக்குதல் நடத்தி அரைமணி நேரத்தில் கடல்வழி உதவி கிடைக்கும் என்ற அனுமானத்துக்கேற்ப 'டோறா' விசைப் படகுகள் திருமலைத் துறைமுகத்திலிருந்து வந்திருந்தன. அவற்றை வழிமறித்துத் தாக்கும் பணியைக் கடற்புலிகளின் படகுகள் பார்த்துக்கொண்டன. எப்பாடுபட்டும் முலலைத் தீவில் தரையிறக்கியே தீருவதென்று சிங்களப் படைகளும் அதை விடுவதில்லையென்ற நோக்கத்துடன் கடற்புலிகளும் நிற்க, கடலிற் கடுமையான சண்டை நடந்தது. தரையிலும் கடும் சண்டை நடந்தது.

கடலில் ரணவிறு என்ற போர்க்கப்பல் கரும் புலிப்படகுகளின் தாக்குதலால் மூழ்கடிக் கப்பட்டது. 600 துருப்பினரைக் காவிய துருப் புக்காவிக் கலமொன்றின் மீதான கரும் புலித்தாக்குதல் மயிரிழையில் பிசகியது. அதனால் அக்கலமும் துருப்பினரும் தப்பினர். இதேவேளை வான்வழியில் துருப்பினரைத் தரையிறக்கும் முயற்சியும் நடந்தது. இதில் ஒரு உலங்குவானூர்தி சுட்டு வீழ்த்தப்பட்டது.

3 நாள் கடும் சண்டையின் பின் முல்லைத் தீவுக்கு அப்பாலுள்ள அளம்பில் என்ற கிராமத் தில் வான்வழியாயும் கடல்வழியாயும் ஆயிரத் துக்குமதிகமான துருப்பினர் தரையிறக்கப் பட்டனர். அவர்களின் முல்லைத்தீவை நோக் கிய நகர்வை மூர்க்கமாக எதிர்கொண்டனர் புலிகள். வெட்ட வெளியில் கடும் சண்டை நடந்தது. வான் படையும் கடற்படையும் தம் வலு முழுவதையும் பாவித்தது. மறிப்புச் சமர் அளம்பிலில் நடந்துகொண்டிருக்க, முல்லைத் தீவுப் படைத்தளம் முற்றாகக் கைப்பற்றப் பட்டுவிட்டது. இரு ஆட்லறிகளும் ஏராளமான ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. இப்போது புலிகளின் முழுக்கவனமும் தரையிறங்கிய படையினரை எதிர்கொள்வதில் திரும்பியது. கடின எதிர்த்தாக்குதலைத் தாங்க முடியா மலும், காப்பாற்ற வந்த படைமுகாம் முற்றாக வீழ்ந்துவிட்டதாலும் தரையிறங்கிய படை யணி ஓட்டமெடுக்கத் தொடங்கியது.

எங்கே ஓடுவது?

திரும்பவும் கடல்வழியால் தான் ஓட வேண் டும். மீண்டும் துருப்புக்காவியொன்று கரைக்கு வந்தது. தங்களது ஆயுதங்களைக்கூட போட்டு விட்டு அத்துருப்புக்காவில் ஏறி ஓடினர் படை யினர். எஞ்சிய படையினர் முழுப்பேரையும் ஏற்றிக்கொண்டு போகக்கூட அவர்களுக்கு அவகாசமில்லாமல் ஓடினர் படையினர்.

தப்பிய சிலர் காடுகளில் திரிந்து ஒருவாறு கொக்குத்தொடுவாப் படைமுகாமுக்குச் சென்று சேர்ந்தனர். அவர்கள் மூலம் தான் சிங்களத் தின் பல பொய்கள் முறியடிக்கப்பட்டன. ரத் வத்தை சொல்லியிருந்தார்: இரு ஆட்லறி களும் இராணுவத்தால் தகர்க்கப்பட் டிருந்ததாக. ஆனால் தப்பிப்போனவர்கள், புலிகள் ஆட்லறிகளை முழுதாக இழுத்துச் செல்வதை தாம் நேரே பார்த்ததாகச் சொன்னார்கள். மேலும் இறந்த படையினரின் தொகை பற்றியும் சொன்னார்கள்.

அத்தாக்குதலில் 1300 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டிருந்தார்கள். 800 வரையான சடலங்களைப் புலிகள் கையளித்தபோதும் சிங்கள அரசு அவற்றைக் கையேற்கவில்லை. ஏராளமான சடலங்கள் தொகுதி தொகுதியாக எரிக்கப்பட்டன. இப் போதும் அந்த இடங்களை வன்னிக்குச் செல்பவர்கள் காணலாம். இன்றுவரை காணாமற்போனோர் பட்டியலில் சிங்கள அரசு அறிவித்திருக்கும் படையினரிற் பலர் இப்படி எரியூட்டப்பட்டவர்கள் தாம். (பின் ஓயாத அலை கள் இரண்டு, மூன்று என்று பின்வந்த தாக் குதல்களிலும் பல சடலங்கள் இப்படி மறுக்கப் பட்டு எரிக்கப்பட்டன.)

இத்தாக்குதல் போராட்டத்தின் மறுக்க முடியாத பாய்ச்சல். முதன்முதல் இரு ஆட்லறிப் பீரங்கி களைத் தமிழர் படைக்குப் பெற்றுத் தந்தது. அதன் படிப்படியான வளர்ச்சிதான் இன்று ஆட் லறிச்சூட்டில் எதிரி வியக்கும் வண்ணம் இருக் கிறது. வன்னியில் துருத்திக்கொண்டிருந்த ஒரு படைத்தளம் அழிக்கப்பட்டு மிக முக்கிய நகரமான முல்லைத்தீவு மீட்கப்பட்டது. அதன் பின்தான் கடற்புலிகளின் அபார வளர்ச்சி தொடங்கியது. போராட்டத்துக்கான சீரான வழங்கலும் தொடங்கியது. நவீனத் தொழி நுட்பங்களும் ஆயுதங்களும் அதன்பிறகுதான் இயக்கத்துக்கு சீராக கிடைக்கத்தொடங்கின. எந்தச் சமரையும் முறியடிக்கும் வல்லமையும், எந்தப் படைமுகாமையும் தாக்கிக் கைப்பற்றும் திறனும் அதன்பிறகுதான் மெருகேறியது. ஜெயசிக்குறு வெற்றியிலிருந்து, ஆனை யிறவுக் கைப்பற்றல் வரை எல்லாமே முல்லைத்தீவுக்குள்ளால் கிடைத்தவைதாம். போர்க்காலத்தின் இராஜதந்திரப் பயணங் களும் முல்லைத்தீவுக்குள்ளால் தான். பாலசிங்கத்தின் வெளியேற்றமும் அதற் குள்ளால் தான்.

இன்று "கிளிநொச்சி" போராட்டத்தின் மைய மாகப் பார்க்கப்படுகிறது. அது வெறும் சந்திப்புக் களின் மையமேயொழிய போராட்டத்தின் மையமன்று. பொதுவாகவே வன்னி என்ற பதத்தால் அழைத்தாலும் குறிப்பிட்டுச் சொன்னால் அது முலலைத்தீவுதான்.

முல்லைத்தீவுப் பட்டினம் கடந்த பத்துவருட காலத்துள் இரு தடவை பிணங்களால் நிறைந்தது. முதலாவது சந்தர்ப்பம் 'ஓயாத அலைகள்" தாக்குதலின்போது. மற்றையது கடந்த வருட சுனாமி அனர்த்தத்தின்போது.

இதே முல்லைத்தீவில் ஆங்கிலேயப் படை முகாமைத் தாக்கியழித்ததோடு அங்கிருந்த பீரங்கிகளையும் கைப்பற்றிய வரலாறு பண்டாரவன்னியனுக்குண்டு. அதன் தொடர்ச்சி ஓயாத அலைகள். முல்லைத்தீவு வீழ்த்தப்படக்கூடாத நகரம். அதன் இருப்புத் தான் தமிழர் படையின் இருப்பும். மற்ற எந்த நகரமும் பறிபோகலாம். ஆனால் முல்லைத் தீவு பறிபோகக்கூடாத நகரம்.

ஓயாத அலைகள் என்ற பெயரில் தொடர் நட வடிக்கைகள் நடந்தன. புலிகள் ஒரே பெயரில் தொடர் நடவடிக்கைகள் செய்தது ஓயாத அலை கள் என்ற பெயரை வைத்துத்தான். இறுதியாக யாழ் நகரைக் கைப்பற்றும் சமராக 'ஓயாத அலைகள்-4' அமைந்தது.

முல்லைத்தீவில் கைப்பற்றப்பட்ட ஆட்லறி யொன்றைப் புதுக்குடியிருப்பு நோக்கி இழுத்து



வந்தனர் புலிகள். இடையில் இழுத்து வந்த வாகனம் பழுதோ என்னவோ, மந்துக் காட்டுப் பகுதியில் ஆட்லறி நிற்பதைக் கண்டுவிட்டனர் சிலர். அதிகாலை நேரம். ஓரிருவர் எனக் கூடியகூட்டம் படிப்படியாக அதிகரிக்கத் தொடங் கியது. ஆட்லறியைக் கட்டிப்பிடித்துக் கூத் தாடியபடி சிலர், பார்த்ததை மற்றவர்களுக்குச் சொல்லவென சைக்கிளிற் பறக்கும் சிலர், ஆட்லறிச் சில்லைக் கட்டிப்பிடித்தபடி ஒப்பாரி வைக்கும் ஓரிருவர் என்று அந்த இடம் களைகட்டத்தொடங்குகிறது. அங்கு நின்ற ஓரிரு போராளிகளாற் கட்டுப்படுத்த முடிய வில்லை, கட்டுப்படுத்தவுமில்லை. (நிலத்தில் பிரதட்டை கூட அடித்தனர் சிலர்).

கைப்பற்றப்பட்ட ஆட்லறியுடன் போராளிகள்



கொஞ்ச நேரத்தில் மாலைகளுடன் வந்த சிலர் ஆட்லறிக்குழலுக்கு மாலைசூட்டினதோடு ஆட் டம் போட்டனர். அதன்பிறகுதான் தாம் தமிழர் என்று உறைத்திருக்குமோ என்னவோ, இரு சைக்கிள்களில் தேங்காய் மூட்டைகள் வந் தன. ஆட்லறியின்முன் தேங்காய் உடைக்கத் தொடங்கியதோடு அங்கு ஒரு திருவிழா ஆரம் பமாகத் தொடங்கியது. (அதற்குள்ளும் தேங் காய் உடைப்பதில் அடிபிடி) இன்னும் மாலைகளோடு சிலர் வந்துகொண்டிருந் தார்கள். ஐயர் சகிதம் பூசை தொடங்கமுதல் வேறொரு பவள் வாகனத்தைக் கொண்டு வந்து ஆட்லறியை இழுத்துக்கொண்டு மறைந்துவிட்டார்கள்.

"தாக்குதல்"

1996 ஜூலை 17ம் நாள் இரவு முடிந்து 18ம் நாள் அதிகாலை இப்படைத்தளம் மீதான தாக் குதலை பலமுனைகளில் இருந்து விடுதலைப் புலிகள் தொடுத்தனர். தரைவழியாக ஏனைய படைமுகாம்களோடு தொடர்பற்ற இத்தளத்தி லிருந்து படையினரால் உதவிகள் பெற முடிய வில்லை. மூன்றுநாட்களுக்குள் படைமுகாம் முற்றாக புலிகளிடம் வீழ்ச்சியுற்றது. அங் கிருந்த ஆயுத தளபாடங்கள் அனைத்தையும் புலிகள் கைப்பற்றினர். ஈழப்போராட்ட வரலாற்றில் முதன்முதலாக ஆட்லறிப் பீரங் கிகள் புலிகளின் கைகளுக்கு வந்ததும் இச் சமரில்தான். முல்லைத்தீவுப் படைத்தளத்தில் வைக்கப்பட்டிருந்த 122மிமீ ஆட்லறிப் பீரங் கிகள் இரண்டும் புலிகளால் கைப்பற்றப் பட்டன.

"தரையிறக்கமும் எதிர்ப்புச்சமரும்"

முல்லைத்தீவுப் படைத்தளம் புலிகளின் தாக் குதலுக்கு உள்ளானபோது படையினரையும் தளத்தையும் காப்பாற்றவென சிறீலங்கா அரச படையால் தரையிறக்கம் ஒன்று மேற் கொள்ளப்பட்டது. தாக்குதலுக்குள்ளான தளத்தி லிருந்து தெற்குப் பக்கமாக மூன்று மைல்கள் தொலைவில் அளம்பில் என்ற கிராமத்தில் கடல்வழியாக மிகப்பெரிய தரையிறக் கமொன்றை இலங்கை அரசின் முப் படைகளும் இணைந்து மேற்கொண்டன. இலங்கை அரசின் முப் படைகளும் இணைந்து நடத்திய இத்தரையிறக்கத்துக்கு "திரிவிட பர" என்று அரசபடையால் பெயர் சூட்டப்பட்டது.

தரையிறக்கப்பட்ட படையினரை எதிர்த்து புலிகளின் அணிகள் சமர் புரிந்தன. சிலநாட்களாக, தரையிறங்கிய படையிரை முன்னேறவிடாது மறித்துவைத்திருந்த புலி கள், இறுதியில் முற்றாக அச்சமரை வென் றனர். அரசபடை, தரையிறங்கியவர்களில் மிகுதிப்படையினரை மீளப்பெற்றுக்கொண்ட தோடு 'ஓயாத அலைகள் - ஒன்று' நடவடிக்கை முடிவுக்கு வந்தது.

தரையிறக்கத்தின் போது கடலில் கடற் படையினருக்கும் கடற்புலிகளுக்குமிடையில் நடைபெற்ற சமரில் 'ரணவிறு' என்ற தாக்குதல் கலமொன்று கரும்புலிகளால் மூழ்கடிக்கப் பட்டது. இக்கலத்தை மூழ்கடித்த தாக்குதலில்

மேஜர் கண்ணபிரான், மேஜர் செல்லப்பிள்ள, மேஜர் பார்த்தீபன், மேஜர் மிதுபாலன், மேஜர் பதுமன், மேஜர் சுடரொளி, கப்டன் சயந்தன்

ஆகியோருட்பட ஏழு கடற்கரும்புலிகள் வீரச் சாவடைந்தனர்.

இப்படை முகாம் கைப்பற்றப்பட்டதன் மூலம் முல்லைத்தீவு மாவட்டத்தை முழுமையாக தமது கட்டுப்பாட்டுள் கொண்டுவந்தனர்.

"இழப்பு விவரங்களும் ஊடகத் தணிக்கையும்"

இத்தாக்குதலில் 1200 இற்கும் அதிகமான இராணுவத்தினர் பலியானதாக புலிகள் தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

ஆனால் அரசதரப்பு அதை மறுத்ததோடு மிகக் குறைந்தளவு படையினரே கொல்லப் பட்டதாகச் சொன்னது. அத்தோடு ஆட்லறிகள் எவையும் புலிகளால் கைப்பற்றப்படவில்லை யென அப்போதையை பிரதிப் பாதுகாப்பமைச் சரும், யாழ்ப்பாணக் குடாநாட்டைக் கைப்பற் றியதால் ஜெனரலாகப் பதவி உயர்த்தப்பட்ட வருமான ஜெனரல் அனுருத்த ரத்வத்த தெரிவித்திருந்தார்.

புலிகள் பலநூறு சடலங்களை அனைத்துலகச் செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக அரசதரப்புக்குக் கையளித்தபோதும் அரசு அவற்றை ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக சிலவற்றை மட்டும் பெற்றுக்கொண்டு, ஏனையவை தமது இராணுவத்தினருடையவையல்ல என்று மறுப்புத் தெரிவித்தது.

பலநூறு சடலங்களை வன்னியில் பொது மக்களும் புலிகளும் சேர்ந்து தீமூட்டினர். கொக்காவில் என்னுமிடத்தில் 600 வரை யான படையினரின் சடலங்கள் ஒன்றாக தீமூட்டப்பட்டன.

"முல்லைத்தீவை மீட்க "ஓயாத அலைகள்" படை நடவடிக்கையில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட 400 வரையான மாவீரர் களுக்கு எமது வீரவணக்கம் "

"ஓயாத அலைகள் – 01 முல்லை வெற்றிச் சமர்"

யாழ். குடாவிலிருந்து விடுதலைப் புலிகள் தமது இயங்குதளத்தை வன்னிக்கு மாற்றிக் கொண்டபோது, புலிகள் பலமிழந்து வன்னிக் குள் முடக்கப்பட்டு விட்டார்கள் என்று சிங்கள அரசு மேற்கொண்ட பரப்புரை, 18.07.1996 அன்று அதிகாலை வேளையில் முல்லைப் படைத்தளத்தின் தடையமைப்பினுள் வெடித்த டோப் பிட்டோவின் வெடியோசையோடு முடிவுக்கு வந்தது.

"ஓயாத அலைகள்" என்று பெயரிடப்பட்டு விடு தலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதல், இதன் பெயரிற்கேற்ப பிற்பட்ட காலத் தில் "ஓயாத அலைகள்" என்ற பெயரில் விடு தலைப் புலிகள் மேற்கொண்ட வெற்றிகர வலிந்த தாக்குதல்களிற்கான முதற்படியாக அமைந்து "ஓயாத அலைகள் - 01" எனக் குறித்துக் காட்டவேண்டிய தாக்குதலுமானது.

முதற்றரப் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கொண்டதும் முழுமையான கடல்வழி ஆதரவைக் கொண்டதும் தன்னகத்தே பல மான மோட்டார், ஆட்டிலறிச் சூட்டாதரவைக் கொண்டதுமான முல்லைப் படைத்தளம் விடுதலைப் புலிகளின் 30 மணிநேரத் தாக்குதலின் பின் அவர்களின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது. இத் தாக்குதல் விடுதலைப் புலிகளின் மற்றுமொரு வளர்ச்சியைக் காட்டும் தாக்குதலாகவும் அமைந்தது.

சிங்களக் கடற்படையின் கடல்வழி ஆதரவைத் தடுக்கும் வலிமையை விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் பெற்றுவிட்டார்கள் என்ற செய் தியை வெளிக்காட்டும் வகையில் முல்லைத் தளத்தினுள் கடல் வழித் தரையிறக்கம் மேற் கொள்ளப்படா வண்ணம் தடுத்த கடற்புலிகள் முல்லைத் தளத்திற்கு தெற்கே மூன்று கிலோ மீற்றர் தொலைவில் அளம்பில் பகுதியில் வான் வழியால் தரையிறக்கப்பட்ட படைகள் கடல் வழியால் வலுவூட்டப்படுவதையும் தடுத்து நின்றனர்.

இவ்வாறு சிங்களக் கடற்படைக்குச் சவால் விடும் வகையில் கடலில் புலிகள் பலம் பெற்ற மையையும் இத்தாக்குதலால் உலகம் கண்டு கொண்டது.

"முல்லைப் படைத்தளம்"

வன்னிப்பிரதேசத்தில் முல்லைத்தீவு மாவட்டத் தில் அமைந்திருக்கும் கடற்கரைப் பட்டின மான முல்லைத்தீவுப் பட்டினத்தை வன் கவர்ந்து அதில் அமைக்கப்பட்டிருந்ததுதான் முல்லைப் படைத்தளம். ஆரம்பத்தில் கடல் வழிக் கடத்தலைத் தடுப்பதற்காக முல்லைப் பட்டினத்தின் ஒதுக்குப்புறமாக சிறு கூடார மொன்றில் பத்திற்கும் குறைவான சிங்களப் படையினர் தங்கியிருந்தனர்.



காலப்போக்கில் அத்தங்ககம் விரிவாக்கப்பட்டு வந்தது. 1990 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் அத்தங்ககத்தைத் தமது முற்று கையின்கீழ் கொண்டு வந்ததையடுத்து "கடற்காற்று" - "Operation SEA BREEZE" - எனும் படை நடவடிக்கை மூலம் தமது படை யினரை முற்றுகையில் இருந்து மீட்ட சிங்களப் படைகள் அங்கு பலமான படைத்தளத்தை அமைத்துக் கொண்டன.

அத்துடன் 1992 ஆம் ஆண்டு சத்பல - "Operation SATHBALA" - என்ற பெயரில் மணலாற்றை நோக்கிய படை நகர்வை மேற்கொண்டு அளம்பில் வரையான பிர தேசத்தை வன்கவர்ந்த சிங்களப் படைகள் அதற்கு அப்பால் நகர முடியாது திணறியதுடன், முன்னகர்ந்த படைகளும் சிறிது காலத்தில் முல்லைத் தளத்திற்கே பின்னகர்ந்தன. இவ் வாறு தொடர்ந்து விரிவாக்கப்பட்டு வந்த முல்லைப் படைத்தளம் "ஓயாத அலைகள் - 01" தாக்குதல் நடைபெற்றபோது ஒரு கூட்டுப் படைத்தளமாக விளங்கியது.

"ஓயாத அலைகள் - 01" தாக்குதல் நடை பெற்றபோது 25 ஆவது பிரிகேட் கூட்டுப்படைத் தளமாக விளங்கிய முல்லைப் படைத்தளம் 1407 படையினரைக் கொண்டிருந்தது. வெளிச்சுற்று, உட்சுற்று என இரு காப்புநிலை வரிசைகளைக் கொண்டிருந்த இத்தளம் 2900 மீ. நீளமும் 1500 மீ. அகலமும் கொண் டிருந்தது. இதன் வெளிச்சுற்றுக் காப்பு வரிசை 8500 மீற்றர் சுற்றளவைக் கொண்டதாக இருந்தது.

முல்லைப்பட்டினத்தை மையமாகக் கொண்டு படைத்தளத்தின் உட்சுற்றுக் காப்பு வரிசை அமைக்கப்பட்டு அதனுள் ஆட்டிலறி, மோட்டார் ஏவுதளம், பிரிகேட் தலைமையகம், பட் டாலியன் தலைமையகங்கள், தொலைத் தொடர்புக் கோபுரம், உலங்கூர்தி இறங்கு தளம் போன்ற தளத்தின் முதன்மை அமைப் புக்கள் காணப்பட்டன.

வெளிச்சுற்றுக் காப்பு வரிசையானது கிழக்கில் இந்து சமுத்திரத்தையும் தெற்கில் இறால் குளம் மற்றும் பரந்த வெளிகளையும் மேற்கில் நந்திக் கடல் நீரேரியையும் வடக்கில் வெட்டு வாய்க்கால் தொடுவாயையும் எல்லைகளாகக் கொண்டு அமைக்கப்பட்டிருந்தது. இந்தத் தரையமைப்பானது காப்பு வரிசையமைப் பிற்கு மிகவும் சாதகமானதாக விளங்கியது.

இந்தக் காப்பு வரிசையிலே உயர்ந்த மண் ணணை அமைக்கப்பட்டு அதிலே அண் ணளவாக 40 மீற்றரிற்கு ஒரு காப்பரண், தேவைப்படும் இடங்களில் உயரமாக அமைக் கப்பட்ட கண்காணிப்புக் கோபுரங்கள் என இடையறாத கண்காணிப்பு ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டிருந்ததுடன், தளத்தின் உட் புறத்தை கண்காணிக்க முடியாதவாறு மண் ணணையின் மேல் மறைப்பு வேலி அமைக் கப்பட்டிருந்தது. இந்த மண்ணணையின் வெளிப்புறத்தே பல நிரைகளில் அமைக் கப்பட்டிருந்த தடையமைப்புகள், கண்ணி வயல்கள், இரவுக் கண்காணிப்பு ஏற்பாடாக ஒலி அவதானிப்பு நிலைகள் என உயர்காப்பு ஏற்பாடுகளை இத்தளம் கொண்டிருந்தது.

"வேவு"

இத்தளம் விடுதலைப் புலிகளின் பொதுவான வேவு நடவடிக்கைக்கு உட்பட்டு இருந்தது ஆயினும் விடுதலைப் புலிகளின் இயங்கு தளம் வன்னிக்கு நகர்ந்தபின் தேசியத் தலைவர் அவர்கள் இத்தளத்தைத் தாக்கு வதற்கான சிறப்பு வேவு நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு பணித்தமைக்கு இணங் கச் சிறப்புத் தளபதி ஒருவரின் ஒருங் கிணைப்பின்கீழ் முன்னர் பொதுவான வேவில் ஈடுபட்ட போராளிகளையும் இணைத் துக் கொண்டு முனைப்பான வேவு நட வடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. கடல் வழியாலும் தரைவழியாலும் மிகவும் விரிவான வேவு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மிகுந்த இடர்களின் மத்தியில் வேவு வீரர்கள் இரவைப் பகலாக்கி முல்லைப் படைத்தளத்தின் அமைப்பை அறிந்தார்கள்.

"தாக்குதல் திட்டம்"

ஓயாத அலைகள் - 01 தாக்குதல் திட்டமானது அனைத்துச் செயற்பாடுகளும் நடைமுறையில் ஒத்திகை பார்க்கப்பட்டு மிகவும் துல்லியமாகத் தீட்டப்பட்டது. எடுத்துக்காட்டாக எதிரித்தளத் தின் வெளிச்சுற்றுக் காப்பு வரிசையின் கொலை வலயத்தினுள் அணிகள் நகர்த்தப் பட்டே நகர்விற்கான நேரங்கள் பெறப்பட்டு நேரத்திட்டமிடல் மேற்கொள்ளப்பட்டது.

"தாக்குதல் திட்டமானது பின்வரும் படி முறை களைக் கொண்டிருந்தது"

எதிரியின் வெளிச்சுற்றுக் காப்புவரிசையில் ஊடுருவல் பாதைகளை உருவாக்குதல்.

அப்பாதையினூடாக ஊடுருவும் அணிகள் வெளிச்சுற்றுக் காப்பு வரிசையிலுள்ள காப் பரண்களைக் கைப்பற்றுதல்.

ஊடுருவல் பாதைகள் மற்றும் கைப்பற்றப்பட்ட காப்பு வரிசையிலுள்ள சாதகமான பாதை களால் உள்நுழையும் அணிகள் பிரதேசத் தேடியழிப்பை மேற்கொண்டு வெளிச் சுற்றுக்காப்பு வரிசைக்கும் தளத்தின் மையப் பகுதிக்கும் இடையேயான பிரதேசத்தைக் கட்டுப்பாட்டினுள் கொண்டு வருதல்.

தாக்குதல் ஆரம்பித்த உடனேயே தளத்தின் மையப்பகுதி நோக்கி நகரும் அணிகள்

தளத்தின் மையப்பகுதியைக் கட்டுப்பாட்டினுள் கொண்டுவருதல்.

கடலூடாகவும் கடற்கரையில் அதற்குச் சமாந்தரமாகவும் ஊடுருவும் அணிகள் கடற்கரையைக் கட்டுப்பாட்டினுள் கொண்டுவந்து தளத்திற்கான கடல்வழி ஆதரவைத் துண்டித்தல்.

"இதனைத் தவிரப் பின்வரும் பணிகளும் திட்டமிடப்பட்டன"

தளத்திற்கு மணலாற்றுப் பிரதேசத்திலிருந்து தரைவழி ஆதரவு வழங்கப்படுதலைத் தடுத்தல்.

தளத்திலிருந்து மணலாற்றுப் பிரதேசத்தை நோக்கிப் படையினர் பின்னகர் வதைத் தடுத்தல்.

தளத்தை அண்டிய பிரதேசங்களில் தரையிறக்கம் மேற்கொள்ளப்பட்டுத் தளம் வலுவட்டப்படுவதைத் தடுத்தல்.

ஒட்டுமொத்தத்தில் முழுமையான வெற்றியை உறுதிப்படுத்துவதற்காக

துல்லியமானதும் விரிவானதுமான வேவு நடவடிக்கை.

விரிவானதும் நுணுக்கமானதுமான தாக்குதல் திட்டம்.

துணிவுமிக்கதும் புதுமையானதுமான அரை மரபுவழி (Semi-conventional) தாக்குதல் உத்திகள்.

விரிவான பின்னணி ஏற்பாடுகள்

துல்லியமான தகவல்களின் அடிப்படையில் வழங்கப்பட்ட விரிவான தொடர் ஒத்திகைப் பயிற்சிகள்.

இரகசியக் காப்பு.

ஏமாற்று நடவடிக்கைகள்.



எதிரி எதிர்பார்க்காத வகையிலான மறைமுகச் சூட்டுப் படைக்கலங்களின் வினைத் திறனான பயன்பாடு.

போதியளவான ஆளணி, படைக்கல ஒதுக்கீடு. என்பவற்றுடன் ஓயாத அலைகள் - 01 தாக்குதல் திட்டமிடப்பட்டது.

"தாக்குதல்"

திட்டத்திற்கமைய தமது குறியிலக்குப் பிரதேசங்களினுள் ஊடுருவிய தாக்குதல் அணிகள் 18 ஆம் நாளன்று காலையில் தளத்தின் பெரும்பகுதியைத் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்தன. குறிப்பாகக் கடற்கரை முழுமையாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டது. படையினர் 6 ஆவது விஜயபாகு படையணியின் தலைமையகம் அமைந்திருந்த பகுதிக்குள் முடக்கப்பட்டனர். இவ்வாறு முடக்கப்பட்ட படையினர் தமக்கு அண்மையிலுள்ள கடற்கரையைத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கான தாக்குதல்களை மேற்கொண்ட போதும் அவை அனைத்தும் விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டன.

"கடற்புலிகளின் பெரும் எதிர்ச்சமர்"

இதேசமயம் சிறீலங்காக் கடற்படை தனது உச்சத்திறனைப் பயன்படுத்தி முல்லைப் படைத்தளத்தின் கடற்கரையைச் சென்றடைய மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் கடற்புலிகளால் முறியடிக்கப்பட்டன. 15 மணித்தியாலங்களாகச் சிங்களக் கடற்படையின் உச்சப் பலத்தையும் சிங்கள வான்படையின்



வான் கலங்களையும் எதிர் கொண்ட வண்ணம் கடற்புலிகள் வீரத்துடன் எதிர்ச்சமர் புரிந்தனர்.

"வலுவூட்டலிற்கான தரையிறக்கம்"

முல்லைத் தளத்தின் கடற்கரையில் ஒரு கடல்வழித் தரையிறக்கம் சாத்தியமற்றுப் போகவே முல்லைத் தளத்திற்குத் தெற்கே 3 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள சிலாவத்தைப் பிரதேசத்தில் 18 ஆம் நாளன்று மாலையில் ஒரு வான்வழித் தரையிறக்கத்தைச் சிங்களப் படைகள் மேற்கொண்டன. திரிவிட பகர - என்று பெயர் சூட்டி மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையில் கிபிர் மற்றும் புக்காரா குண்டு வீச்சு வானூர்திகள், ஆஐ-24 தாக்குதல் உலங்கூர்திகளின் தாக்குதல் ஆதரவுடன் முதற்கட்டமாக ஆஐ-17 உலங்கூர்திகளில் கொண்டுவரப்பட்ட கொமாண்டோக்கள் தரையிறக்கப்பட்டனர்.

இவ்வாறு தரையிறக்கப்பட்ட கொமாண்டோக்களைக் கொண்டு பாதுகாப்பான தரையிறக்க வலயம் ஒன்றை உருவாக்கியபின் கடல்வழித் தரையிறக்கத்தை மேற்கொள்வதே படையினர் நோக்கமாக இருந்தது. 18 ஆம் நாளன்று அவர்களின் அந்த நோக்கம் ஈடேறக் கடற்புலிகள் அனுமதிக்கவில்லை. அத்துடன் இவ்வாறான தரையிறக்கம் ஒன்றை எதிர்பார்த்திருந்த விடுதலைப் புலிகளின் படையணிகள் தரையிறங்கிய கொமாண்டோக்களை 18 ஆம் நாள் இரவே வளைத்துக்கொண்டன.



"தளம் முழுமையான கட்டுப்பாட்டில் வந்தது"

இதேசமயம் 18 ஆம் நாள் மாலையில் முல்லைத் தளத்தினுள் முடங்கிப் போயிருந்த படையினர் மீது செறிவான நேரடி வன்கலச் சூட்டாதரவுடன் நெருங்கித் தாக்கிய விடுதலைப் புலிகளால் படையினர் அனைவரும் அழிக்கப்பட்டு அன்றிரவே படைத்தளம் விடுதலைப் புலிகளின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது.

"ரணவிரு மூழ்கடிக்கப்பட்டது"

19 ஆம் நாளன்று சிலாவத்தையில் தரையிறங்கிய படையினர் கடல்வழியால் வலுவட்டப் படுவதற்குக் கடற்புலிகள் அனுமதிக்கவில்லை. அன்று மாலை 4.30 மணியளவில் தரையிறக்க முயற்சியில் ஈடுபட்டிருந்த சங்காய் 3 வகைப் பீரங்கிப் படகான ரணவிரு கடற்கரும்புலிகளின் தாக்குதலால் மூழ்கடிக்கப்பட்டது. அன்றும் சிங்களப் படைகளிற்கு வான்வழித் தரையிறக்கமே சாத்தியமானது. அதேசமயம் தரையிறங்கிய படையினர் மீதான விடுதலைப் புலிகளின் நெருங்கித் தாக்குதல்களும் எறிகணைத் தாக்குதல்களும் ஆரம்பமாகின.

"ஆஐ-24 சேதமாக்கப்பட்டது"

20 ஆம் நாளன்றும் கடல்வழித் தரையிறக்கம் சாத்தியமற்றுப்போக சிங்களப் படைகளின் ஒரேயொரு நம்பிக்கையாக இருந்த வான் வழித் தரையிறக்கத்திற்கும் ஆபத்து ஏற்பட்டது. விடுதலைப் புலிகளின் எறிகணை வடிவில் வந்த அந்த ஆபத்து தரையிறக்க வந்த ஒரு ஆஐ-17 உலங்கூர்தியைச் சேதமாக்க அன்று வான்வழித் தரையிறக்கமும் சாத்தியமற்றுப் போனது.

"புலிகளின் இறுக்கமான முற்றுகைக்குள் தரையிறக்கப்படைகள்"

21 ஆம் நாளன்று பலத்த முயற்சியின் பின் ஒரு கடல்வழித் தரையிறக்கத்தைச் சிங்களக் கடற்படை மேற்கொண்டது. இவ்வாறு படையினர் தரையிறக்கப்பட்டு வலுவூட்டல் மேற்கொள்ளப்பட்டபோதும் அந்தப் படையினரால் புலிகளின் முற்றுகையை உடைத்துக்கொண்டு நகரமுடியவில்லை.

"தரையிறக்க முயற்சிகள் பயனற்றுப் போயின"

22 ஆம் நாளன்றும் தரையிறக்க முயற்சிகள் சாத்தியமாகவில்லையாயினும் சிங்களப் படைகள் தமது தரையிறக்க முயற்சிகளைத் தொடர்ந்தன. 23 ஆம் நாளன்று தரையிறக்க முயற்சியில் ஈடுபட்டிருந்த தரையிறங்கு கலமொன்று புலிகளின் எறிகணையில் சேதமடைந்தது. அத்துடன் கடற்கரும்புலிகளின் படகொன்று நெருங்கிச் சென்று மோதமுன்னர் வெடித்ததால் மற்றொரு தரையிறங்கு கலம் சேதங்களுடன் தப்பித்துக் கொண்டது. இதனால் அன்றும் தரையிறக்கம் சாத்தியமாகவில்லை.

"மீட்கவந்த படைகள் பெரும் அவலத்தின் மத்தியில் மீட்டெடுக்கப்பட்டன"

25 ஆம் நாளன்று கடல்வழித் தரையிறக்கம் சாத்தியமான போதும் புலிகளின் இறுக்கமான முற்றுகையை உடைத்துத் தரையிறங்கிய படைகளால் ஒரு அங்குலமேனும் முன்னகர முடியவில்லை. அத்துடன் புலிகளின் எறிகணைத் தாக்குதலால் தரையிறங்கிய படைகள் இழப்புக்களைச் சந்தித்துக் கொண்டிருந்தன.

இந்நிலையில் 26 ஆம் நாளன்று தரையிறங்கிய படைகளை மீட்டுச் செல்லவந்த தரையிறங்கு கலம் புலிகளின் எறிகணைத் தாக்குதலால் சேதங்களுடன் மயிரிழையில் தப்பித்துக் கொண்டது. இந்நிலையில் தரையிறங்கு கலம் மூலம் மிகுந்த இடர்களின் மத்தியில் தரையிறங்கிய படைகள் மீட்கப்பட்டன.

தரையிறங்கிய படைகளைக் களமுனையில் வழிநடாத்திய லெப்.கேணல். பஸ்லி லாபிர் இந்நடவடிக்கையில் கொல்லப்பட்டார். கேணல் லோரன்ஸ் பெர்னாண்டோ காயமடைந்தார். தரையிறங்கிய படையினரில் 75 இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டதுடன் மீட்பின்போது தப்பித்து ஓடிய படையினர் கடலில் எறிந்த 100 இற்கும் அதிகமான சுடுகலங்கள் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டன.

"1200 இற்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டனர்"

தரையிறக்கப்பட்ட படைகள் உட்பட 1,200 இற்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டனர். இரண்டு 122 மி.மீ ஆட்டிலறிப் பீரங்கிகள் உட்பட பெருந்தொகையான படைக்கலங்கள், அவற்றிற்கான வெடிபொருட்கள் என்பன கைப்பற்றப்பட்டன. இவை அனைத்திற்கும் மேலாகத் தமிழர் தம் பாரம்பரியப் பட்டினமாம் முல்லைப்பட்டினம் மீட்டெடுக்கப்பட்டது.

இந்த வெற்றிக்காக ஏழு கடற்கரும்புலிகள் உட்பட 314 மாவீரர்கள் தமது இன்னுயிர்களை அர்ப்பணித்து மாவீரர்களானார்கள்.

"அலைகள் ஓயாது"

ஓயாத அலைகள் - 01 நடவடிக்கை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டமையானது புலிகளின் புதிய பரிணாமத்தைப் பறைசாற்றியது. இந்த வெற்றியினால் புலிகளிற்குச் சாதகமான பல விளைவுகள் ஏற்பட்டன. யாழ். குடாவைச் சிங்களப் படைகள் வன்கவர்ந்தபோது வன்னிக்கு இடம்பெயர்ந்து அல்லற்பட்டு சோர்வுற்றிருந்த மக்கள் இந்த வெற்றியினால் புத்துணர்ச்சி பெற்றனர்.

புலிகள் பலமிழந்து விட்டார்கள் என்ற மாயை தகர்த்தெறியப்பட்டது. இவ்வாறு ஆரம்பித்த ஓயாத அலைகள் பின்னர் 02, 03 என ஓங்கியடித்துத் தமிழர்களினதும் தமிழீழ விடுதலைப் புலிகளினதும் பலத்தைப் பகைவனிற்கும் அனைத்துலகிற்கும் வெளிக்காட்டியது





கடந்த கால வரலாறு.

நமது மண் விடியும் வரை அலைகள் ஓயாது.

-தமிழீழ விடுதலைப் புலிகளின் சமர் ஆய்வு மையம் -

AFFORDABLE REFRIGERATION SERVICES INC



We Sell. Install used &
new Walk in Cooler, Walk in Freezer

Kapil: 647.515.8643
kapil.afr@gmail.com

வன்னிச் சங்கம்-கனடா.
VUnited Care for Kids Inc.

Organization – Reg # 1913383. Charitable Organization.
Head office address: 8-3500 McNicoll Av, Toronto(ONT), M1V 4C7.
vunitedcare@gmail.com info@vcarekids.org TP:416-644-1113.

வன்னிப்பிரதேச மாணவர்களின் கல்விக்குக் கரம் கொடுப்போம்

கனடா வன்னிச்சங்கமானது கடந்த 25 ஆண்டுகளாக தாயகத்தில் உள்ள பெற்றோர்களை இழந்த, மாற்றுத்திறனாளியான அல்லது வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை , பல்கலைக்கழக மாணவர்களுக்கான புலமைப்பரிசில் மற்றும் பின்தங்கிய கிராம பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் போன்றவற்றினை வழங்கி வருகின்றமை யாவரும் அறிந்ததே.

அந்த வகையில் இவ் வருடம் க. பொ. த. சாதாரணதர பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் கிராமப்புற மாணவர்களுக்கு 5 பாடங்களுக்கான பரீட்சை வழிகாட்டல் வினாவிடைப் புத்தகங்களைப் புதிதாகப் பதிப்புச் செய்து இலவசமாக வழங்குவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம்.

எல்லா மாணவர்களுக்கும் இலவசமாகப் புத்தகங்களை அச்சிட்டு வழங்க போதியளவு நிதி வசதியின்மை எங்களிடம் உள்ளது. எனவே எங்கள் தமிழ் மாணவர்களின் அக்கறை கொண்ட கொடையாளர்களாகிய உங்கள் உதவியினை நாடி நிற்கின்றோம். வன்னிப் பிரதேசத்தில் உள்ள கிராமப்புறங்களில் வாழ்கின்ற வருவாய் குன்றிய மாணவர்களது கல்வி முன்னேற்றங்கருதி உங்களிடமிருந்து சிறு சிறு தொகையாகவேனும் நிதியுதவி தாருங்கள் என அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

உங்களால் மனமுவந்து தரப்படுகின்ற கல்வி உதவித் தொகைகள் அனைத்திற்கும் வருமானவரிக் கழிவு பற்றுச்சீட்டு (Charitable Donation Receipts) வழங்கப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

நிதி நன்கொடை செய்வதற்கு வங்கி இலக்கம் பெறுவதற்கு அழைக்கவேண்டிய தொலைபேசி இலக்கங்கள்:

வன்னிச் சங்கம்: 416-644-1113, நிதியாளர்:647-202-8286

e transfer: vunitedcare4kids@gmail.com

நிதி நன்கொடை செய்பவர்களுக்கு வரிக்கழிவுப் பற்றுச்சீட்டு வழங்குவதற்கேற்ற விபரங்கள் பெறுவதற்கு தயவு கூர்ந்து நிதியாளரைத் தொடர்பு கொள்ளவும்.

“நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவிப்போம்”

பொ. சிவசுதன் - செயலாளர்.
கனடா வன்னிச் சங்கம். 416-558-1917.

MORTGAGE

Residential/Commercial/Industrial & Investment Properies

SUBRA MORTGAGES INC.

- 1st, 2nd & 3rd Mortgages
- Purchase • Refinance
- Renewal • Switches
- Equity Line of Credit
- Pre-Approvals
- Self-Employed
- Multi Rental Properties
- New Immigrants

Mortgage In Any Situations



WE DEAL WITH ALL BANKS

- LOAN
- LINE OF CREDIT

MORTGAGE ALLIANCE
Independently Owned & Operated
Lic. No: M15001465, Brokerage No: 10530
Corp Off: 2005 Sheppard Ave E, Suite 200
North York, ON M2J 5B4

NESAN
416-908-5656
www.subra.com or www.nesan.ca
email:mortgage@subram.com

Office: 1585 Markham Rd, Unit 406, Scarborough ON M1B 2W1
Off: 416-660-5656/Fax: 647-351-3099/ Toll: 1-844-878-2721

சிறீலங்காவில் எவ்வகை மாற்றம் நிகழ்ந்தாலும் மாறாத தமிழர் தேசத்தின் மீதான ஆக்கிரமிப்பு!

நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

ஏப்பிரல் 24, 2022

சிறீலங்காவில் எவ்வகை மாற்றம் நிகழ்தாலும் தமிழர் தேசத்தின் மீதான அபகரிப்பு நீங்காது என்பதனையே மூதூர் சம்பவம் வெளிக்காட்டுவதாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.



ஈழத்தமிழர்களின் பண்டைய அடையாளங்களில் ஒன்றாக திருகோணமலை மூதூர் 64ம் கட்டையில் உள்ள இராஜவந்தான் மலையில் மாணிக்கப் பிள்ளையார் ஆலயம் அழிக்கப்பட்டு வருவதோடு பௌத்த சின்னங்களை நிறுவுவதற்கான வேலைப்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நேற்று சனிக்கிழமை (ஏப்ரல் 23) தமிழ் மக்கள் மற்றும் சைவ குருமார்கள் பண்டைய வழிபாட்டு தளத்திற்கு சென்ற போது, பௌத்த பிக்கு ஒருவர் காவல்துறையினர் மற்றும் புலனாய்வாளர்கள் சகதிம் அவர்களை தடுத்து நிறுத்தி அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் கருத்தினை வெளியிட்டுள்ள நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சு, சிறீலங்காவில் ஆட்சியாளர்களுக்கு எதிராக தென்னிலங்கையில் போராட்டங்கள் இடம் பெற்று வருவதோடு, ஆட்சி மாற்றம், அமைச்சரவை மாற்றம், அரசியலமைப்பு மாற்றம், 21ம் திருத்தச்சட்டம் என பல மாற்றங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

தமிழர் தாயக மக்களையும் தென்னிலங்கை போராட்டத்தோடு பயணிக்குமாறு அழைப்புக்கள் விடுக்கப்பட்ட போதும், தமிழ்மக்கள் மௌனமான முறையில் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இந் நிலையில் மூதூர் சம்பவமானது, பொருளாதார நெருக்கடியினால் சிக்குண்டுள்ள தென்னிலங்கை, அதில் இருந்து மீளுவதற்கு பல மாற்றங்களை முன்வைத்திருந்தாலும், அதன் அரச இயந்திரம் (கட்டமைப்பு) தமிழர் தேசத்தின் மீதான ஆக்கிரமிப்பு, அபகரிப்பு ஓயாது என்பதனையே வெளிக்காட்டுகின்றது.

தொல்பொருள் செயலணி, வனஜீவராசிகள் இலக்கா என தனது பல்வேறு திணைக்களங்கள் ஊடாக தமிழர் தாயகத்தின் மீதான பௌத்த மயமாக்கல், சிங்கள மயமாக்கல் முன்னெடுக்கப்பட்டு வருவதோடு, இதற்கு துணையாக தமிழர் தேசத்தினை ஆக்கிரமித்து நிற்கின்ற இராணுவமே இருக்கின்றது.

பொருளாதார நெருக்கடியில் சிக்குண்டுள்ள சிங்கள தேசம், இதற்கு முதன்மைக் காரணமாக உள்ள தனது இராணுவச் செலவீனங்கள் பற்றி மூடிமறைத்து, தனது ஆக்கிரமிப்பு இராணுவத்தை கட்டிக்காத்து, தொடர்ந்தும் தமிழர் தேசத்தின் மீதான ஆக்கிரமிப்பையும், கட்டமைப்புசார் இனஅழிப்பையும் மேற் கொள்ளவே என்பது மூதூர் சம்பவத்தின் ஊடாக மீண்டும் வெளிப்படுகின்றது என தெரவிக்கப்பட்டுள்ளது.



Ontario Government Recognized Thamil Genocide Education Week (11 May to 18 May) in Canada



தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

வல்வைப் படுகொலை 13 மே 1997

யாழ்மாவட்டத்தில் பருத்தித்துறைப் பகுதியில் வல்வைக்கிராமம் உள்ளது. 10.05.1985 அன்று சிறீலங்கா இராணுவம் வல்வைக் கிராமத்தைச் சுற்றி வளைத்தது 24 இளம் ஆண்களை கைது செய்தது. அங்குள்ள ஒரு பொதுமண்டபத்தில் இவர்கள் அனைவரும் அடைக்கப்பட்டனர். பின்னர் இம்மண்டபத்தின் மேல் குண்டு வீசப்பட்டு அங்கு அடைத்து வைக்கப்பட்டிருந்த 24 ஆண்களும் கொல்லப்பட்டனர். அதே சமயத்தில் அவ்வூர் கோவில் கேணியருகே மேலும் 12 பொது மக்கள் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப் பட்டனர். இதைவிட மேலும் 34 பொதுமக்கள் அன்று கொல்லப்பட்டனர். அவ்வூரில் அன் றைய தினம் 70 பொதுமக்கள் சிறீலங்கா இராணுவத்தால் கொல்லப்பட்டனர்.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

முள்ளிவாய்க்கால் படுகொலை – 13 மே 1997

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறை பற்றுப் பிரதேச செயலர் பிரிவில் முல்லைத்தீவு நகரத்திலிருந்து பரந்தன் வீதியில் சுமார் ஐந்து கி.மீ. தொலைவில் அமைந்துள்ள கிராமமே முள்ளிவாய்க்கால் மேற்குப் பிரதேசமாகும். இக்கிராமத்தின் பொருளாதாரம் மீன்பிடி, விவ சாயம் என்பனவற்றிலேயே தங்கியுள்ளது.

1997ஆம் ஆண்டில் முள்ளிவாய்க்கால் கிரா மத்தில் யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்குப் போன்ற பல்வேறு பகுதிகளிலுமிருந்து போர்ச் சூழல் காரணமாக இடம்பெயர்ந்து வந்த மீன வக் குடும்பங்கள் இங்குள்ள கடற்கரை யோரங்களில் செறிவாகக் குடியேறி கடற் றொழிலில் ஈடுபட்டுவந்தார்கள்.

13.05.1997ஆம் ஆண்டு முற்பகல் விமானப் படையின் "கிபிஉ" விமானங்கள் இப்பகுதியில் கரைவலை மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த வர்கள் மீது குண்டுத்தாக்குதலை நடத்தியதில் கரைவலைத் தொழிலில் ஈடுபட்டுக்கொண் டிருந்த ஒன்பது மீனவர்கள் உயிரிழந்ததுடன், வீதி புனரமைப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மூவர் உட்பட பத்துப் பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. ஆறுமுகம் சிவாஸ்மகேந்திரம் - கடற் றொழில் 38
02. நாகராசா தவரத்தினராசா - விவசாயம் 24
03. சின்னையா ஆறுமுகம் - கடற்றொழில் 68
04. பொன்னம்பலம் பாக்கியராசா - கடற் றொழில் 60
05. சுப்பிரமணியம் அஜந்தன் - கடற்றொழில் 15
06. சிவகுரு மகேந்திரன் - கடற்றொழில் 39
07. சிவகரன் துதிகரன் - கடற்றொழில் 18
08. மல்லி - 42
09. இராமசிங்கம் இராசையா - கடற்றொழில் 73

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக் கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. ரவீந்திரன் 28
02. செ.கோணேஸ்வரன் 33
03. ஆ.சுதன் 20
04. கதிர்காமு சிங்கம் 25
05. கணபதிப்பிள்ளை நாகலிங்கம் 48
06. செல்வநாதன் சிறீபத்மநாதன் 31
07. க.கணேசலிங்கம் -
08. ஜெ.ரவிக்குமார் 15

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

உதயன் பணிமனை படுகொலை – 02 மே 2006





ஊடகங்கள் ஒரு நாட்டிற்கும் சமூகத்திற்கும் இன்றியமையாத ஒன்றாகக் காணப்படு கின்றன. இவ் ஊடகங்கள் சுதந்திரமான முறையில் செயற்படும் போதே அவற்றால் சிறப் பாகவும் நடு நிலைமைத் தன்மை யாகவும் செயற்படமுடியும். இலங்கையின் ஊடகங் களின் சுதந்திரம் பல வருடங்களாகப் பறிக்கப் பட்டு வருகின்றது. அந்தவகையில் யாழ்ப் பாணம் உதயன் பத்திரிகை நிறுவனம் மீதான தாக்குதலும் ஊடக சுதந்திரத்திற்கு சாவு மணியடிக்கும் சம்பவமாகவே அமைகின்றது.

02-05-2006 அன்று மாலை உதயன் பணி மனை தனது வழமையான பணிகளுடன் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. அடுத்த நாள் பத்திரிகைக்கான தயார்ப் படுத்தலில் பணியாளர்கள் ஈடுபட்டுக்கொண்டி ருந்தனர். இவ்வேளையில் இரவு 7.30 மணியளவில் உதயன் பணி மனையினுள் புகுந்த சிறீலங்கா இராணு வத்தினரும் ஈ.பி.டி.பி உறுப்பினர்களும் அங்கு பணிபுரிந்து கொண் டிருந்த பணியாளர்கள் மீது கண் மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொண்டனர். இதில் இரண்டு பணியாளர் உயிரிழந்தனர் மூன்று பேர் படுகாயமடைந் தனர். மேலும் அங்கு பல இலட்சம் ரூபா பெறு மதியான சொத்துக்களும் சேதமாக்கப்பட்டன. இத்தாக்குதலானது தமிழ் ஊடகத்துறைக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைவ துடன் மிகவும் காட்டு மிராண்டித்தனமானது என இலங்கை பத்திரிகையாளர் சங்கம், இலங்கை ஊடக வியலாளர் ஒன்றியம், ஊடகத்துறை அமைப் புக்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப் பினர்கள் எனப் பலரும் தமது கண்டனங்களை வெளியிட்டனர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. பஸ்ரியன் ஜோர்ச் சகாயதாஸ் (சுரேஸ்), 30
02. இராசரத்தினம் ரஞ்சித்குமார், 28

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)





உதயன் பணிமனை படுகொலை 02 மே 2006







நெல்லியடிப் படுகொலை – 04 மே 2006

யாழ்ப்பாணம் வடமராட்சிப் பகுதியில் முச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த இளைஞர்கள் மீது இலங்கை இராணுவத்தினாரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஏழு இளைஞர்கள் உயிரிழந்தனர்.

இச்சம்பவமானது 04-05-2006 அன்று பிற்பகல் 2.15 மணியளவில் யாழ் வடமராட்சி நெல்லியடிச்சந்திக்கு 300 மீற்றர் தொலைவில் நவின்டிலில் அமைந்துள்ள சிறீலங்கா இராணுவத்தினரின் புலனாய்வுத்துறை முகாமிற்கு அண்மையாக இடம்பெற்றது. இவர்கள் சகநண்பர் ஒருவரின் விருந்து உபசாரத்தில் கலந்து கொள்வதற்காக முச்சக்கரவண்டிகளில் சென்றுகொண்டிருக்கும் போது இச்சம்பவம் இடம்பெற்றது. இச்சம்பவத்திற்கு சற்று முன்னதாக இப்பகுதி இராணுவமுகாம் மீது கைக்குண்டுத் தாக்குதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது. இதில் மூன்று இராணுவப் புலனாய்வாளர்கள் காயமடைந்தனர். அதன் பின்னரே இப்படு கொலைச் சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. செல்வராசா சுமன், 22
02. வேலுப்பிள்ளை நிமலன், 21
03. நாகரத்தினம் நகுலேஸ்வரன், 18
04. பாலச்சந்திரன் கிரிசாந்தன், 18
05. தாமோதரம்பிள்ளை சர்மிலன், 17
06. நவரட்ணராஜா நாசண்ணா, 19
07. சுப்பிரமணியம் சுபாஸ், 19

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

மந்துவில் படுகொலை – 06 மே 2006

யாழ். மந்துவில் கோலத்தம்மன் ஆலய கும்பாபிஷேக முன் ஏற்பாடுகளைச் செய்வதற்காக 06.05.2006 அன்று இரவு எட்டு இளைஞர்கள் ஆலயத்தில் தங்கியிருந்து பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். அப்போது இரவு 7.00 மணியளவில் அப்பகுதிக்கு வந்த இலங்கை இராணுவத்தினர் அங்கிருந்தவர்களை விசாரித்துவிட்டுச்சென்றனர். பின்னர் இரவு 11.00 மணியளவில் மீண்டும் வேறு ஒரு இராணுவ அணி அப்பகுதிக்கு வந்தது. அதனைத் தொடர்ந்து நள்ளிரவு 12.00 மணியளவில் ஜீப் வாகனம் ஒன்று அங்கே வந்ததைத் தொடர்ந்து பின்னிரவு 1.00 மணியளவில் துப்பாக்கி வேட்டுச்சத்தங்கள் கேட்டன. அதனைத் தொடர்ந்து அவலக் குரல்கள் கேட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். இராணுவ அச்சம் காரணமாக வீடுகளுக்குள் முடங்கிக்கிடந்த மக்கள் காலை வேளையில் தமது உறவுகளைத் தேட ஆரம்பித்தனர். அப்போது ஆலயத்தின் தேர்முட்டி சுவர்ப்பகுதியிலும் வீதி ஓரங்களிலும் மண்ணால் மறைக்கப்பட்ட இரத்தத் தடயங்கள் காணப்பட்டன.

பின்னர் இவர்களது உயிரற்ற உடல்கள் வடமராட்சிக்கும் தென்மராட்சிக்கும் இடையிலுள்ள கப்பூது கண்டல் காட்டுப்பகுதியில் இருப்பதாகக் கூறப்பட்ட போதும் பின்னர் அப்பகுதியில் சடலங்கள் எதுவும் இல்லை என போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தகவல் தெரிவித்தனர். இப்பகுதிக்கு மக்கள் எவரும் செல்ல அனுமதிக்கப்படவில்லை. காணமற்போன எட்டுப் பேரும் இலங்கை அரசபடைகளினாலேயே படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என அப்பகுதிமக்கள் கூறுகின்றனர். இது தொடர்பாக இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, சாவகச்சேரி பொலிஸ் நிலையம் ஆகியவற்றில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. கந்தசாமி பரிமேலழகன், 22
02. இரத்தினம் தயாரூபன், 21
03. பொன்னம்பலம் பார்த்தீபன், 22
04. வைகுந்தவாசன் வைகுந்தகுமார், 22
05. இராமச்சந்திரன் இராசகுமார், 24
06. செல்வரட்ணம் சிவானந்தன், 24
07. மார்க்கண்டு புஸ்பகாந்தன், 26
08. இராசநாயகம்பிள்ளை சிவானந்தமூர்த்தி, 35

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை

அல்லைப்பிட்டி படுகொலை – 13 மே 2006







இலங்கையின் வடபுலத்தில் உள்ள யாழ் மாவட்டத்தின் தீவகப்பகுதியானது யாழ்நகரில் இருந்து தென்மேற்காக 15 கிலோ மீற்றர் துராத்தில் அமைந்துள்ளது. இப்பிரதேசம் இலங்கை கடற்படையினரது பூரண கட்டுப் பாட்டுப் பிரதேசத்தில் உள்ளது. 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் நாள் சிறீ லங்கா அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலி களுக்கும் இடையில் சமாதான ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னரும் அல்லைப்பிட்டி சோதனைச் சாவடியில் மக்கள் அடையாள அட்டை, உடற் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதன் பின் னரே தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்பட்டு வந் தனர். இப்பிரதேசத்தில் கடற்படையினருடன் இணைந்து ஈ.பி.டி.பி உறுப்பினர்களும் செயற் பட்டு வருகின்றனர். இலங்கையின் புதிய சனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்ட பின்னர் தமிழ்மக்கள் மீதான வன் முறைச் சம்பவங்கள் தீவிரப்படுத்தப்பட்டன. அதன் ஒரு அங்கமாக அல்லைப்பிட்டி, வேலணை, புளியங்கூடல் ஆகிய இடங்களில் 13-05-2006அன்று இடம்பெற்ற படு கொலைச்சம்பவமானது அமைகின்றது.

யாழ் தீவகம் அல்லைப்பிட்டியில் 13-05-2006 அன்று இரவு அல்லைப்பிட்டி பிலிப்நேரியார் தேவாலயத்திற்கு அண்மையிலுள்ள செல்லத் துரை அமலதாஸ் என்பவரது வீட்டில், அயலி லுள்ள மக்களும் இராணுவ அச்சம் காரண மாக இரவில் தங்குவது வழக்கமாக இருந்தது. அன்றும் அப்படியே அங்கு கூடியிருந்தனர். அவ்வேளை அப்பகுதிக்கு வாகனங்களில் வந்த கடற்படையினர் அப்பகுதி வீடுகளிற்குள் சென்று மின் விளக்குகளை அணைத்து விடுமாறு ஒட்டுக்குழுக்கள் மூலம் மிரட்டினர். பின்னர் அமலதாஸ் என்பவரது வீட்டிற்குச் சென்று அங்கு உறங்கிக் கொண்டிருந்த பொது மக்கள் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதில் அவ்வீட்டில் தங்கியிருந்த 11 பேரில் 08பேர் உயிரிழந்தனர். இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 04 பேர் உள்ளடங்குவர். இதில் தமது பெற்றோருடன் உறங்கிக்கொண்டிருந்த் 04 மாதச்சிறுவனும் 04 வயதுச் சிறுவனும் பரிதாபகரமாக உயி ரிழந்தார்கள். காயமடைந்த ஏனையோரை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்ல அனு மதிக்கப்படாததால் காயமடைந்தவர்களில் ஒருவர் பின்னர் உயிரிழந்தார்.

இதே வேளை சில கடற்படையினர் புளியங் கூடலிலுள்ள சண்முகலிங்கம் என்பவரது வீட்டுக்குள் புகுந்து அக்குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேரைச் சுட்டுக்கொன்றனர். அடுத் தாக வங்களாவடி என்ற இடத்தில் தேனீர்ச் சாலை உரிமையாளரான செந்தூரன் என் பவரது வீட்டிற்குள் புகுந்து செந்தூரன் என் பவரைச் சுட்டுக்கொன்றனர். இவ்வாறாக அன்றிரவு 13 பொதுமக்கள் உயிரிழந்தனர்.


பல பொதுமக்கள் காயப்படுத்தப்பட்டனர். பல கடைகள், பல இலட்சம் பெறுமதியான சொத் துக்கள் அழிக்கப்பட்டன.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. பாலசாமி கேதீஸ்வரன், 25
02. கேதீஸ்வரன் அனெக்எஸ்தர், 25
03. கேதீஸ்வரன் தனுஷ்காந், 04
04. கேதீஸ்வரன் யதுசன், 04 மாதம்
05. ஆபிரகாம் றொபின்சன், 28
06. செல்லத்துரை அமலதாஸ், 28
07. கணேஸ் நவரட்ணம், 50
08. யோசப் அந்தோனிமுத்து, 64
09. சின்னத்துரை சிவநேசன், 46
10. எம்.சண்முகலிங்கம், 60
11. சண்முகலிங்கம் பரமேஸ்வரி, 55
12. சண்முகலிங்கம் காந்தரூபன், 22
13. இரத்தினம் செந்தூரன், 22

முல்லைத்தீவு பாதுகாப்பு வலையப்படுகொலை 10 மே 2009

முல்லைத்தீவில் 10.05.2009 ஒரே இரவில் 2,000 பொதுமக்கள் படுகொலை செய்யப் பட்டார்கள். சனிக்கிழமை 10 மே 2009 இரவு முதல் ஞாயிற்றுக்கிழமை காலை வரை "பாதுகாப்பு வலயத்தில்" சிறீலங்கா இரா ணுவம் கண்மூடித்தனமாக எறிகணை வீச்சு நடத்தியது, எராளமான பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட 2,000 க்கும் மேற்பட்ட பொதுமக்களை படுகொலை செய்ததாக வன்னியில் உள்ள மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன. தற்காலிக மருத்துவமனையில் இறந்த உடல்கள் எல்லா இடங்களிலும் சிதறிக் கிடந்தன. சர்வதேச அளவில் தடைசெய்யப் பட்ட இராசயன (கிளஸ்டர்) குண்டுகள் மற்றும் மல்ரி ராக்கெட் மற்றும் பீரங்கிகளிலிருந்து சுடப்பட்ட குண்டுகள் போன்ற ஒவ்வொரு வகையான ஆபத்தான ஆயுதங்களாலும் பாதுகாப்பு வலயம் என்று அழைக்கப்பட்ட பகுதி ஒரு கொலைக் களமாக மாற்றப்பட்டு இருந்தது. இறந்த உடல்கள் பதுங்கு குழி களிலும், தார்ச்சாலைக் கூடாரங்களுக் குள்ளும் காணப்பட்டன.





என் கண்களே சாட்சி

மற்றவை நேரில்

எஸ். பி. கிருஷ்ணன் (வேரற்கேணியன்)

பொறுப்பதிகாரியின் எதிரே போய் நின்று வணக்கம் சொன்னார் வியாசர். “வணக்கம் ... என்ன விசயம்? உட்காருங்க” சொன்னார் அதிகாரி.

வியாசர்:
“நானும் மனைவியும் கொழும்புக்குப் போக வவுனியாவில் ரயில் ஏறவே பஸ்ல வந்தனாங்கள். ஆனால் எங்களை இங்கே கொண்ட வந்து இறக்கி விட்டார்கள். தயவு செய்து நாங்கள் போக அனுமதி தாருங்கோ...”

“நீங்க எங்கேயிருந்து வந்தது...”

“வள்ளிப்புனத்திலயிருந்து”

“அது எங்கேயிருக்கு வன்னியில் எந்த பக்கம்?”

“முல்லைத்தீவில ஒரு கிராமம்”

“ஓ அங்கே நிரந்தர வாசியா?”

“இல்லை... கிளிநொச்சியிலயிருந்து இடம் பெயர்ந்து போனது”

“ஏன் இடம் மாறினீங்கள்”

“அங்கே ஷெல் குண்டுகள் விழுந்தன... விமானங்களும் குண்டுகளைப் போட்டன... சிலர் செத்துப் போனார்கள். பலர் காயப்பட்டு அஸ்பத்திரியில சிகிச்சை பெறுகிறார்கள்.”



“உண்மையைச் சொல்” என மனம் இடித்துரைத்தது.

“ஒருவர் மட்டும்...” என்றார்

“எங்கே போறது நாங்கள்”

“வேற இடத்துக்கு”

வியாசர் மனைவியைப் பார்த்து “வேற கொட்டி தால் சொல்லிக் குடுப்பான்கள், எங்கட மனுசர் அதில் கெட்டிக்காரர்... எங்கட கஸ்டகாலம்... இதுக்குள்ள வந்து அகப்பட்டிட்டம்... நாங்கள் வெளிநாட்டுக்கு போகவெண்டு வந்தனாங்கள் என்டு சொன்னீங்களா, பெரியவருக்கு? இந்தத் தகரக் கொட்டில்ல கிடந்து சாக வேண்டியது தானா? இராணி அழுதாள், அரற்றினாள், திட்டினாள், யார் யாரையோ பெயர் குறிப் பிடாமல் அவன் இவன் என்று.

“என்ன அழுகுரல் கேட்கிறதே!... ஆராய அயல் கொட்டில் காரர் வந்து எட்டிப்பார்த்தார்கள். என்ன பிரச்சினை? ஏன் அம்மா அழுறா? என்று கேட்டான் ஒரு இளைஞன். அவன் பெயர் சாந்தன்.

வியாசர் சொன்னார் “ தம்பி நாங்கள் சுவிசில இருக்கிற எங்கட மகனோட போய் இருக்க வெண்டு வந்தனாங்கள்... இடையில் எங்களை வழிமாத்தி கொண்டு வந்து இப்படி வச்சிருக்கிறான்களே. பெரியவரிட்டை போய் கேட்டால், அவர் சில கேள்விகள் கேட்டார், பிறகு இன்னும் விசாரிக்க வேணும் இருங்கோ என்றிட்டார்”.

“வயதான எங்களை இந்த தகரக் கொட்டில்ல இருக்க வச்சால் நாங்கள் வரண்டு சாகிறதே? என்று இராணி சொன்னாள்.

சற்றுப் பொறுத்து இராணி கேட்டாள் “நீங்கள் எந்த ஊர் தம்பி?” சாந்தன் சிரித்து விட்டுச்



“அதெல்லாம் நீங்கள் நேரில் பார்த்ததா?”

பார்த்தேன்... நான் பரந்தன் பக்கம் போய்க் கொண்டிருந்த போது ஒரு வீட்டின் மேல் நாலு குண்டுகளை போட்ட கிபிர் விமானத்தைப் பார்த்தேன். அந்த வீட்டில் வசித்த ஐந்து பேரும் பக்கத்து வீட்டுக்காரர் இரண்டு பேரும் பலி யானார்கள். அடுத்தடுத்த வீடுகளின் இருந்த பன்னிரண்டு பேர் காயப்பட்டனர்.

“கிபிர் தான் குண்டு போட்டதெண்டு உங்களுக்கு எப்படித் தெரியும்?” உங்கட பொடிய லிடத்திலயும் கிபிர் வேகத்தில் பறக்கும் விமானங்கள் இருக்கே? 250 கிலோ குண்டுகளும் இருக்கே?...”

கேள்வி தொடர்ந்தது.

“உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்”

“ஐந்து பேர் ஆண்கள் இரண்டு, பெண்கள் மூன்று”

“எல்லாரும் புலிகளா”

இந்தக் கேள்வி அவரை திடுக்கிட வைத்தது.

“அவர் இப்போ எங்கே?”

“அவருக்கு காயம்... ஷெல் துண்டு அடிச்ச காயம்... ஆஸ்பத்திரில இருந்தார். இப்ப எங்கே இருக்கிறார் எண்டு தெரியாது சேர்”

“அவன்ட இயக்க பெயர் என்ன”

“விக்ரமன்”

“நீங்க உண்மை பேச வேணும் பொய் சொன்னால் நீங்கள் வெளில போக முடியாது. போய் இருங்க... இன்னும் விசாரிக்க இருக்கு...”

வியாசர் எழுந்தார்.

அதிகாரி காவல் சிப்பாயை அழைத்து “இவரை கூட்டிப்போ” என சொல்லுவது போல அவனுக்கு தாய் மொழியில் கட்டளையிட்டார்.

அவன் வாங்க என வியாசரை அழைத்துப் போனான்.

அவர் இருந்த கூடாரத்தின் முன்னால் அவரை நிறுத்தி, உங்கட “வைப கூப்பிடுங்கள் உங்கட சாமான்கள் எடுத்துக் கொண்டு என்னோட வாங்க”

லுக்கு போகட்டாம், பாய், பொதியளை எடுத்து வா” என்றார்.

இருவருமாக அவன் பின்னால் நடந்தனர்.

தெருவைக் கடந்து, முகாமின் பின்பகுதிக்கு அவர்களைக் கூட்டிப்போன சிப்பாய் ஒரு தகரக் கொட்டிலைக் காட்டி இங்கே இருங்க என்றான், போய் விட்டான்.

உள்ளே போனார்கள், இராணி கையில் எடுத்து வந்த பாயைத் தரையில் விரித்துப் படுத்துக் கொண்டாள். கணவரைப் பார்த்துக் கேட்டாள் “என்ன, எங்களை வெளியில விட மாட்டினமா பெரியவர் என்ன சொன்னார்?”

வியாசரின் முகத்தில் படர்ந்த கவலை ரேகைகளைக் கண்டு திடுக்கிட்டவளாய்? “என்ன நடந்தது சொல்லுங்களேன்?... என விம்மலுடன் கேட்டாள்.

“இன்னும் விசாரிக்க வேணுமாம்”

“எனக்கெண்டால் பயமாயிருக்கு... தம்பியைப் பற்றியும் கேட்டவரே?”

“யாரும் எங்களை தெரிஞ்சவை இஞ்ச இருந்

சொன்னான் “யாதுமூரே... இப்ப அகதி முகாம்” நீங்கள் வாருங்கோ வந்து நிலாவோட இருந்து கதையுங்கோ, மனசுக்கு ஆறதலாய் இருக்கும்...”

“ஆர் தம்பி நிலா”?

“நிலா வேணி என்ர மனைவி”

சாந்தன் இருவரையும் கூட்டிப்போய் தனது மனைவிக்கு அறிமுகம் செய்து வைத்து “தேநீர் குடுங்கோ” என்றவாறு அவர்கள் அருகில் போய் அமர்ந்தான்.

நிலா வெந்நீர்ப் போத்தலில் இருந்த சாயநீரை இரண்டு அலுமினியக் குவளைகளில் ஊற்றி, சீனி கலந்து ஆற்றி எடுத்து வந்து இருவருக்கும் கொடுத்து “குடியுங்கோ” என்றாள் அவர்கள் குடிக்கும் வரை சற்று தூரத்தில் நின்றவள் திரும்பி வந்து அவர்கள் அருகில் இருந்தாள்.

அவர்களுக்கு ஆறுதல் சொல்லும் வகையில் நிலா, இராணியுடன் பேசினாள். என்ன அம்மா செய்கிறது?... எங்கட போதாத காலம்... வேற வழியில்லாமல் வந்த கூட்டுக் கிளியளாய் அகப்படடிருக்கிறம். அழுது கெஞ் சினாலும் திறந்து விடும் கருணையுள்ளம்

என் கண்களே சாட்சி
மற்றவை நேரில்

எஸ். பி. கிருஷ்ணன் [வேரற்றகேணியன்]

இந்த மனுசருக்கு இல்லை... எது நடந்தாலும் ஏற்றுக் கொள்ள வேண்டியது தான். இங்கே நடக்கிற சம்பவங்களை அச்சத்தோடும் கவலையோடும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். அடுத்தமுறை உங்களை விசாரணைக்கு கூப்பிடும் போது பணிவாய் தயவாய் உங்களை "வெளியில் போக விடுங்கோ" என்டு கேளுங்கோ... தைரியத்தை இழக்காமல் துணிவாய் பேசுங்கோ... சத்தியம், நீதி, தருமம் வெல்லும் என்பார்கள் கடவுள் ஏன் இப்படி எங்களைச் சோதிக்கிறானோ? என்ன பாவம் செய்தோம்? எங்கள் உழைப்புக்கும் தியாகத்துக்கும் ஒரு நாள் பலன் கிடைத்தேயாகும். நாங்களும் நிம்மதியாய் இருக்கும் காலம் வரும்"

"நீர் சொல்லுற தெல்லாம் சரிதான் மகளே... ஆனால் நாங்கள் நம்பியிருந்த நீதியும் தருமும் எங்களை ஏன் கைவிட்டது? அநீதியும் அதர்மமும்தானே அராஜகம் புரிகிறது..." இராணியின் வாதம்.

"அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்" இது எங்கள் மூதாதையர் நம்பிய நீதி, காலம் பதில் சொல:லும் அம்மா... கவலையை விடுங்கோ..."

"உனக்கு நல்ல அறிவிருக்கு... நல்ல மனம் படைச்ச பிள்ளை... நல்லாய் இருப்பாய்..." நிலாவின் கையைப் பற்றி தன் நெஞ்சில் வைத்து வாழ்த்தினாள் இராணி, இருவரும் பேசிக்கொண்டிருந்தவற்றை செவிமடுத்திருந்த வியாசர் வாய் திறந்தார்.

"அகதிகளா? சிறைக் கைதிகளா?... முகாம் வாழ்க்கைக்கு பழக்கப்பட்டு விட்டார்களா? வாலிபர்கள் பந்தடிச்சு விளையாடுகிறார்கள்... வளர்ந்தவர்கள் காட்ஸ் விளையாடுகிறார்கள். பெண்பிள்ளைகள் கூடிப்பேசி, சிரித்து பொழுது போக்குகிறார்கள்... ரேடியோ பெட்டியை சுற்றியிருந்து சினிமாப்பாட்டுக்கு தாளம் போடும் கூட்டம் ஒரு பக்கம்... தொட்டியைச் சுற்றி நின்று நெருக்குப்பட்டு நீராடிவிட்டு ஈரக்கூந்தலுடன் அன்னநடையில் வரும் நங்கையர்... எதிலும் ஆர்வமற்றர்கள் பகல் இரவு தெரியாத வராய் பாயில் கிடக்கிறார்கள். நாங்கள் இருப்பது பிரமாண்டமான முட்கம்பிக்கூடு. என்ற உணர்வேயில்லாதவர்கள். மேலே பாருங்கோ சுதந்திரமாய் மரக்கிளைகளில் பாடிவிளையாடும் பட்சிகளை... எங்களைப் பார்த்து " ஏ மனித அடிமைகளே! என அவை அழைப்பதுபோல் தோன்றவில்லையா?..."

மனக்கவலையை மறந்து சிரித்தாள் இராணி "இவர் பண்டிதர், புலவர் புறவைகளைப் பார்த்து பாட்டுப் பாடுவார்..." என்று நிலாவைப் பார்த்து சொன்னாள்.

ஆனால் அம்மா அவருக்கு தன் விடுதலை பற்றிய கவலை மாத்திரமல்ல ஒட்டுமொத்தமாக இருந்த முகாம் மக்களின் விடுதலை பற்றியும் சிந்திக்கிறார். போல் தெரிகிறது..." என்றாள் நிலா.

"ஆனால் நான் சிந்திப்பதால் மட்டும் அது நடக்கிற காரியமில்லையே மகள்."

"உண்மைதான்... அவரவர் தன் விடுதலையைப் பற்றி சிந்திக்க வேண்டிய கட்டம் இது".

"சரியா சொன்னீங்கள் மகள். நான் அடுத்த விசாரணையில் ஒரு முடிவு கண்டுதான் வருவேன்"

"ஓ அப்படியொரு தைரியம், துணிவு எல்லோருக்கும் வரவேணும்"

"நான் போய் கொஞ்ச நேரம் படுத்திருக்க விரும்புறன். இராணி இருந்து கதைக்கட்டும் வரட்டுமா"

இரண்டு நாள் கடந்த நிலையில் வியாசருக்கு அழைப்பு வந்தது.

"வாங்க வியாசர் உட்காருங்க" சொன்ன அதிகாரிக்கு வணக்கம் கூறிவிட்டு கதிரையில் அமர்ந்தான் வியாசர்.

அதிகாரி கேட்ட முதல் கேள்வியே வியாசரைத் திடுக்கிட வைத்தது.

"உங்க மகன் விக்ரமன் புலி தானே? சண்டையில் காயப்பட்டவர் தானே?"

"ஒப்புக்கொள்ள உண்மையைச் சொல், உன்னால் வாதாட முடியும். நியாயத்தை உணர்த்து... உன்னால் முடியும்" என்றது உள்மனம்.

"என் மகன் இயக்கத்தில் இருந்தவர் தான், சண்டையில காயப்பட்டவர் தான்"

"ஏன் அனுப்பினீங்க"

எங்களுக்கு தெரியமால் ஓடிப் போனான் சேர். இப்போ வன்முறையைக் கைவிட்டு சனநாயக நீரோட்டத்தில் கலந்து விட்ட முன்னாள் பிற பிரிவுப் போராளிகளும் பெற்றாருக்குச் சொல்லாமல் ஓடிப்போனவர்கள் தான். அவர்களை ஏற்றுக் கொண்டது போல் இவர்களையும் மன்னித்து அவர்கள் தாம் விரும்பிய தொழிலில் ஈடுபட வழிக்காட்டுங்கோ... நீங்கள் பெரிய மனிதர் பெரிய பதவியில் இருக்கிறீங்க,.. புத்தரின் போதனையைப் பின்பற்றுகிறீர்கள். நாங்களும் எங்கள் மூதாதையர்களும் பலர் புத்த சமயத்தவர்கள். அவர்கள் புத்தருக்கு கோயில் கட்டியிருந்தார்கள். சித்தார்த்தன் ஒரு அரச குமாரன். இந்து மதத்தவன்... மனித இனம் படும் அவலங்களைக் கண்டு மனம் நொந்து, அரச பதவியையும் இல்வாழ்க்கையையும் துறந்து ஏகாந்தம் நாடி தனியே அமர்ந்து தவம் புரிந்தான், ஞானம் பெற்றான். அறம் அன்பு, கருணை, தருமத்தைப் போதித்தான். அவன்மேல் நம்பிக்கை கொண்டவர்கள் நாங்கள்."

"போதும் நிறுத்து என்றார் அதிகாரி, புன்சிரிப்புடன் தொடர்ந்தும் பெரிய படிப்பாளிப்போல் பேசுகிறாய்... நீயும் குற்றவாளி... அதை மறந்து விடாதே... என்றார் அச்சுறுத்தும் தொனியில்.

வியாசர் அவர் சொன்னவற்றைப் பொருட்படுத்தாமல் "சேர் ஒரு நிமிஷம் என்னை பேச அனுமதியுங்கள். எங்களை வெளியில் சொல்ல அனுமதியுங்கள்... நாங்கள் சுவிசில் இருக்கும் எங்கட மகனிடம் போக... உங்களுக்கு நன்றியாக நீங்கள் விரும்புற பரிசு எதுவானாலும்..."

ஸ்ஸ்ஸ் என்ன துணிவு! எனவியந்த அதிகாரி அப்படியா?,.. சரி போய் இருங்க என்றார்.

பாதுகாப்பு உத்தியோகத்தனை அழைத்தார். தன் தாய் மொழியில் சில வார்த்தைகள் கட்டளையிடும் தொனியில் சொன்னார்.

அவன் வியாசரை கூட்டிக் கொண்டு வெளியே போனான்.

வெளியில் அவரை நிறுத்தி அதிகாரியின் திட்டத்தை விளக்கமாய் சொன்னான். அவன் சொல்லச் சொல்ல வியாசரின் முகத்தில் சிறு நகை சிலகணம் மலர சரி... சரி... சரி எனவே பதிலளித்தார்.

வியாசர் தம்பதியை காணவில்லை.

வேறு முகாமிற்கு மாற்றப்பட்டிருக்கலாம்.

விசாரணைக்கென்று போகிறார்கள், வருகிறார்கள். சிலர் புனர்வாழ்வு முகாமுக்கு அனுப் பப்பட்டதாக சொல்கிறார்கள். வேறு சிலர் மிகப் பாதுகாப்பான முகாம்களுக்கு அனுப்பப்படுகிறார்கள். சிலர் அதிசயமாக விடுதலையும் அடைகிறார்கள்.

முகாம் வாசிகளுக்கு அவை ஒன்றும் புதுமையல்ல பழகிப்போன செய்திகள். வியாசர் இராணி காணாமல் போனதும் அத்தகைய ஒரு சம்பவமே.


□□□

"கொழும்பில் இருந்து கதைக்கிறேன். தம்பியும் என்னுடன் வந்திருக்கிறார்"

அப்பா சுகமாய் இருக்குறீங்களா?... தம்பி அம்மா சுகமா?... எப்படி அப்பா சிரமமில்லாமல் வர முடிந்ததா?

சிரமமில்லாத பயணம் இப்போ இல்லையெண்டு தெரியாதா?... விபரமாக இப்போ கதைக்க முடியாது... எல்லாம் நேரில் சொல்லலாம்... வங்கியில் இருந்த சேமிப்பு முழுவதும் செலவாயிற்று... எப்படி என்றதயும் நேரில் தான் சொல்ல முடியும். நம்பிக்கையான ஒரு பயண முகவருடன் பேசியிருக்கிறேன். எங்களைக் கூட்டிக் கொண்டு போய் உன்னிடம் ஒப்படைச்ச பிறகு கட்டணம் எல்லாம் பெற்றுக் கொள்வதாக ஒப்புக் கொண்டிருக்கிறார். பயணச் சீட்டுகளுக்கும் தற்போதைய செலவுகளுக்குமாக கொஞ்சம் பணம் அனுப்பவும்.

"சரி அப்பா"






JATHU RENOVATION



உங்கள் இல்லத்தை புதுப்பிக்க
அழையுங்கள்

★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical

RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com



ARASAN
RAJADURAI
REAL ESTATE & DEVELOPMENTS
SALES REPRESENTATIVE



C 416.500.9550
B 416.298.8383
F 416.298.8303
realtorarasan@gmail.com
www.century21.ca/arasan.rajadurai

Century 21 INNOVATIVE REALTY
CENTURY 21
Innovative Realty Inc. Brokerage
2855 Markham Rd
Toronto ON M1X 1C4



RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
3-1286 Kennedy Rd Toronto ON. M1P 2L5
Tel: 416.270.1111 Fax: 416.270.7000



ARUL
AMIRTHALINGAM
Sales Representative
Dir: 647.450.2479
Email: arultoprealtor5@gmail.com
www.remaxace.com

WEXFORD
WELLNESS CARE INC.



We treat all car accident injuries!

- Massage Therapy
- Physiotherapy
- Orthopaedic
- Acupuncture
- Chiropractic
- Orthotic

We deal directly with Insurance Companies, Extended health Care Corporate Insurance, ODSP WSIB, Motor Vihicle Accident (MVA)

Tel: 647-349-5120
Fax: 647-349-5121
Serve Two Location

Unit 301-240 Alton Towers Cir, Scarborough ON M1V 3Z3
2900 Markham Rd Unit F11, Scarborough ON M1X 1E6
(Majestic City, Colombo Rd)

போர்க் குற்றங்களை ஆவணப்படுத்த இணையம் எவ்வாறு உதவுகிறது?

விளக்கும் சட்ட வல்லுநர்கள்

ஏப்பிரல் 18, 2022



இணையத்தில் வெளியிடப்படும் புகைப்படங்கள் உக்ரேனில் போர்க்குற்றங்களை விசாரிப்பதில் முக்கியமானதாக இருக்கும் என்று இலண்டனில் உள்ள சட்ட வல்லுநர்கள் கூறுகின்றனர்.

ஒரு "மாதிரி" போர் குற்ற விசாரணையின் போது, யேமன் நாட்டில் நடந்த குண்டுவெடிப்பு காட்சிகள் குறித்து, இணையத்தில் பகிரப்பட்ட புகைப்படங்கள், அப்போரின் கொடூரங்களை ஆவணப்படுத்துவதை எவ்வாறு "மாற்றியது" என்பதைக் காட்டியது என்கிறார் ஒரு சட்டப் பேராசிரியர் கூறினார்.

போர் நடக்கும் காட்சிகளில் "மிகவும்" பயனுள்ள, சரி பார்க்கக்கூடிய தகவல்கள் இருப்பதாக ஓர் இணைய புலானாய்வாளர் கூறுகிறார்.

ஆனால், நேரில் கண்ட சாட்சிகளின் தகவல்கள் இதன் மூலம் மறைக்கப்படக் கூடாது என்றும் நிபுணர்கள் கூறியுள்ளனர்.

உக்ரேன் நாட்டில் நடக்கும் போர்க் குற்றங்களைச் செய்த நபர்களுக்கு எதிரான வழக்குகள், சட்டவிரோதமான கொலைகள், போர்க்கால பாலியல் வன்முறை மற்றும் சித்ரவதை ஆகியவற்றின் சரிபார்க்கப்படாத புகைப் படங்களைச் சார்ந்திருக்கலாம் என்று சுவான்சீ பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் யுவோன் மெக்டெர்மொட் ரீஸ் கூறியுள்ளார்.

திறந்தவெளி தகவல் (open-source information) என்று அழைப்படும் ஒன்று, மனித உரிமை மீறல்கள் குறித்து தெரிந்துக்கொள்ளும் எங்களின் வழியை முற்றிலும் மாற்றிவிட்டது என்று அவர் கூறினார்.

ஐ.நா விசாரணைக் குழுக்கள், உண்மையை கண்டறியும் குழுக்கள், ஹாக் நகரில் உள்ள சர்வதேச குற்றவியல் நீதி மன்றமும்கூட இதுப்போன்ற ஆதாரங்களை பயன் படுத்துவது அதிகரித்துள்ளதை நாங்கள் பார்க்கிறோம் என்று பேராசிரியர் யுவோன் மெக்டெர்மொட் ரீஸ் விளக்குகிறார்.

ஸ்விட்சர்லாந்து மற்றும் டச்சு நீதிமன்றங்களில், சிரியாவில் இருந்து திரும்பும் இஸ்லாமிய அரசு என்று அழைக்கப்படும் உறுப்பினர்கள் மீது விசாரணை நடத்த திறந்த வெளி தகவல்களும் பயன்படுத்தப்பட்டன என்று பேராசிரியர் யுவோன் மெக்டெர்மொட் ரீஸ் கூறினார்.

இது போன்ற தகவல் சமீபத்தில் பிரிட்டன் நீதிமன்றத்தில் பயன்படுத்தி சோதனை செய்யப்பட்டது

2018 ஆம் ஆண்டில், யேமன் தலைநகரமான சனாவில் உள்ள அந்நாட்டு ஜனாதிபதி அலுவலகத்தின் மீது ஒரு கொடூரமான வான்வழித் தாக்குதலுக்கு பிறகு நடந்த சம்பவம் குறித்து சரிபார்க்கப்படாத காட்சிகள் ட்விட்டரில் வெளியிடப்பட்டன.

பெல்லிங்காட் என்ற திறந்த நிலை புலனாய்வு இணைய தளம், இந்த தாக்குதலை ஆவணப்படுத்த புவி இருப்பிடம், செயற்கைக்கோள் படங்கள் மற்றும் நூற்றுக்கணக்கான படங்களின் ஒப்பீடு செய்து பயன்படுத்தியது.

போர் குற்றங்களுக்காக குற்றம் சாட்டப்பட்ட ஒரு "கற்பனையான" சவுதி விமானியின் "மாதிரி" விசாரணையின்போது, அவர்களின் ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

"இந்த காணொளிகளில் ஒன்று இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் உள்ள பொது-சட்ட நீதிமன்றத்தில் ஆதாரமாக ஏற்றுக்கொள்ளப்படுமா என்பதைப் பார்க்க விரும்பினோம்," என்று பெல்லிங்கேட்டின் நீதிப் பொறுப்பாளர் நிக் வாட்டர்ஸ் கூறினார்.

இதன் விளைவாக "யுக்ரைனில் நடந்த சம்பவங்கள் குறித்து தகவல்களை சேகரித்து சரிபார்க்க, நாங்கள் இப்போது இதை பயன்படுத்துகிறோம்" என்று அவர் கூறினார்.

"தாங்கள் கண்டதை உலகுக்குக் காண்பிக்கும் நோக்கத்துடன் அவர்கள் அதைப் பகிர்ந்து கொள்கிறார்கள்," என்று அவர் விளக்கினார்.

போர் குற்றங்களை ஆவணப்படுத்த செயலி

போர் நடக்கும் இடத்தில் இருப்பவர்கள், தாங்கள் போர்க் குற்றங்களின் காட்சிகளில் அடையாளங்கள் மற்றும் பிரபலமான கட்டடங்களைப் படமாக்குவதற்கும், ஆஸ்திரேலியாவில் உருவாக்கப்பட்ட ஐவிட்னெஸ் (iWitness) எனப்படும் அலைபேசி செயலியை பயன்படுத்துவதற்கும் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

திறந்தவெளி தகவல் என்றால் என்ன?

திறந்தவெளி தகவல் என்பது இணையத்தில் இலவசமாக



யேமனின் சனா நகரில் வான்வழித் தாக்குதலைத் தொடர்ந்து இடிபாடுகளில் இருந்து காயமடைந்தவர்களை மக்கள் தூக்கிக் கொண்டிருந்தனர்.

கிடைக்கும் தகவல்.

"ஒருவரது தலை துண்டிக்கப்படும் காணொளி உள்ளது. அது யூடியூப் அல்லது பேஸ்புக்கில் பதிவு செய்யப்பட்ட அல்லது பகிரப்பட்ட காணொளியாக இருந்தால், அது ஆதாரமே," என்று அவர் கூறுகிறார்.

இது ஒரு தகவல் பதிவுசெய்யப்பட்ட இடம், நேரம், நாள், அதன் மெட்டாடேட்டாவைப் (Meta Data) பதிவுசெய்வது போன்ற விஷயங்களை செய்கிறது", என்று அவர் கூறினார்.

"நீங்கள் இதைப் பதிவுசெய்தால், மக்களுக்கு ஏற்பட்ட

போர்க் குற்றங்களை ஆவணப்படுத்த இணையம் எவ்வாறு உதவுகிறது?

விளக்கும் சட்ட வல்லுநர்கள்



போரின் மத்தியில், அங்கிருப்பவர்கள் ஒரு குற்றவியல் விசாரணையைப் பற்றி சிந்திப்பது அரிது என்பதே இங்கே உள்ள பிரச்னை என்று பேராசிரியர் மெக்டெர்மொட் ரீஸ் கூறினார்.

காயங்கள், அங்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களை குறித்தும் பதிவு செய்யுங்கள். அந்த இடத்தில் உள்ள நிலப்பரப்பு குறிகள் அல்லது கட்டடங்களை பதிவு செய்து சேர்க்க முடியுமா என்று பாருங்கள்", என்று அவர் கூறுகிறார்.

மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்த காணொளிகளைப் பயன்படுத்தும் "விட்னெஸ்" என்ற தொண்டு நிறுவனம், நீதிமன்றங்களில் பயன்படுத்துவதற்கு ஏற்ற வாறு அங்குள்ளவர்களின் புகைப்படங்களை எவ்வாறு சேகரிக்கலாம் என்பதற்கான வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது என்று அவர் கூறினார்.

போர்க்குற்றங்களை விசாரிப்பவர்கள் இணையத்தில் உள்ள புகைப்படங்களை நம்ப முடியாது என்ற பரவலான பார்வைக்கு எதிராகவும் போராடுகின்றனர்.

"இணையத்தில் பல பயனுள்ள, சரிபார்க்கக்கூடிய தகவல்கள் வெளியிடப்படுவதை இது தவறவிடுகிறது," என்று வாட்டர்ஸ் கூறுகிறார். உண்மையான நிகழ்வுகள் பல்வேறு வகையில், ட்வீட் மூலம் வருவதால், இணையத்தில் சம்பவங்களை போலியாக காட்டுவது கடினம் என்று கூறுகிறார்.

இதுகுறித்து மேலும், வாட்டஸ் கூறுகையில், "நாம் சமூக ஊடகங்கள், ஸ்மார்ட்போன்களின் வருகையுடன், நீங்கள் நம்பமுடியாத அளவுக்கு மிகவும் பயனுள்ள தகவல் வலையமைப்பைக் கொண்டிருக்கிறோம், அங்கு மக்கள் புகைப்படங்களை எடுக்கவும், நடக்கும் சம்பவங்கள் குறித்து காணொளிகளை பதிவுசெய்யவும் முடியும்", என்றார்.


பெல்லிங்கேட் மற்றும் மனித உரிமைகள் தொண்டு நிறுவனமான குளோபல் லீகல் ஆக்ஷன் நெட்வொர்க் (Global Legal Action Network) ஆகியவற்றுடன் வழக்கறிஞர் டியர்ப்லா மினாக் (Dearbhla Minogue) பணியாற்றுகிறார்.

காணொளி மூலம் சட்ட நடவடிக்கை

ஒரு சம்பவம் குறித்து யாரோ ஒருவர் அதைப் பற்றி பேசுவதைக் கேட்பதை விட, ஏதோ ஒரு காணொளியைப் பார்ப்பது அதிக கவனத்தை பெறக்கூடியது என்று அவர் கூறினார்.

"ஜார்ஜ் ஃபிலாய்டின் மரணம் பற்றி சிந்தித்து பாருங்கள்" என்று மினாக் கூறுகிறார்.

"அந்த சம்பவம் நடந்த இடத்தில் இருந்த ஒருவர், படம் பிடித்த காணொளியை, நீதிக் குழு உட்பட மக்கள் உண்மையில் பார்த்தார்கள். இது அந்த விசாரணையின் தீர்ப்பை பாதித்தது. ஏனெனில் இது ஒரு நபர் கூறிய வார்த்தையை மற்றொருவரது வார்த்தையை எதிர்க்கும்



நிலையை தாண்டிவிட்டது", என்கிறார்.

"பெர்க்லி புரோட்டோகால் எனப்படும் டிஜிட்டல் திறந்தவெளி தகவல்களைப் பயன்படுத்துவதற்கான விதிகளை கலிபோர்னியா பல்கலைக்கழகம் உருவாக்கியுள்ளது."

அரசியல் காரணங்களுக்காக ஒரு காணொளி போலியானதாகவோ அல்லது மாற்றம் செய்யப்பட்டதாகவோ இல்லை என்று நீதிபதிக்கு எப்படி உறுதி செய்வது என்பதே போர்க் குற்ற வழக்குறிஞர்கள் எதிர்கொள்ளும் கேள்வி என்று மினாக் கூறுகிறார்.

"வான்வழித் தாக்குதலுக்குப் பிறகு இணையத்தில் உள்ள காணொளியைக் கொண்டு, அது காட்டுவது சரியா என்பதை நாம் எப்படி அறிவது?", அவர் கூறுகிறார்.

"இந்த புச்சா காணொளிகள் குறித்த விஷயத்தில், சித்தரிக்கப்பட்டவையோ அல்லது போலியானவையோ அல்ல என்பதை எப்படி உறுதி செய்வது போன்ற சிக்கல்களை ரஷ்யா எழுப்புகின்றது."

"உள்நாட்டு நீதிமன்றங்களில், அதை படம்பிடித்த நபரை நீதிமன்றத்தில் சாட்சியாக அழைப்பது ஓர் எளிய வழி." என்று மினாக் கூறுகிறார்.

"ஆனால், உங்களிடம் இருக்கும் திறந்தவெளி தகவல்களில், அதாவது அதை உருவாக்கியவர் யார் என்பது தெரியாத நிலையில், அவர்கள் அதை எவ்வாறு உருவாக்கினார்கள், அவர்கள் அதில் ஏதேனும் மாற்றங்கள் செய்தார்களா, வேறு யாராவது அதில் மாற்றங்கள் செய்தார்களா என்று நீங்கள் அவர்களிடம் கேட்க முடியாது."

"காணொளிகளில் உள்ள தகவலைப் பயன்படுத்தி அதன் மற்ற செயற்கைக்கோள் படங்கள் அல்லது அதே நிகழ்வைக் காட்டும் மற்ற காணொளிக்களுடன் ஒப்பிடுவதன் மூலம், அவர்கள் இந்த தகவல்களை தொடர்புடைய அனைத்து விஷயங்களையும் ஒருங்கிணைத்து, அது உண்மையானதா அல்லது போலியானதா என்பதை மதிப்பிடலாம்."

திறந்தவெளி தகவல்கள் உதவிகரமானதே, அதே சமயத்தில், இவை இதில் மனிதர்கள் தரப்பு பேசும் விஷயங்களை இழக்காமல் இருப்பது முக்கியம்", என்று பேராசிரியர் மெக்டெர்மொட் ரீஸ் எச்சரிக்கிறார்.

"யேமனில், இத்தகைய ஆதாரங்கள் தானாக உருவாகவில்லை. இது தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் சேகரிக்கப்பட்ட கணக்குகளுடன் நெருக்கமான ஒத்துழைப்புடன் இருந்தது."

"யுக்ரைனில், பாலியல் வன்முறையில் இருந்து மீண்டவர்கள் தங்களின் வாக்குமூலத்தில் இருந்து, பாலியல் வன்முறை குறித்த ஆதாரங்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன என்று அவர் கூறினார். மனிதர்களின் தரப்புக்கு முக்கியத்துவம் அளிப்பதை நாம் குறைத்து மதிப்பிடாமல் இருப்பது மிகவும் முக்கியம்".

"இது சர்வதேச குற்றங்கள் செய்யப்படும்போது, அவை தீங்கு விளைவுக்காமல் செய்யப்படுவதில்லை என்பதைக் காட்டுவதாகும்" ,என்று பேராசிரியர் மெக்டெர்மொட் ரீஸ் கூறினார்.

"எனவே, ஆவணப்படுத்துதல் மற்றும் தகவல்களைச் சேகரிக்கும் பணி என்பதுஅது நீதிமன்றத்தில் நின்று பேசும் என்பதையும், நமக்கு நீதி கிடைக்கும் என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும்."


"புச்சா மற்றும் யுக்ரைனில் உள்ள பிற பகுதிகளிலிருந்து மிகவும் கொடூரமான தகவல்கள் வெளிவருவதை நாம் அனைவரும் பார்க்கிறோம். உலகளவில், அதற்கு நீதி கிடைப்பதை நாங்கள் பார்க்க விரும்புகிறோம்." என்கிறார்.

நன்றி: தமிழ் பிபிசி

Mullivaikkal Remembrance Day - May18 2022

தமிழீழ தேசியப்பணியில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் – கனடா

நெஞ்சம் நிறைந்த 34ம் ஆண்டு நினைவில் அன்னை பூபதி





Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE

Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.



At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

• Vistation • Funeral & Memorial Service • Reception • Burial • Cremation

நகரங்களில் எமது சேவை மார்க்கம், மற்றும் மிசிசாகா





Christeen Seevaratnam
Licensed Funeral Pre-Planner
416-258-6759

Vilosanan Sivatharman
Licensed Funeral Director
416-993-0826



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
- Lock in the cost a today's prices
- Convenient time payment
- Insured against early death

EMOTIONAL BENEFITS
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham ON L3R 5G1
www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

A caring part of our community

சும்மா இருக்கச் சுதந்திரமென்றால்... எனக்கும் அதிலே இரண்டு கிலோ.

விரல்மடித்துக் கணக்கெடுக்க முன்னரே
காலம் காற்றாய்ப் பறந்து விடுகிறது.
வலிகாமத்தை வழித்துத் துடைத்த பின்
தொண்ணூறு நாட்கள் தொலைந்து விட்டன.
நிகழ்வு மட்டும் நேற்றுப் போலிருக்கிறது.
30.10.1995 ஒக்டோபர் திங்கட்கிழமை
இந்த நாளிலும்,
இதன் பிறகு வந்த நாட்களிலும்
ஈழத்தமிழன் சுமந்த பாரச்சிலுவைக்கு
எதிர்காலம் என்ன பெயரிட்டு அழைக்குமோ?
கூழையற'ற குட்டிச்சுவராய்
மழை நனைந்தும்,
வெய்யில் உலர்ந்தும்,
பசி சுமந்தும்
தமிழர்பட்ட துயருக்கு எது உவமையாகும்?
வதையின் கதைகளிலே... இதுவே பெருங்கதை.
வலிகாமம் வெளியேறத் தயாரான போது
ஓரிரவும்,
ஒற்றைப்பாதையுமே இருந்தது.
அடிதலை தெரியாத இனுமான் வாலாக
நீண்ட நெடுந்தொலைவுக்கு மனித வரிசை.
இருகாலுக்குமிடையே வெளியற்ற நகர்வு.
முன்னால் விழுந்து வெடித்தன எறிகணைகள்.
பின்னால். துரத்தி வந்தன பிசாசுகள்.
பீடுற வாழ்ந்த பெருங்குலம்
கூடுகலைந்து ஓடியது.
உன்னோடு ஒன்றான வாழ்வினி இல்லையென
தென்னிலங்கைக்குச் சொல்லி வைத்து போல
வலிகாமம் முழுமையாக வெளியேறியது.
செம்மணி திணறியது.
நரபாரத்தால் நாவற்குழி நசிந்தது.
உள்ளே நுழைந்து பார்த்ததும்
சிங்களம் திகைத்துப்போனது.
சூனியத்தில் கொடி யேற்றி போன
ரத்வத்தவுக்கு இந்திரப் பதவிக்குரிய பவிசு.
இனியென்ன?
வலிகாமத்தைப் புலிகள் பிடிப்பது எப்போது?
பலகாலமாகுமா?
இதுவே எங்கும் எதிரொலிக்கிறது.
பதிலென்ன?
வேரோடிய வாழ்வுக்குரிய ஒரு பரம்பரை
தூக்கி வெளியே வீசப்படும் போது
அந்தரித்துப் போகும் அவலத்தில்
ஆயிரம் கேள்விகள் அஸ்திரங்களாகும்.
கோபத்திற் காயும்.
அது குற்றமல்ல...
இந்திர வாழ்விழந்த அந்தர நிலையில்
அகப்பட்டதைத் தூக்கிமிதிக்கும் ஆனைபோல்
நெருப்பு மூட்டிய வார்த்தைகளை நெஞ்சிலெறியும்.
ஆத்திரப்படலாகாது.
தாங்கிக்கொள்வதே தாய்மனம்.
'வலிகாமத்தைக் காப்பாற்ற வக்கற்றதுகள்
வன்னிக்கு வரட்டாம்'
ஊரிழந்த கோபத்தின் உச்சம் இது.
சொல்லியிருக்க கூடாத சுடு வார்த்தைதான்.
விடுதலையின் பேரால்
இந்தச் சொற்கள் மட்டும் செவிழிழைதெனக்
காதடைத்துப்போகக் கடவது.
புலிகள் மீது ஏனிந்தக் கோபம்?
எதிரிகள் போல ஏனிந்தப் பார்வை?
ஊரிழந்து போனது எங்களுக்கு மட்டுமா வருத்தம்?
வலிகாமம் போன வருத்தத்தில்
தூங்காத வேங்கைகளே அதிகமென அறிக.
அன்று
கண்ணீர் வழிய நடந்தவர் கையில்
காணியுறுதியாவது இருந்தது.
பலர் இயலக்கூடியதை எடுத்தும் வந்தோம்.
ஆனால்...
துயிலுமில்லத்தைத் தூக்கி வர முடியவில்லையே என்று
துயரத்தில் துடித்தனர் போராளிகள்.
'தமிழிரின் படைபலமே தாயகம் காக்கு' மென
எத்தனை தடவைகள் இடித்துரைத்தும்
எவர்தான் கருத்திலெடுத்தோம்.
போராட்டம் பூப்பறிக்கும் வேலையென்றே
காலாட்டிக் கொண்டிருந்தோம்.
எல்லோரும் சேர்ந்து எடுக்கும் பெரும்சுமையை
ஓரிரண்டு தோள்களில் எபப்டிச் சுமத்தலாம்?
என் குடும்பத்தில் எவரும் குறையாது
கொண்டுவா விடுதலையென்பது குற்றமல்லவா?
அடுத்த தலைமுறைக்கான ஆனந்த வாழ்வு சமைத்தல்
இந்தத் தலைமுறைக்குக் கிடைத்த பேறென
எத்தனை பேர் உணர்ந்தோம்?
இத்தனைக்கும் பின்னும்;
இளைய தலைமுறை என்ன செய்து கொண்டிருக்கிறது?
சுரணையற்றுத் தானே தூங்கிக் கிடக்கிறது.
காலையில் அண்ணா பற்பொடியையும்,
மாலையில் அடுத்த வீட்டு வேலியையும்
தின்றுகொண்டிருந்தால்...
வந்த பகையைத் துரத்தவதெப்படி?
வலிகாமத்துக்குப் போவது எப்படி?
ஊர்போவது எப்போது என்று
ஒவ்வொரு வீட்டிலும் எதிரொலிக்கட்டும்.
கேள்விக்குப் பதிலை வெளியில் கேட்பதை விடுத்து
முதலில் வீட்டிலேயே கேட்போம்.
தோளுக்குயர்ந்த சொந்தங்களைக் கேட்போம்.
படுக்கையிற் கிடக்கும் பிள்ளையைத் தட்டி
பதிலை அவளிடம் கேட்போம்.
அங்கிங் கெனாதபடி எங்கும் நிறைந்து
அலைகின்ற இளையதலைமுறையிடம் கேட்போம்.
நரம்பிலாத நாவினால்...
இதற்குள் எத்தனை எடுத்தெறிவுகள்?
காட்டிக்கொடுக்கிறது 'கூட்டணி'
எவரும் கண்டிக்கவில்லை.
நீலன் திருச்செல்வம் மோசம் செய்கின்றான்
எல்லோரும் பேசாமற்தானே கிடக்கின்றோம்.
புலிகள் போராடுகின்றனர்.
காய்த்த மரத்துக்குத்தானே கலலெறி.
தாயகத்தை நெஞ்சிற் சுமந்து
கல்லறைக்குப் போகும் செல்வங்களுக்காக
இந்த வசை?
சும்மா இருக்கச் சுதந்திரமென்றால்
எனக்கும் இதிலே இரண்டு கிலோ!
வெட்கம் கெட்டது இந்த விடுதலையுணர்வு.
நானென்ன,
பிள்ளையென்ன,
நாளை வரும் பேரனென்ன
எல்லோரும் போராடினால் இலக்கு எட்டும்.
விடுதலைப் புலிகளென்பது தமிழன் வீரத்தின் குறியீடு.
பிரபாகரன் என்பது தமிழர் மானத்தின் அடையாளம்.
பின்னடைவைப் பெரும்தோல்வியென்றால்
கண்டதையும் தான் கதைக்க வேண்டிவரும்.
நம்பிக்கையே வாழ்வு.
இனிவரும் நாட்கள் எமக்காகவே விடியும்.
படை பலமே முழுப்பலம்.
நம்பி எழுவோம்.
கற்றுத்தெளிந்தோம்
களம் நோக்கி நடை பயில்வோம்.
வெற்றுக்கதை விடுத்து விடுதலைக்கு விலைகொடுப்போம்.
புலிகளே பலம்
வருவதோ ஜெயம்.

-புதுவை இரத்தினதுரை. பங்குனி 1996


தமிழீழம் என் தாகம்

இந்தியாவிலிருந்து வெளிவரும் பிரசித்தி பெற்ற "சண்டே" (SUNDAY) என்ற ஆங்கில சஞ்சிகைக்கு (11–17 மார்ச் 1984) தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் அளித்த பேட்டியின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.

"வே. பிரபாகரன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவரும், இராணுவத் தளபதியுமாவர், இவரது வயது முப்பது. விடுதலைப் புலி இயக்கம் 1972ம் ஆண்டு ஒரு தலைமறைவு விடுதலை இயக்கமாகத் தோற்றங் கண்டது. 1978ம் ஆண்டு சிறீலங்கா அரசு இந்த இயக்கத்தைத் தடை செய்தது. சிறீலங்கா அரசாங்கம் வலைவிரித்துத் தேடும் விடுதலைப் போராளிகளில் இவர் முதன்மையான இடத்தை வகிக்கறார். இவரது தலைக்கு சிறீலங்கா அரசு வைத்திருக்கும் விலை பத்து லட்சம் ரூபாவுக்கும் அதிகமாகும். இவர் அன் பானவர் பண்பானவர். மிகவும் பலம் வாய்ந்த விடுதலை இயக்கத்திற்குத் தலைமை தாங்கி வழிநடத்துபவர் என்ற முறையில் அவர் சிங்கள் ஒடுக்குமுறையிலிருந்து தமிழ் மக்களை விடுதலை செய்யும் இலட்சியத்தில் தீவிரமும் உறுதிப்பாடும் மிக்கவராக விளங்குகிறார்." - அனிதா பிரதாப், "சண்டே" சஞ்சிகையில்.



அனிதா பிரதாப்



கேள்வி: வழக்கமான அரசியல் அமைப்பில் இருந்து விலகவும், ஒரு விடுதலை இயக்கத்தை உருவாக்கவும் உங்களைத் தூண்டியது எது? அத்தகைய ஒரு விடுதலை இயக்கம் சட்ட விரோதமாக்கப்படும் என்பது உங்களுக்குத் தெரியும்தானே?

பதில்: இலங்கையின் சனநாயகப் பாராளுமன்ற அமைப்பு அல்லது நீங்கள் சொல்வதைப்போல இலங்கையின் வழக்கில் உள்ள அரசியல் அமைப்பு எப்போதுமே பெரும்பான்மை யினரின் ஆதிக்கத்தையே சிறுபான்மையினர் மீது திணித்து வந்திருக்கிறது. இந்த அரசு அமைப்பானது எங்கள் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத்தவறிவிட்டது என்பதுடன், எமது நிலையை மேலும் மோசமாக்கிவிட்டது. காலம் காலமாக அரசின் ஒடுக்கு முறை ஆட்சியானது எம் மக்களின் வாழ்வு நிலையைச் சகிக்க முடியாததாகவும் துன்ப கரமானதாகவும் மாற்றிவிட்டது. எம் மக்கள் நடத்திய சாத்வீக சனநாயகப் போராட்டங்கள் இராணுவத்தால் நசுக்கப்பட்டன. எமது நியாயமான கோரிக்கைகள் முற்று முழுவதாகப் புறக் கணிக்கப்பட்டதுடன் இந்த அடக்குமுறையானது தமிழ் மக் களின் உயிர் வாழ்வுக்கே ஆபத்தாக அமைந்தது. இத்தகைய சூழ்நிலைகளே ஒரு விடுதலை இயக்கத்தை உருவாக்க என்னைத் தூண்டின. தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கு மட்டுமல்ல, சிங்கள அடக்குமுறையிலிருந்து இறுதியாகத் தங் களை விடுவித்துக்கொள்ளவும் எம் மக்களுக்கு ஆயுதப் போராட்டமே நடைமுறைச் சாத்தியமான ஒரே வழியென்று நான் உணர்ந்தேன். எங்கள் இயக்கம் தடை செய்யப்படும் என்பது எனக்கு முன்கூட்டியே தெரியும். அதனால்தான் எங்கள் இயக்கத்தை அதன் ஆரம்ப காலத்திலிருந்தே ஒரு தலை மறைவு இயக்கமாக உருவாக்கினோம்.

கேள்வி: இலங்கை தமிழர்களுக்கு ஆயுதப் போராட்டமே ஒரே வழியென்று நீங்கள் தீர்க்கமான முடிவுக்கு வர நர்ப்பந்தித்த உங்களின் தனிப்பட்ட அனுபவங்களைச் சற்றுக் கூறுவீர்களா? கல்வி, வேலை வாய்ப்பு ஆகியவற்றில் இலங்கை அரசு காட்டிய பாரபட்சமான கொள்கையால் நீங்களோ உங்கள் குடும்பத் தவரோ அல்லது உங்கள் நண்பர்களோ நேரடியாகப் பாதிக்கப் பட்டுள்ளனரா?

பதில்: நான் பள்ளிச் சிறுவனாக இருந்தபோது 1958ஆம் ஆண்டின் இனக் கலவரங்களில் நிகழ்ந்த பயங்கரச் சம் பவங்கள் என் மனத்தில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தின. சிங்கள இனவெறியர்களால் எம் மக்கள், ஈவிரக்கமில்லாது குரூரமாகக் கொல்லப்பட்ட நெஞ்சை உலுக்கும் சம்பவங்களை நான் கேள்விப்பட்டேன். எங்கள் குடும்பத்திற்குத் தெரிந்த ஒரு விதவைத் தாயை நான் ஒருமுறை சந்தித்தபோது அவர் இந்த இன வெறியாட்டத்தால் தனக்கு நேர்ந்த துயரமான அனு பவத்தை என்னிடம் சொன்னார். இனக்கலவரத்தின் போது சிங்களக் காடையர்கள் கொழும்பிலிருந்த அவர் வீட்டைத் தாக் கினார்கள். அவரது வீட்டுக்குத் தீ வைத்து, அவருடைய கண வரையும் குரூரமாகக் கொலை செய்தனர். அவரும் அவரது பிள்ளைகளும் பலத்த எரிகாயங்களுடன் தப்பினார்கள் அவரது உடலில் காணப்பட்ட எரிகாயத் தழும்புகளைப் பார்த்தபோது நான் மிகவும் அதிர்ச்சியடைந்தேன். சிறு குழந்தைகளைக் கொதிக்கும் தாருக்குள் உயிருடன் வீசிக்கொன்ற கோரச் சம்பவங்களை நான் கேள்விப்பட்டேன். அநாதரவான அப்பா வித் தமிழர்கள் எவ்வாறெல்லாம் கொடூரமான தாக்குதலுக்கு இலக்காகினர் என்பதையெல்லாம் கேட்கும்போது என் மக்கள் மீது ஆழ்ந்த அனுதாபமும், அன்பும் ஏற்பட்டன. இந்த இனவெறி அமைப்பின் பிடிக்குள்ளிருந்து எம் மக்களை மீட்டெடுக்க வேண் டுமென்ற பெரும் உந்துதல் என்னிடம் தோன்றியது. நிராயுத பாணிகளான அப்பாவித் தமிழர்களுக்கெதிராக ஆயுத வலிமை யைப் பிரயோகிக்கும் இந்த அமைப்பினை ஆயுதப் போராட் டத்தின் மூலமே எதிர்கொள்ள முடியும் என்று நான் ஆழமாக உணர்ந்தேன்.

கேள்வி: எந்தக் கட்டத்தில் நீங்கள் பாராளுமன்ற அமைப்பில் நம்பிக்கை இழந்தீர்கள்? உங்கள் நம்பிக்கையைச் சிதைத்தது எது?

பதில்: எழுபதுகளின் ஆரம்பத்தில், இளம் தலைமுறையினர் பாராளுமன்ற அரசியலில் நம்பிக்கையிழந்திருந்த கால கட்டத் தில்தான் நான் அரசியலில் நுழைந்தேன். ஆயுதம் தாங்கிய புரட்சிவாதியாகவே நான் அரசியலில் புகுந்தேன். அடுத்தடுத்து பதவிக்கு வந்த சிங்கள அரசுகள் எமது மக்களின் துன்ப துயரங் களை ஈவிரக்கமின்றி முற்றிலும் புறக்கணித்து வந்த காரணத் தினால் பாராளுமன்ற அரசியலில் எனக்கு அவநம்பிக்கை ஏற்பட்டது.

கேள்வி: நீங்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தை எவ்வாறு ஆரம்பித்தீர்கள்?

பதில்: எம் மக்களின் விடுதலைக்கு ஆயுதப் போராட்டம் தான் ஒரே வழி என்பதில் முழுமையான நம்பிக்கையுடைய புரட்சிகர இளைஞர்களின் துணையுடன்தான் நான் விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆரம்பித்தேன்.

கேள்வி: உங்களைப் "புலிகள்" என்று ஏன் அழைத்துக் கொள்கிறீர்கள்?

பதில்: தமிழர்களின் அரசியல் வரலாற்றில் புலிச் சின்னமானது ஆழ்ந்து வேரோடி இருப்பதால்தான் எமது இயக்கத்திற்கு "விடுதலைப் புலிகள்" என்று பெயரிட்டேன். புலிச் சின்னமானது தமிழ்த் தேசியத்தின் புத்தெழுச்சியை உருவகப்படுத்துகிறது. அத்துடன் கொரில்லா யுத்த முறையையும் புலிச் சின்னம் குறித்து நிற்கிறது.

கேள்வி: நீங்கள் "விடுதலைப் புலிகள்" இயக்கத்தை ஆரம் பித்தபோது உங்கள் குடும்பத்தாரும் நண்பர்களும் அதனை எவ்வாறு வரவேற்றனர்?

பதில்: விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஆரம்பித்ததுமே நான் தலைமறைவாக இயங்கி வந்தேன். அத்துடன் எனக்கும் குடும்பத்தாருக்கும் இருந்த தொடர்பு அறுந்து விட்டது.

கேள்வி: உங்கள் குடும்பத்தாரைக் கடைசியாக எப்போது சந்தித்தீர்கள்? உங்கள் தலைமறைவு வாழ்க்கையை அவர்கள் ஏற்றுக்கொண்டு விட்டார்களா?

பதில்: என் குடும்பத்தாரை நான் சந்தித்துப் பதினொரு வருடங்கள் ஆகிவிட்டன. சாதாரண வாழ்க்கை நடத்தும் சாமான்யனாக அவர்கள் என்னைக் கருதுகிறார்கள் என்று நான் நினைக்கவில்லை. என்னுடைய தலைமறைவுக் கொரில் லாப் போராளி வாழ்க்கையை அவர்கள் ஏற்றுக்கொண்டு விட்டார்கள்.

கேள்வி: 12 வருடகாலப் போராட்டத்தின் பின், உங்கள் இலக்கை நெருங்கிக் கொண்டிருக்கும் கட்டத்தில் இருப்பதாக நீங்கள் நினைக்கிறீர்களா?

பதில்: இந்த நீண்ட போராட்டத்தின் பின் எமது இலட்சியத்தை நோக்கி நாங்கள் வேகமாக விரைந்து கொண்டிருப்பதாகவே நான் உணர்கிறேன். ஜூலை 1983 பேரழிவுகள் தமிழ் மக்களின் சகல பிரிவினரையும் ஒரே இலட்சியத்தின் கீழ் ஒன்றிணைத்துவிட்டன. எமது இயக்கத்தின் ஆயுதப் போராட்டத் திட்டத்திற்கு மக்களின் பேராதரவு பெருகி வருகிறது.

கேள்வி: கடந்த 12 வருடகால அனுபவங்கள் உங்களைத் தனிநபர் என்ற முறையில் எவ்வாறு பாதித்து இருக்கின்றன?

பதில்: இந்தப் போராட்ட அனுபவங்கள் எனது இலட்சியத்தை ஆழமாக வலுப்படுத்தியிருக்கின்றன. எனது பார்வையை மேலும் கூர்மைப்படுத்தியிருக்கின்றன.

கேள்வி: இதுவரை உங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களில் மகத்தான அனுபவம் என்று எதைக் கூறுவீர்கள்?

பதில்: ஒரு குறிப்பிட்ட அனுபவத்தை மகத்தானது என்று தனிமைப்படுத்திக் கூறுவது எனக்குக் கடினமானது. ஒரு கொரில்லாப் போராளியின் வாழ்க்கையானது துயரமும் மகிழ்ச் சியும் விரக்தியும் கலந்த பல்வேறுபட்ட அனுபவங்களின் கல வையாகும். இவற்றுள் ஒவ்வொன்றுமே ஒவ்வொரு வகையில் மகத்தானதுதான்.

கேள்வி: விடுதலைப் போராட்டத்தில் உங்களது நீண்டகால அனுபவமானது, வாழ்க்கை பற்றிய உங்களது நோக்கில் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கும். இந்த அனுபவங்களின் மூலம் உங்கள் பார்வையில் ஏற்பட்ட தாக்கங்கள் பற்றியும், உங்கள் இலட்சியத்தில் எழுந்த உறுதிப்பாடுகள் பற்றியும் கூறுவீர்களா? அத்துடன் உங்கள் அனுபவங்கள் நீங்கள் ஏற்கனவே வரித்துக் கொண்ட சில கொள்கைகள், கோட்பாடுகள் நடைமுறையில் எத்துணை பொருத்தமற்றது என்பதனை உணர்த்தும் அதே வேளையில் வேறு சில சரியானவைதாம் என்ற கருத்தினையும் ஏற்படுத்தியிருக்காலம் அல்லவா? அவற்றில் சிலவற்றைக் கூறுவீர்களா?

பதில்: நாங்கள் வரித்துக்கொண்ட ஆயுதப் புரட்சிப் பாதை மிகவும் சரியானது என்பதைக் கடந்த 12 வருடகால அனுப வங்கள் சந்தேகத்திற்கு இடமில்லாமல் எனக்கு உணர்த்தி யிருக்கின்றன. எமது ஆயுத ரீதியிலான போராட்ட வடிவத்தை "பயங்கரவாதம்" என்று விமர்சித்த மற்ற விடுதலைக் குழுக்கள் ஒடுக்கப்பட்ட எமது மக்களின் விடுதலைக்கான ஒரே வழி

தமிழீழம் என் தாகம்


ஆயுதப் போராட்டம்தான் என்பதை இப்போது ஏற்றுக்கொண்டு விட்டன. நாங்கள் கைக்கொண்ட கொரில்லா யுத்த முறை யானது விடுதலைப் போராட்டத்தின் வலிமைமிக்க வடிவமாக அமைந்திருக்கிறது. எமது வெற்றிகரமான கொரில்லாத் தாக் குதல்கள், சிங்கள ஆயுதப் படைகளைத் தோற்கடித்து, சுதந் திரத்தை வென்றெடுக்க எம்மால் முடியுமென்ற நம்பிக்கையை எமது மக்களுக்கு ஊட்டியிருக்கின்றன.

கேள்வி: உங்கள் நண்பன், தத்துவாசிரியன், வழிகாட்டி யார்?

பதில்: இயங்கை எனது நண்பன் வாழ்க்கை எனது தத்து வாசிரியன் வரலாறு எனது வழிகாட்டி.

கேள்வி: இலங்கை அரசாங்கத்தால் தேடப்படுபவர்களில் முதன்மை யானவராக இருப்பது குறித்து என்ன நினைக் கிறீர்கள்?

பதில்: "பிரிட்டிஷ் அரசாங்கம் யாரைப் "பயங்கரவாதி" என்று சொல்கிறதோ அவனே உண்மையான ஐரிஸ் தேசியப் போராளி" என்று ஐரிஸ் தலைவர் ஒருவர் குறிப்பிட்டார். அது போல், இலங்கை அரசு என்னைத் தேடப்படுபவர்களில் முதன் மையானவராகக் கருதினால் அது நான் உண்மையான தமிழ்த் தேசியப் போராளியென்பதையே உணர்த்துகிறது. அவ் வாறு தேடப்படும் நபராக இருப்பதில் பெருமைப்படுகிறேன்.



கேள்வி: உங்கள் வாழ்க்கையில் மிகுந்த விரக்தியைத் தந்த கணம் என்று எதையாவது கூறுவீர்களா?

பதில்: என் வாழ்க்கையில் அப்படி விரக்தி ஏற்பட்ட கணம் என்று எந்த ஒன்றையும் குறித்தச் சொல்ல முடியாது. இலட்சிய நோக்கு கொண்டவர்கள் என்று நான் நினைத்து நம்பிய சில நண்பர்கள் சுயநலச் சந்தர்ப்பவாதிகளாக மாறியபோது நான் மிகுந்த விரக் திக்குள்ளானதுண்டு.

கேள்வி: உங்களுக்கும் உமாமகேஸ்வரனுக்கும் இடையிலான பிளவு எப்படி ஏற்பட்டது?

பதில்: இந்தக் கேள்வியை நீங்கள் கேட்டிருக்கும் விதம் தவ றானது. இப்பிரச்சினையை எனக்கும் உமாமகேஸ்வரனுக்கும் இடையிலான தனிப்பட்ட விரோதமாக அல்லது பிளவாக நோக் குவது தவறானது. விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் ஒரு தனி நபருக்கும் இடையிலான பிரச்சினையே அது. இப்பிரச் சினைக்கு நான் தனிப்பட்ட முறையில் எந்த வித்திலும் பொறுப் பாளியல்ல. அந்தப் பிரச்சினை உமாமகேஸ்வரனாலேயே உரு வானது. ஒரு புரட்சி இயக்கத்தின் தலைவர் அந்த இயக்கத்தின் கட்டுப்பாட்டுக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் இயக்கத்தில் ஒழுங்கும் கட்டுப்பாடும் நிலவும். அடிப்படை விதிகளைத் தலைவரே மீறி நடப்பாரேயானால் ஒழுங்கு குலைந்து குழப்பம் மலிந்து இயக் கம் சிதைந்து போகும். உமாமகேஸ்வரன் எமது இயக்கத்தின் விதிகளை மீறி நடந்தமையால் ஒழுங்கு நடவடிக்கையாக அவர் மத்திய குழுவால் இயக்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். இந்த இயக்கத்தை ஸ்தாபித்தவன் என்ற முறையிலும், உமா மகேஸ்வரனை இயக்கத்தின் தலைவராக நியமித்தவன் என்ற முறையிலும் மத்திய குழுவின் தீர்மானத்தை உறுதியாகக் கடைப்பிடிப்பதைத் தவிர வேறு எந்த வழியும் எனக்கு இருக்க வில்லை.

கேள்வி: இன்று பல்வேறு ஈழ விடுதலைக் குழுக்கள் தமக்குள் போட்டியிட்டுக் கொண்டிருக்கனிறன. எல்லாரது இலட்சியமும் ஒன்றேயாதலால், இவற்றை ஒருக்கிணைக்கும் முயற்சி அவசியமல்லவா? பொது எதிரிக்கு எதிராக உங்களின் ஒருங் கிணைக்கப்பட்ட சக்தியால் நீங்கள் அதிகளவு பயனடை யலாமே! இக் குழுக்கள் ஒருங்கிணைவதை நீங்கள் கொள்கை யளவில் எதிர்க்கிறீர்களா?

பதில்: இத்தகைய ஒருங்கிணைப்பு முயற்சிகளுக்கு நான் ஆதரவுடையவன் என்பதை மிகத் தெளிவாகவும் வெளிப்படை யாகவும் தெரிவித்திருக்கிறேன். இத்தகைய திட்டத்தை நான் வரவேங்கிறேன் என்பதையும், மற்ற விடுதலைக் குழுக்கள் தமக்கிடையிலான வேறுபாடுகளைக் களைந்து, பொது வேலைத் திட்டமொன்றினை ஏற்கும்பட்சத்தில் அத்தகைய கூட்டு முன்னணியில் இணைந்துகொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதையும் இந்த விடுதலை அணிகளுக்கு 02.09.1982இல் நான் கடிதம் மூலம் தெரிவித்திருக்கிறேன். ஆனால், துரதிர்ஷ்டவசமாக இக்குழுக்கள் ஒரு பொதுப் படையான வேலைத்திட்டத்தை உருவாக்குவதில் தோல்வி கண்டன. மாறாக, ஒவ்வொரு ஒருங்கிணைப்புக் கூட்டத்திலும் ஒருவருக்கொருவர் பிணக்குப்பட்டு மேலும் பிளவுற்றனர். இதில் வருந்தத்தக்க உண்மை என்னவென்றால், ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்ற உண்மையான நோக்கம் இந்த குழுக்களிடையே இல்லை என்பது தான். அவர்களது சொல் லுக்கும் செயலுக்குமிடையே பெரும் இடைவெளி காணப் படுகிறது. தங்களுக்கிடையிலான ஒற்றுமையின்மைக்குப் புலிகளைக் குற்றம் சாட்டுவதைக் கைவிடுத்து இக்குழுக்கள் தங்களுக்கடையிலே ஒற்றுமையை ஏற்படுத்தி முன்னுதாரண மாகத் திகழ வேண்டும். ஒரு பொதுத் திட்டத்தில் அவர்கள் ஒருங்கிணையும்போது அவர்களுடன் கைகோர்த்துச் செல்ல நாம் தயாராக இருக்கிறோம்.

கேள்வி: உங்களைத் தவிர மற்ற அனைவரும் ஒருங் கிணையும் கருத்திற்கு ஆதரவு தருவதாக ஏனைய விடுதலைக் குழுக்களின் அமைப்பாளர்கள் என்னிடம் கூறியிருக்கிறார்கள். இது உண்மையா?

பதில்: இது முற்றிலும் பொய்யானது. எங்கள் இயக்கத்திற்கு இழிவு தேட ஏனைய குழுக்கள் மேற்கொண்டிருக்கும் பொய்ப்பிரச்சாரத் தந்திரம் இது.

கேள்வி: விடுதலைப் போராட்டத்தில் நீங்கள் தனித்து நிற்கிறீர்களா?

பதில்: இல்லை. நான் பலம்மிக்க தேசியப் போராட்ட இயக்க மொன்றினை தலைமைதாங்கி நடத்துபவன். பரந்து பட்ட தமிழ் மக்கள் எனக்கு ஆதரவாக இருக்கிறார்கள்.

கேள்வி: தனிமை உங்களை வாட்டும் கணங்கள் உண்டா? அதை எவ்வாறு எதிர்கொள்கிறீர்கள்?

பதில்: இத்தகைய தனிமையுணர்வுகள் என்னைப் பீடித்த தில்லை. தங்களின் தனிப்பட்ட மனக் குகைக்குள் தங்களை அமிழ்த்திக்கொள்பவர்களுக்கு இந்தத் தனிமையுணர்வு ஒரு பிரச்சினைதான். ஒரு உண்மையான புரட்சியாளன் இத்தனி நபர் பிரச்சினைகளை மேவி, ஒரு கூட்டு பிரக்ஞையை, சமூகப் பிரக்ஞையை உருவாக்குகிறான். நான் ஒரு பொதுவான, சமூச இலட்சியத்திற்காக வாழ்பவன் அதற்காகப் போராடுபவன்.

கேள்வி: ஒரு சாதாரண இளைஞனின் வாழ்க்கையை வாழவில்லையே என்று நீங்கள் வருந்தியதுண்டா?

பதில்: நீங்கள் சொல்கிறமாதிரி சாதாரண வாழ்க்கை நடத்து கின்ற லட்சக்கணக்கான இளைஞர்கள் உள்ளனர். ஆனால், நாங்களோ ஒரு உன்னத இலட்சியத்துக்காகப் போராடி வருகி றோம். அந்த இலட்சியத்திற்காக உழைப்பதும், வாழ்வதும் எங்களுக்குப் பூரண ஆத்ம நிறைவைத் தருகிறது.

கேள்வி: இலங்கையில் பெரும்பாலான தமிழ் இளைஞர்கள் இருள்மயமான எதிர்காலத்தை எதிர்நோக்கியிருக்கின்றனர் என்று நீங்கள் கவலைகொள்வதுண்டா?

பதில்: இல்லை. இன்றைய இளம் சமூகத்தினர் சுதந்திரத் திற்கான போராட்ட களத்தில் குதித்துள்ளனர். இவர்களின் எதிர்காலம் ஒளிமயமானது என்றே எனக்குத் தெரிகிறது.

கேள்வி: விடுதலைப் போராட்டத்தில் மேன்மேலும் இளை ஞர்கள் பங்கு கொண்டு வருகிறார்கள் என்பது உண்மை தானா?

பதில்: ஆம். மேன்மேலும் இளைஞர்கள் புரட்சிப் போரில் குதித்து வருகின்றனர். தங்களுக்கும் தங்கள் சமூகத்துக்கும் ஆயுதப் போராட்டத்தின் மூலமே விமோசனம் உண்டு என்பதை உணர ஆரம்பித்துள்ள இளைய தலைமுறையினர் எங்கள் இயக்கத்தின் தலைமையின்கீழ் அணிதிரண்டு வருகின்றனர்.

கேள்வி: "பிரிவினைவாதிகள்" என்றும் "சுதந்திரப் போராளிகள்" அல்ல "பயங்கரவாதிகள்" என்றும் உங்கள் இயக்கத்தைப் பற்றிக் கூறப்படுகிறதே, அதற்கு உங்கள் பதில் என்ன?

பதில்: "பிரிவினைவாதிகள்" என்று எமது இயக்கத்தைக் குறிப்பிடுவது மிகத் தவறானது. "பிரிவினைவாதம்" என்பது தவறான சித்தாந்தம். இதனை எங்கள் போராட்டத்திற்குப் சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் தேசிய விடுதலைக்காக நாங்கள் போராடி வருகிறோம். சுயநிர்ணய உரிமைக்காக நாங்கள் போராடுகிறோம். எங்கள் தாயகத்தின் இறைமையை மீட்டெடுக்க நாங்கள் போராடுகிறோம். பிரிவினைக்காகவோ, நாட்டைக் கூறு படுத்துவதற்காகவோ நாங்கள் போராட வில்லை. எங்கள் மக்கள் சுதந்திரத்தோடும், சுய கௌரவத் தோடும் வாழுகின்ற புனித உரிமையைப் பாதுகாப்பதற்காக நாங்கள் போராடுகிறோம். இந்த அர்த்தத்தில் நாங்கள் பயங்கர வாதிகள் அல்லர் சுதந்திரப்போராட்ட வீரர்களே.

கேள்வி: சிங்கள இராணுவத்தின் கரங்களில் பிடிபடுவதைவிட மரணமடைவது மேலானது என்று கருதுகிறீர்களா?

பதில்: உயிரோடு எதிரிகள் கைகளில் பிடிபடுவதைவிட கௌரவமாகச் சாவதையே விரும்புகிறேன்.

கேள்வி: உங்கள் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் ஜூலை 23 ஆம் தேதி நடத்திய தாக்குதலில் 13 சிங்கள இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். அப்பாவித் தழிழர்களுக்கு எதிராகச் சிங்களவர்கள் தாக்குதல் நடத்தியமைக்கு உங்களின் கொரில் லாத் தாக்குதலே காரணம் என்று கூறுப்படுகிறது. இத்தகைய பாரிய பதில் தாக்குதலை நீங்கள் எதிர்பார்க்கவில்லையா?

பதில்: ஜூலைக் கலவரத்தை விடுதலைப் புலிகளின் கொரில் லாத் தாக்குதலுக்கு எதிரான சிங்களவர்களின் பதில் தாக்குதல் என்று வெறுமனே மதிப்பிட்டுவிட முடியாது. இவ்வாறு கூறுவது அந்தச் சம்பவத்தை மிகவும் எளிமைப்படுத்துகிறது. இலங்கை யில் காலம் காலமாக, திட்டமிட்ட முறையிலே தமிழர்களுக் கெதிரான தாக்குதல் தொடர்ச்சியாக நடந்து கொண்டிருக்கிறது. எங்களின் இயக்கம் தோன்றுவதற்கு முன்போ இனவெறிப் பேரழிவுகள் நடந்திருக்கின்றன. நாங்கள் இராணுவத் தாக்குதலை நடத்துவதற்குச் சில கிழமைகளுக்கு முன்பே திருகோணமலையில் மோசமான இனத் தாக்குதல்கள் நடந்து கொண்டிருந்தன. ஆகவே, தமிழர்களுக்கெதிரான இனத் தாக்குதலைத் தனித்த ஒரு சம்பவத்தின் அடிப்படையில் விமர் சிக்க முடியாது. நாங்கள் நீண்ட ஒரு கொலில்லா யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறோம். பல கொலில்லாத் தாக்குதல்களை நடத்தியிருக்கிறோம். பல சிங்கள இராணுவ வீரர்களையும் போலீஸ்காரர்களையும் அழித்திருக்கிறோம். ஜூலையில் நாங்கள் நடத்திய கொரில்லாத் தாக்குதல் நாங்கள் நடத்திவரும் தொடர்ச்சியான போராட்டத்தின் ஒரு அங்கம்தான். குறிப்பிட்ட ஒரு இராணுவ நடவடிக்கைதான் முழுக் கலவரத்திற்கும் காரணம் என்று கருதுவது தவறானதாகும். ஜூலைக் கலவர மானது எம் மக்களைக் கொன்று குவிக்கும் நோக்கம் மட்டும் கொண்டதல்ல. கொழும்பில் வாழுகின்ற தமிழர்களின் பொருளாதாரத் தளத்தையே அழித்து விடுவதையும் நோக்க மாகக் கொண்டிருந்ததை நீங்கள் நிச்சயமாக அவதானித் திருப்பீர்கள். எங்களுடைய கண்ணோட்டத்தில், ஜூலைப் பேரழிவானது அளும் கட்சியின் இனவெறிச் சக்திகளால் தமிழர்களுக்கெதிராக நன்கு திட்டமிடப்பட்டு, செயற்படுத்தப்பட்ட இனப் படுகொலைத்திட்டமாகும். ஆரம்பத்தில் இந்த வெறிக் கும்பல் முழுக் குற்றச்சாட்டையும் புலிகள் மேல் சுமத்த முனைந் தது. பிறகு திடீரென்று தங்கள் கருத்தை மாற்றிக்கொண்டு இனக்கலவரங்களுக்கு இடதுசாரிகளே காரணம் என்று குற்றம் சாட்டியது. உண்மையில் எமது மக்களின் பாரிய உயி ரிழப்பிற்கும், அவர்களின் உடமை நாசத்திற்கும் இன்றைய அரசாங்கத்தின் இனவெறிபிடித்த தலைவர்களே பொறுப்பேற்க வேண்டும்.

கேள்வி: ஏன் நீங்கள் இந்தத் தாக்குதலை நடத்தினீர்கள்? இதற்குப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. நான்கு தமிழ்ப் பெண்மணிகள் கற்பழிக்கப்பட்டதற்கு எதிரான ஒரு பழி வாங் கல் நடவடிக்கைதான் இது என்று சிலர் கூறுகிறார்கள். நான் விசாரித்தவரையில், உங்களின் இராணுவப் பிரிவுத் தலை வரும் நெருங்கிய நண்பருமான சார்லஸ் அன்ரனியின் மர ணத்தில் வெற்றிப் பெருமிதம் கொண்டிருந்த சிங்கள இரா ணுவத்திற்குப் பாடம் படிப்பிப்பதற்காகத்தான் இத்தாக்குதல் நடந்தது என்று தோன்றுகிறது. அதாவது விடுதலைப் புலிகள்

தமிழீழம் என் தாகம்

இயக்கம் அதன் ஆற்றல் மிகுந்த தலைவர்களில் ஒரு வரை இழந்துவிட்ட பிறகும் கூட சிங்கள இராணுவத்தை எதிர் கொள்ளக் கூடிய வலிமை கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் நிரூபிக்க முயன்றிருக்கிறீர்கள் என்று நான் கருதுகிறேன். இந்தக் கருத்து சரியா? அல்லது இதைவிடவும் கூடுதல் காரணங்கள் உண்டா?

பதில்: சார்ல்ஸ் அன்ரனி பற்றியும் இத்தாக்குதல் பற்றியும் நீங்கள் சொல்வதில் ஓரளவு உண்மை இருக்கத்தான் செய்கிறது. இத்தாக்குதல் ஓரளவிற்குப் பதிலடிதான் சிங்கள இராணுவத்திற்குத் தண்டனைதான். இருப்பினும் எங்களைப் பொருத்தவரை சார்ல்ஸ் போன்ற உன்னதப் புரட்சிவாதியின், விடுதலை வீரனின் உயிருக்குப் பதின்மூன்று இராணுவத் தினரின் உயிர்கள் ஒருபோதும் ஈடாகாது. வேறொரு வகையில், எதிரியை நோக்கித் தொடுக்கப்பட்டிருக்கும் எமது கொரில்லாப் போர் முறையின் ஒரு பகுதிதான் இத்தாக்குதலாகும்.

கேள்வி: வட்டமேசை மாநாடு எந்தவித நிரந்தரமான தீர்வை யாவது உருவாக்கும் என்று நீங்கள் நம்புகிறீர்களா?

பதில்: தமிழர்களின் பிரச்சினைகளுக்கு வட்ட மேசை மாநாடு எந்தவித நிரத்தரத்தீர்வையும் தராது என்பது என் கருத்து. கடந்த கால அரசியல் அனுபவத்தின் அடிப்படையிலேயே இம்முடிவிற்கு வந்திருக்கிறோம். இச் சிங்களத் தலைவர்கள் ஒருபோதும் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண எந்தவித நேர் மையான முயற்சியும் மேற்கொண்டதில்லை. இப்போதைய பேச்சு வார்தைகளுக்கும் இந்த கதிதான் நேரும். முக்கியமான சகல சிங்களக் கட்சிகளும் பௌத்த அமைப்புகளும் தமிழர் களுக்குப் பிரதேச சுயாட்சியை எந்த வடிவத்திலும் எந்த அள விலும் தரத் தயாராக இல்லை. சிறு சலுகைகள் வழங்கப் படுவதைக் கூட அவர்கள் எதிர்க்கிறார்கள். இம்மாநாட்டிலிருந்து உருப்படியாக எதுவும் கிடைக்காது.


கேள்வி: தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் விடுதலைப் போராட்டத்தை பின்னுக்குத் தள்ளுகிறார்கள் என்று நீங்கள் கருதுகிறீர்களா? ஏன்? அவர்களைத் துரோகிகள் என நினைக்கிறீர்களா?

பதில்: தமிழர் விடுதலைக் கூட்டணியின் சந்தர்ப்பவாத அரசியலானது விடுதலைப் போராட்டத்தை நிச்சயமாகப் பின்னுக்குத் தள்ளத்தான் செய்கிறது. இப்போராட்டத்தை முன் னெடுத்துச் செல்ல திட்டவட்டமான நடவடிக்கைகள் எதனையும் அவர்கள் ஒருபோதும் எடுத்ததில்லை. மாறாக, அவர்கள் பொய்யான நம்பிக்கைகளைத் தருகிறார்கள் பிரமைகளை ஏற்படுத்துகிறார்கள் எமது மக்களைத் தொடர்ந்து அடிமைத் தனத்திலேயே வைததிருக்க முனைகிறார்கள். அவர்கள் தங்களது சுயநல அபிலாசைகளை அடையவே அரசியலில் நுழைந்தார்கள். ஒடுக்கப்பட்ட மக்களை விடுதலை செய்வதற் கான உண்மையான நோக்கம் எதனையும் அவர்கள் ஒரு போதும் கொண்டிருக்கவில்லை. அத்தோடு, எந்தவிதமான உருப்படியான அரசியல் வேலைத்திட்டத்தையும் அவர்கள் முன்வைக்கவில்லை. அந்த விடுதலைப் போராட்டச் சூறா வழியில் மாட்டிக்கொள்வார்கள் என்று அவர்கள். ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை. புரட்சியின் ஜ்வாலை தமிழீழம் முழு வதும் வேகமாகப் பரவிக் கொண்டிருக்கிறது. இதை அணைக்க அவர்கள் தங்களால் ஆனமட்டும் முயன்று பார்க்கிறார்கள். இந்த அர்த்தத்தில் அவர்களைத் துரோகிகள் என வர்ணிக் கலாம்.

கேள்வி: தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் தமது சொந்த வீடுகளுக்குத் திரும்பப் பயப்படுகிறார்கள் என்பதற்குக் காரணம் சிங்களவர்கள் அல்ல, புலிகள்தான் என்கிறார்களே, இது உண்மையா?

பதில்: அவர்கள் பயப்படுவது புலிகளுக்கல்ல. சுதந்திரத் தமிழீழம் பெற்றுத் தருவார்கள் என்ற நம்பிக்கையில் அவர் களுக்கு வாக்களித்த மக்களின் கோபாவேசத்துக்குத் தான் அவர்கள் பயப்படுகிறார்கள்.

05.05.1976



தமிழீழ விடுதலைப்புலிகள் பிறப்பு

தமிழீழம் என் தாகம்

கேள்வி: இந்தியாவின் நல்லெண்ண முயற்சிகள் உருப்படியான தீர்வு எதையும் தருமா?

பதில்: இந்தியாவின் நல்லெண்ண முயற்சிகள் எம் மக்களுக்கும் ஆக்கபூர்வமான நம்பிக்கையைத் தந்திருக்கின்றன. ஆனால், சிங்கள இனவெறி அரசு தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க இந்த உதவியைப் பயன்படுத்திக்கொள்ளும் என நான் நினைக்கவில்லை.

கேள்வி: இந்த மாதிரி நிலைமையில் தமிழர்களுக்கு உதவ இந்தியா செய்யக்கூடிய மிகச் சரியான காரியம் எதுவாக இருக்க வேண்டும்?

பதில்: எம் மக்களின் நியாயமான, நேரிய கோரிக்கைகளை இந்திய அரசு அங்கீகரித்து, சுய நிர்ணயத்திற்கான எங்கள் உரிமையினை ஏற்க வேண்டும்.

கேள்வி: இந்தியாவின் இராணுவம் இதில் தலையிட வேண்டுமென்று நீங்கள் நினைக்கிறீர்களா?

பதில்: எமது சுதந்திரத்தை நாமே போராடி வென்றெடுக்கும் மனோதிடமும், நம்பிக்கையும் உறுதிப்பாடும் எங்களிடம் உண்டு. நாமே போராடி எம்மை விடுவித்துக்கொள்ள வேண்டும். எனினும் எங்களுக்கு இந்தியாவின் ஆதரவும் அனுதாபமும் அவசியமாகின்றது.

கேள்வி: ஜனாதிபதி ஜெவர்த்தனா பற்றிய உங்களின் தனிப்பட்ட மதிப்பீடு என்ன?

பதில்: ஜெவர்த்தனா ஓர் உண்மையான பௌத்தராக இருப்பாராயின் நான் ஆயுதம் ஏந்தியிருக்க நேர்ந்திராது.

கேள்வி: இந்தப் பேச்சுவர்த்தைகளை ஜெயவர்த்தனா நடத்துவதன் நோக்கம் என்னவென்று நினைக்கிறீர்கள்? காலம் கடத்தப் பார்க்கிறாரா? அப்படியானால் எதற்கு?

பதில்: இந்தச் சமாதானப் பேச்சு வார்த்தைகளை ஜெயவர்த்தனா நடத்துவதற்குப் பல காரணங்கள் உண்டு. முதலில் இந்தியர்களின் கோபத்தைத் தணிப்பது. இரண்டாவது இனக் கலவரங்கள் இலங்கையின் பெயருக்கு ஏற்படுத்திய பெரும் களங்கத்தை நீக்குவது. மூன்றாவதாக நிதியுதவி தரும் மேற்கத்தையை ஸ்தாபனங்களிலிருந்து உதவி பெறுவது. கால அவகாசம் பெற்று சிங்கள இராணுவ இயந்திரத்தைப் பலப்படுத்துவது.

கேள்வி: தன்னுடைய அமைச்சரவையில் இருக்கும் தீவிரவாதிகளின் பிடிக்குள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா சிக்கிக் கொண்டிருக்கிறாரா? அல்லது அவர் தன்னிச்சையாகவே இயங்குகிறாரா? அல்லது பௌத்த குருமார்களால் நெருக்கப்படுகிறாரா?

பதில்: ஜெயவர்த்தனா சுயமாகத்தான் இயங்குகிறார் அவருக்கு சர்வ அதிகாரங்களுமுண்டு. அமைச்சரவையின் தீவிரவாதிகளும் பௌத்த குருமார்களும் அவருக்கு உறுதுணையாக இருக்கிறார்கள்.

கேள்வி: சிறீலங்காவில் பௌத்த குருமார்கள் என்ன பங்கு வகிக்கிறார்கள்?

பதில்: சிறீலங்காவின் அரசியற் போக்குகளை நிர்ணயிப்பதில் பௌத்த குருமார்களுக்கு மிக முக்கியமான பங்குண்டு. சிங்கள மக்கள் மத்தியில் தமிழருக்கு எதிரான இனவெறியைத் தூண்டிவிட்டதில் அவர்கள் மிக முக்கிய பங்கு பகித்திருக்கிறார்கள்.

கேள்வி: சிறீலங்காவை தனிச் சிங்கள பௌத்த நாடாக மாற்றும் முயற்சியில் பௌத்த குருமார்கள் கணிசமான வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்று நினைக்கிறீர்களா?

பதில்: சிறீலங்கா ஏற்கனவே ஒரு தனிச் சிங்கள பௌத்த நாடுதான். இதில் பௌத்த பிக்குகளுக்குப் பெரும் பங்குண்டு.

கேள்வி: இது பௌத்த குருமார்களின் இனவெறியின் விளைவா? அல்லது கிறிஸ்தவ குருமார்கள் தமிழர்களுடன் ஒன்று பட்டதன் விளைவா?

பதில்: இந்த இனவெறி அரசை ஸ்திரப்படுத்துவதில் பௌத்த குருமார்களுக்கு முக்கியமான பங்கு உண்டு. தமிழ் கிறிஸ்தவ பாதிரிமார்கள் தமிழர் பிரச்சினைக்கு அனுதாபம் காட்டுகின்றனர். ஆனால், சிங்கள கிறிஸ்தவப் பாதிரிமார்கள் சிங்களப் பேரினவாத வெறுப்புணர்வை வெளிப்படுத்தித் தமிழர்களின் கோரிக்கைகளை எதிர்க்கின்றனார்.

கேள்வி: உலக விடுதலை இயக்கங்களுடன் உங்களுக்குத் தொடர்புகள் உண்டா? எந்த அமைப்புகள் உங்களுக்குப் பயிற்சியும், ஆயுத உபகரணங்களும் தந்து உதவுகின்றனர்?

பதில்: உலகின் ஏனைய விடுதலை இயக்கங்களுடன் எங்களுக்குத் தொடர்புகள் உண்டு. உங்களின் இரண்டாவது கேள்விக்குப் பதிலளிக்க நான் விரும்பவில்லை.

கேள்வி: உங்களின் இந்தப் போராட்டத்திற்கு எந்த நாடு மிகவும் அனுசரணையாக இருக்கிறது?


பதில்: இதுபற்றி ஒன்றும் நான் சொல்ல விரும்பவில்லை.

கேள்வி: உங்களின் சித்தாந்தக் கோட்பாடு என்ன?

பதில்: புரட்சிகர சோசலிசம்.

கேள்வி: எதிர்காலத்தில் தமிழர்கள் மீது தாக்குதல்களை எதிர் பார்க்கிறீர்களா? எந்தக் காரணத்தை முன்னிட்டு?

பதில்: ஆம். நான் எதிர்பார்க்கிறேன். திருகோணமலையில்லும் வவுனியாவிலும் பெரும் எண்ணிக்கையில் தமிழர்களைக் கொல்லுவதற்கான ஒரு நாசகாரத் திட்டத்தை இனவெறி பிடித்த



பாசிச சக்திகள் உருவாகி வருகின்றன. தங்களுடைய உயிர்களையும் உடமைகளையும் பாதுகாக்கும் சக்தி வாய்ந்த தேசிய இராணுவத்தின் உதவியுடன் சுதந்திரமான தமிழீழ நாடு நிறுவப்பட்டால் ஒழிய ஒருபோதும் தமிழர்கள் பாதுகாப்பாக இருக்கப் போவதில்லை.

கேள்வி: கொரில்லாக்களுக்கு எதிரான போர் முறைகளில் சிங்கள இராணுவத்திற்கு இஸ்ரேலியர்கள் பயிற்சி தருகின்றனர் என்பது உண்மையா?

பதில்: இதுவரை இலங்கையில் இஸ்ரேலிய இராணுவ நிபுணர்கள் இருப்பதைப்பற்றி நம்பத்தகுந்த செய்திகள் எதுவும் எங்களுக்குக் கிடைக்கவில்லை. இப்படிப்பட்ட செய்திகள் உண்மையாக இருந்தாலும் நான் ஆச்சரியப்படமாட்டோன். சிறீலங்கா அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும் அதன் கூலிகளுக்குமான ஒரு தளமாக விரைவாக மாறிக்கொண்டு வருகிறது. பயிற்சி தருபவர்கள் யாராக இருந்தாலும், அவர்களின் நிபுணத்தவம் எத்தகையதாக இருந்தாலும் விடுதலைப் புலிகளின் மனோதிடத்ததையும், உறுதியையும் அழித்தவிட சிங்கள இராணுவத்தால் முடியாது. மகத்தான தார்மீக வலிமையும், தியாக உயர்வும், உன்னத இலட்சியப்பற்றும் எங்களுக்கு உண்டு.

கேள்வி: அமெரிக்காவிலிருந்து சிறீலங்காவிற்குப் பெருமளவில் ஆயுதங்களும், உபகரணங்களும் வந்து குவிவதுபற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்: இந்த ஆயுதக் குவிப்பு தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு மட்டுமல்ல, இந்தியாவின் பாதுகாப்பிற்கும் ஆபத்து விளைவிக்கக்கூடியது. சிறீலங்கா இராணுவத்திற்கு உதவி செய்து தமிழீழ சுதந்திரப் போராட்டத்தை நசுக்குவது மட்டும் அமெரிக்காவின் நோக்கமல்ல என்பது உங்களுக்குத் தெரிந்ததே. திருகோணமலையில் ஒரு கடற்படைத் தளத்தை அமைத்துக்கொள்வது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கபட நோக்கம். இது இந்து சமுத்திரப் பகுதியை யுத்தப் பிராந்தியமாக மாற்றுவதுடன் இப்பிரதேசத்தில் யுத்த நெருக்கடியை உண்டு பண்ணும்.

கேள்வி: எப்படியோ ஒருகாலம் தமிழீழம் கைகூடிவிட்டால் அது எவ்வகையான நாடாக அமையுமென நீங்கள் நினைக்கிறீர்கள்?

பதில்: தமிழீழம் ஒரு சோசலிச அரசாக அமையப்பெறும். சோசலிசம் என்பதன் மூலம் சமத்துவமான சமூக அமைப்பை நான் கருதுகின்றேன். இதில் மனித சுதந்திரத்திற்கும், தனிநபர் உரிமைகளுக்கும் உத்தரவாதமுண்டு. எல்லாவித ஒடுக்குமுறையும் சுரண்டலும் ஒழிக்கப்பட்ட மக்களின் உண்மையான ஜனநாயகமாக அது திகழும். தமிழ் மக்கள் தங்களுடைய பொருளாதாரத்தைப் பேணி வளர்த்து தமது கலாசாரத்தை மேம்பாடு செய்யும் வகையில் அவர்களுக்கு அதிகபட்ச வாய்ப்புகள் கிடைக்கின்ற ஒரு சுதந்திரச் சமூகமாகத் தமிழீழம் அமையும். இந்தச் சுதந்திரத் தமிழீழம் நடுநிலை நாடாக இருப்பதுடன் அணிசேராக் கொள்கையைக் கடைப்பிடிக்கும். அத்தோடு இந்தியாவோடு நேச உறவு கொண்டு அதன் பிராந்தியக் கொள்கைகளை குறிப்பாக இந்துமாக சமுத்திரத்தை ஒரு சமாதானப் பிராந்தியமாக்கும் வெளிநாட்டுக் கொள்கையைக் கௌரவிக்கும்.

கேள்வி: உங்கள் கணிப்பில் தமிழீழத்தை எப்போது அடைவீர்கள்?

பதில்: விடுதலைப் போராட்டத்திற்கு கால வரையறையோ அல்லது ஒரு பூர்வாங்கத் திட்டமோ இருக்க முடியாது. தமிழீழத்திலும் உலக அரங்கிலும் உருவாகும் நிலைமைகளைப் பொறுத்து இது அமையும்.

புலிகள் இயக்கமும் தமிழீழக் கோரிக்கையும்

"தமிழீழம்" என்ற தனியரசுக் கோரிக்கை - இலங்கைத் தீவில் - ஒரே இரவில் நடந்தேறிய ஒரு அரசியல் நாடகமல்ல.

நீண்டபல வருடங்களாக பேரினவாத வெறிகொண்ட சிங்கள ஆட்சியாளர்களால், தமிழினம், அரசியல் - சமூக - பொருளா தாதரீதியாக ஒடுக்கப்பட்டு - பாரபட்சம் காட்டப்பட்டு வந்தது. ஆனாலும், இலங்கை அரசின் ஒற்றையாட்சி அரசிய லமைப்பிற்குள் - காலத்திற்குக் காலம் - பற்பல கோரிக்கைகளை முன்வைத்து, இனப்பிரச்சினைக்குச் சுமுகமாகத் தீர்வுகாணவே தமிழினம் முயன்றது.

ஆனால், சிங்கள ஆட்சியாளர்களோ தமிழர்களின் சாதாரண அரசியற் கோரிக்கைகளுக்குச் செவிமடுக்காததுடன், இன்னு மொரு படி மேலே சென்று, தமிழின விரோத சட்டங்களை இயற்றி, அவற்றை அரசியலமைப்புச் சட்டத்திலும் இணைத்து தமிழினத்தை மேலும் மேலும் அடக்க முற்சி எடுத்தனர்.

மொழி, கல்வி, வேலைவாய்ப்பு, அபிவிருத்தி, காணிப் பகிர்வு போன்றவற்றில் தமிழ்மக்களுக்கு எதிராகக் காட்டப்படும் ஒடுக்கு முறைகளை நீக்கும்படி, தமிழினம் சிங்கள ஆட்சியாளர்களை வேண்டியது. வேண்டுகோள்கள் கருத்திலெடுக்கப்படாது போக, இலங்கை அரசின் சட்டதிட்டங்களுக்கு அமைய சிங்கள அரசுக்கு எதிராகப் போராடி, உரிமைகளைப் பெறத் தமிழினம் முயன்றது.

சாத்வீக வழிமுறைகளில் அமைதியாக நடந்த இந்த உரிமைப் போராட்டங்களின் காரணிகளையும் அதன் நியாயப்பாடு களையும், சிங்கள அரசு தெரிந்து கொண்டும், அக்கோரிக்கை களைக் கருத்திலெடுத்துப் பரிசீலிப்பதற்குப் பதிலாக, தனது படைபலத்தைக் கையிலெடுத்து வன்முறைமூலம் பதிலளித்து வந்தது.

மென்முறைவழியில் தமிழினம் உரிமைகேட்டதும் அதை வன்முறை கொண்டு சிங்கள ஆட்சியாளர்கள் அடக்குவதும், இலங்கை அரசியல் வரலாற்றில் தொடர்ந்தது.

நாட்கள் செல்லச்செல்ல, தமிழினத்தின் அரசியல் அபிலாசை களை நசுக்குவதில், சிங்கள ஆட்சியாளர்கள் காட்டிய மூர்க்கத் தனம் - படிப்படியாக - தீவிரமாகி, ஒரு **"இன அழிப்பு"** வடி வத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது.

நிலம், மொழி, பொருளாதாரவாழ்வு, பண்பாட்டு அம்சங்கள் என்று தமிழ்த்தேசியத்தின் தூண்களை இடித்துச்சிதைப்பதில், சிங்கள ஆட்சியாளர்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஈடுபட்டு வந்தனர்.

இந்த நிலையில் - வேறுவழிகளின்றி - தனது சொந்தப் பாதுகாப்பின் அவசியத்தை உணர்ந்து, ஒரு சொந்த அரசு பற்றி எண்ணத் தொடங்கியது.

இதன் விளைவாக " தமிழீழம்" என்ற தனியரசுக் கோரிக்கை வரலாற்றுப் பிறப்பெடுத்தது.

இவ்விதம், தமிழினம் விடுத்த சாதாரண - சிறிய - அரசயிற் கோரிக்கைகளைச் சிங்கள ஆட்சியாளர்கள் நிறைவேற்ற மறுத்து, மேன்மேலும் தமிழினத்தின் மீது ஒடுக்குமுறைகளைப் பிரயோகித்தகாரணத்தினாலேயே - படிப்படியாக - தனியரசு என்ற ஒரு உயர்ந்தபட்சக் கோரிக்கைக்குத் தமிழினம் செல்ல வேண்டிய வரலாற்று நிர்ப்பந்தம் எழுந்தது.

ஆரம்பத்தில், தமிழீழக் கோரிக்கையானது வெறும் சுலோக மாகவே இருந்து வந்தது. தமிழினத்தின் ஏகோபித்த ஆதரவு அதற்கிருந்தும், அதற்கு ஒரு நடை முறைவடிவம் கொடுக்கும் வல்லமை பழைய தலைமையிடம் இருக்கவில்லை.

தமிழினத்தின் தமிழீழக் கோரிக்கைக்கும், அதை நடைமுறைப் படுத்தவேண்டிய தலைமைக்குமிடையே ஒரு பெரும் இடைவெளி இருந்தது.

புலிகள் இயக்கம் இந்த வரலாற்றுப் பொறுப்பை ஏற்று, இடைவெளியை நிரப்பி, தன்னாட்சி உரிமைக் கோரிக்கையின் அடிப்படையில் தமிழீழக் கோரிக்கைக்குச் சரியானதொரு நடைமுறை வடிவம் கொடுத்தது.

ஆயுதப் போர் வழிமூலம் தமிழினத்தின் சுதந்திரப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆயுதப் போராட்ட வழியில் ஈடுபட்டிருந்த பொழுதிலும் அரசியல் தீர்வுக்கான கதவுகளை, நாம் அடைக்கவில்லை.

தமிழினத்தின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய ஒரு நியாயமான அரசியல் தீர்வை அடைவதற்கு, திம்புவி லிருந்து கொழும்புவரை எம்மாலான முழு முயற்சிகளையும் செய்திருந்தோம்.

சிங்கள அரசுடனான இந்தப் போர் தீவிரமடைந்த இன்றும்கூட அரசியல் தீர்வுக்கான கதவுகளை, அமைதிவழி மூலமான பாதைகளை நாம் மூடவில்லை. எமது இயக்கத்தின் இந்த அரசயில் நிலைப்பாட்டை பல சந்தர்ப்பங்களில் தலைவர் பிரபாகரன் அவர்கள் தெளிவு படுத்தியுள்ளார்.

உண்மை நிலை இப்படியிருக்க, சிங்கள அரசோ, "தமிழீழம்" என்ற தனிநாட்டுக்கோரிக்கையில் புலிகள் பிடிவாதமாக இருந்து, மாற்று யோசனைகளைத் தெரிவிக்காது அரசியல் தீர்வுக்கு முட்டுக்கட்டை போடுகின்றார்கள் என, புலிகள் இயக்கத்தைக் குற்றம்சாட்டி வந்தது.

தமிழினத்தின் தமிழீழக் கோரிக்கையானது சிங்கள ஆட்சியாளர்களுடன் பேசிப்பெறும் விடயமல்ல; அது இரத்தம் சிந்திப்போராடி எமது தாயகத்தை மீட்டு, சொந்த அரசொன்றை அமைப்பதாகும்.

ஆனால், ஒரு அரசியல் கோரிக்கை மூலம் இனப் பிரச்சினைக் குச் சுமுகமான தீர்வுகாண்பது என்பது அப்படியல்ல. அது பேச்சுவார்த்தைகள் மூலம் இரு பகுதியினரும் ஒரு இணக் கத்துக்கு வருவதாகும்.

மீண்டும் இப்போது, தமிழ்மக்களின் நியாயமான அரசயில் அபிலாசைகளைத் தீர்க்கக்கூடிய ஒரு சந்தர்ப்பத்தை, சிங்கள ஆட்சியாளர்களுக்கு, தலைவர் பிரபாகரன் வழங்கியுள்ளார்.

ஆதாவது, **"தமிழர் தாயகத்தின் பூகோள முழுமை அங்கீ கரிக்கப்பட்ட ஒரு சமஷ்டி அமைப்பைப் பரிசீலிக்கத் தயார்"** எனத் தலைவர் அறிவித்துள்ளார்.

இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு அறிவிப்பாகும்.

இந்த அறிவிப்பைச் சிங்கள ஆட்சியாளர்கள் சாதகமான முறையில் பரிசீலிக்க விரும்பாது, தட்டிக்கழிக்க முற்பட்டால், அது சிங்கள தேசம் செய்யும் ஒரு பெரும் வரலாற்றுத் தவறாகவே இருக்கும்.

அவ்விதம் தலைவரின் அறிவிப்பு நிராகரிக்கப்படுமானால் தமிழினத்திற்கு **"தமிழீழம்"** என்ற தனிநாடுதான் இறுதியான - நிரந்தரத் தீர்வு என்பது தவிக்க முடியாத ஒரு வரலாற்றுத் தேவையாக எழும்.

பங்குனி — 1993 விடுதலைப்புலிகள்



முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

சிறுவர் இல்லங்கள், ஒரு சில முதியோர் இல்லங்கள் Children's homes, a few nursing homes

இலங்கையில் யுத்தம் ஓய்ந்து ஒரு சாகாப்தகாலம் கடந்து விட்டது. ஆனாலும் வடக்கு, கிழக்கில் பல பராமரிப்பு இல்லங்கள் இன்னமும் இயங்கிவருகின்றன. இவை சிறுவர், மூத்தோர், சிறப்புத் தேவையுள்ளோர் இல்லங்கள் என வகைப்படும். இவை அனைத்தும் பொது மக்களின், பொது அமைப்புக்களின் நன்கொடைகளிலேயே தங்கியுள்ளன. தற்போதைய கோவிட்19 காலத்தில் நன்கொடைகள் குறைந்துள்ள இவ்வேளையில் எம்மாலான சிறு உதவிகளையேனும் இவ்வில்லங்களுக்கு வழங்கி இந்த இக்கட்டான காலத்தை கடக்க அனைவரும் உதவவேண்டுகின்றோம்

COVID 19 நோய்கள் பெரும் பரவல் காலம், உங்களை விட்டால் யாரும் இல்லை இவர்களுக்கு...!

"இந்தக் குழந்தைகள் யாருமற்றவர்களல்லர். தமிழன்னையின் புதல்வர்கள். வரலாற்றுப் பெருமை மிக்க சுதந்திரப் பெருமைமிக்க சுதந்திரப் போராட்ட சூழலில் இந்த இளம் விதைகளைப் பயிரிடுகின்றோம். இவை வேர்விட்டு வளர்ந்து விழுதுகள் பரப்பி விருட்சங்களாக மாறி ஒருகாலம் தமிழீழ தேசத்தின் சிந்தனைச் சோலையாகச் சிறப்புற வேண்டும் என்பதே எனது ஆவல்."



Amman Women & Child Development Center
Sagamam Rd, Kolavil 01, Akkaraipattu - Amparai 4 67 490 4955

Hermans Girls Home
Main St., Periyaneelavanai, Kalmurani - Amparai 97 76 058 5344

Jesus Lives Girls Home
Main St., Kalmuanai - Amparai 01 94 67 492 1161

Methodist Girls Home
Wesly School Rd, Kalmuanai - Amparai 94 67 222 9182

RKM Sharatha Girls Home
Girls Vidyalaya Rd, Karaithivu Amparai 05 94 67 222 3600

Seephe Divi Child Delelopment Centre
Kovil Rd, Veeramunai 01, Sammanthurai - Amparai 94 67 226 1144

Sri Indasara Child Development Centre
DK/65, Aralaganvila Rd, Dehiattakandiya - Amparai 94 27 562 2919

St. Maryís Boys Home
Yard Rd, Kalmunai - Amparai 01 94 71 354 5782

Swami Vipuilanantha Boys Children Development Centre
Kurukkal Rd, Akkaraipattu 7/2 - Amparai 94 67 227 7514

Canaan Harvest Childrenís Home
No 320/8, Passara Rd, 3rd Lane - Badulla 94 77 229 2022

Up Country Children Home
19/6, Badulupitiya Rd - Badulla 94 55 222 3335

Arutpani Girls Home
Beach Rd, Navakkuda - Batticaloa 94 77 6849

Assisi Boys Home
Main Rd, Kurukulmadam - Batticaloa 94 65 225 0313

Benthel Boys Children Home
Zoneal Education Office Rd, Valaichenai - Batticaloa 94 77 632 8577

Benthel Girlís Children Home
Zoneal Education Office Rd, Valaichenai - Batticaloa 94 77 632 8577

Bethel Girls Children Home
Vipulanada Rd, Valichenai - Batticaloa 94 77 515 3078

Eravur Children Care Home
Meerakerny Rd, Eravur - Batticaloa 94 77 996 6345

Good Shepherd Children Home
Post Office Rd, Valaichenai - Batticaloa 94 65 225 7400

Hari Boys Home
New Kalmuani Rd - Batticaloa 94 65 222 3653

Jeevananthan Girls Home
Main Rd, Pudukuduirippu - Batticaloa 94 65 365 0438

Kattankudy Boys Home
Kattankudy 01 - Batticaloa 94 65 224 5308

London Sivan Kovil Girls Home
Main Rd, Settipalayam - Batticaloa 94 65 205 6336

Managayarkarasi Girls Home
Maruthadi Rd - Batticaloa 94 65 205 7310

Manikkavasagar Boys Home
Palaiyadithona, Santhiveli, Kiran - Batticaloa 94 77 191 3037

Methodist Girls Home
Bar Rd, Kotamunai - Batticaloa 94 65 222 5402

Miyani Boys Home
Miyani nagar, Thannamunai - Batticaloa 94 77 459 0298

Miyani Girls Home
Miyani nagar, Thannamunai - Batticaloa 94 77 792 6410

Pariyowan Boys Home
Trinco Rd, Santhurukondan - Batticaloa 94 05 222 2524

Ramakrishana Boys Home
New Kalmunai Rd, Kalladi - Batticaloa 94 65 222 2752

Ramakrirushana Girls Home
New Kalmunai Rd, Kalladi - Batticaloa 94 65 222 2752

Sakthi Girls Home
Shakthi Home Rd, Kaluwanchikudy - Batticaloa 94 65 225 0745

Shakthi Girls Home
Arasadi Thervu, Kokaticholai - Batticaloa 94 65 364 2290

Shanthi Bawan Girls Home
Ghanasooriyam Sq., Cross Rd - Batticaloa 94 65 222 2524

Spaks Girls Home
Main Rd, Periya Kallaru - Batticaloa 94 67 222 1875

Thilahawathiyar Girls.Children Home
Main St., Kathiraveli, Vaharai - Batticaloa 94 77 629 8461

Thilahawathiyar Girls Home
Batticaloa - Hospital Rd, Palukamam - Batticaloa 94 65 225 1166

Thiruniyanasampathar Gurukulam
Main Rd, Kaluthavalai - Batticaloa 94 65 225 0277

Trust Village Womens Development Center
Savukady Rd, Mayilampavelhi - Batticaloa 94 76 789 7573

Vidhyajothi Boys Home
Central Rd - Batticaloa 94 77 481 6576

Vipulanantha Children Home

Main Rd, Palukamam - Batticaloa 94 65 225 1101

Vivehanada Children Home
Rattnam Rd, Valaichenai - Batticaloa 94 65 205 1442

Yoga Suwami Saiva Girls Children Home
Main Rd, Siththandi - Batticaloa 94 65 205 0420

St.Joseph Elders Home
Trinco Rd- Batticaloa 94 71 851 1951

Swami Vipulananthar Elder Home
Government Quaters Rd, Kallady - Batticaloa 94 65 222 6202

Ozanam Centre
Sathurukondan - Batticaloa 94 65 365 8636

Uthayam Association of Visually Handicapped
Saratha St., Nochchimunai - Batticaloa 94 65 205 0707

Elim Boys Child Development Center
Memorial Lane, Manipay - Jaffna 94 77 742 3824

Elim Girls Child Development Center
Memorial Lane, Manipay - Jaffna 94 77 406 9962

Forth Sq Girls Child Development Center
No 35, Sellar Rd, Nallur - Jaffna 94 77 064 1109

Hindu Board Boys Child Development Center
Kalasalai Rd, Thirunelveli - Jaffna 94 77 990 5304

Hindu Board Girls Child Development Center
Kalasalai Rd, Thirunelveli - Jaffna 94 77 699 2082

Holy Family Girls Child Development Center
Mirusuvil South, Mirusuvil - Jaffna 94 77 908 1270

Karunai Girls Child Development Center
Palaly Rd, Urumpirai, East - Jaffna 94 77 255 4334

Karunalayam Annai Krishnabai Girls C. D. C.
No 131, Palaly Rd, Thirunelveli - Jaffna 94 77 905 4873

Karunalayam Boys Children Development Center
Karanthan, Neerveli - Jaffna 94 77 416 1002

Salvation Army Girls Child Development Center
Kandy Rd, Kaithady - Jaffna 94 77 976 5696

SOS Village Child Development Center
No 219, Nayanmarkaddu, Nallur - Jaffna 94 77 373 3711

Sri Pramanatha Girls Child Development Center
Vathiri, Karaveddy, Jaffna - Jaffna 94 76 578 3004

Thurkkapuram Girl Child Development Center
Thurkkapuram, Tellippalai - Jaffna 94 21 224 9894

Valluvar Girlsí Child Development Center
Vaddukoddai East, Vaddukoddai - Jaffna 94 77 525 9513

Mother Teresa Elder Home Amithi Illam
Kondavil - Jaffna 94 21 223 0302

Sivapoomi Elders Home
Tholpuram. Chulipuram - Jaffna 94 21 225 0085, 94 21 321 4230

Sivapoomi School ForChildren with Special Needs
Intellectuals Disability - Jaffna Kondavil - Jaffna 94 21 224 9894

Vaalvagham-Home for the Vissually Handicapped
Sabapathipillai Rd, Chunnakam-Jaffna 94 21 224 0146 , 94 76 828 6331

Aruvucholai Boys Child Development Center
Thiruvaiaru West, Thiruvaiaru - Kilinochchi 94 21 228 3313

Aropanam Boys Child Development Center
Uruththirapuram - Kilinochchi 94 21 228 5088

Gandhi Nilaya Chidren Home & Training Centre - Kilinochchi
D-8,Uruthirapuram 94 21 228 4310, 94 77 208 1947, 94 77 720 1461

Holy Family Girls Child Development Center
D-8,Uruthirapuram - Kilinochchi 94 76 685 3115

Karuna Nilayam Girls Child Development Center
A9 Rd, Kandy Rd - Kilinochchi 94 21 228 5836

Mahadeva Saiva Boy Child Development Center
Puthumurippu - Kilinochchi 94 21 492 3121

Mahadeva Saiva Girls Child Development Center (11-18 Yrs)
Jeyanthinagar - Kilinochchi 94 21 492 3119

Mahadeva Saiva Girls Child Development Center (6-10 Yrs)
Jeyanthinagar - Kilinochchi 94 21 492 3118

Sencholai Boysí Child Development Center
Thiruvaiaru, Kilinochchi 94 76 536 8308

Sencholai Girlí Child Development Center
Thiruvaiaru - Kilinochchi 94 71 535 4504

Thangamma Elders Home -Kilinochchi
Puthukkulam, Kanagarayankulam 024 4931455, 077 449 9619

Trist Children Home
Ramanathapuram - Kilinochchi 94 21 206 0694

Yogar Swamigal Thiruvadi Nilaiyam Home
Vannerikulam - Kilinochchi 94 76 709 9162

Association. to Empowerthe Special Needs Children
Emersion Rd , Karadipokku 94 77 509 4390, 94 77 375 3776

Killinochchi Special Needs Newtwork
Malayapuram, Karachi - Kilinochchi 94 77 831 7536

Annai Girlsí Child Development Center
Uppukulam - Mannar 94 23 222 2483

Anpu Sakotharar Boys Child Development Center
Keeri - Mannar 94 77 534 4427

Sepamalai Mariyannai Irakathin Girlsí Child Development Center
Pesalai - Mannar 94 23 205 0095

Sivanarul Boys Child Development Center
Thiruketheeswaram - Mannar 94 23 205 0805, 94 77 581 5998

Sivanarul Girls Children Development Center
Thiruketheeswaram - Mannar 94 23 2050 804

Vetijin Nalnampikai Illam Good Faith Home of Victory
No 43, Convent Rd, Pattah - Mannar 94 23 2222 545

Saradha Mission Child Development Center
Kirigalpotta - Matale 94 66 205 1721

St. Francis Child Development Center
Vihaara Rd - Matale 94 77 438 4851

Anpu Boysí Child Development Center
Muthu Vinayagar Puram, Oddusuddan 94 71 535 4502

Barathy GirlChild Development Center
Putharikuda, Mulliyavalai - Mullaitivu 94 77 201 5234

Ladani Girls Child Development Center
Silawaththai - Mullaitivu 94 77 422 8853

Nallayan Girls Child Development Center
Jaffna Rd, Mankulam - Mullaitivu 94 21 206 1034

Pari Girlsí Child Development Center
Mulliyavalai - Mullaitivu 94 21 206 1034

Iniya Vazhvu Illam
A Division , Thevipuram - Mullaitivu 94 21 206 1949

Happy Home Child Development Center
Wanigasekarapura, Kotagala - Nuwara Eliya 94 51 224 4174

Maranatha Child Development Center
Hatton - Nuwara Eliya 94 51 222 2489

Rainbow Child Development Center
Drayton Estate, Kotagala - Nuwara Eliya 94 77 532 1680

Shalom Child Development Center
Lackam Estate, Maskeliya - Nuwara Eliya 94 52 227 7222

Annai Saratha Children Home
Mallihaitheevu, Muthur - Trincomalee 94 26 205 4506

Anpu Illam
167, Central Rd - Trincomalee 94 26 222 1214

Four Square
707 Anpuvalipuram - Trincomalee 94 26 222 7170

Grace Girls
3rd Mile Post, Cholaiyadi, Uppuveli - Trincomalee 94 26 722 3644

Hasanath Boys
Kurinchakerny, Kinniya - Trincomalee 94 26 223 6135

Hasanath Girls
Kurinchakerny, Kinniya - Trincomalee 94 26 223 6135

My Fatherís House Boys Children Homes
46, Kandasamy Rd - Trincomalee 94 26 222 6861

Rawlathul Athfal
PMB Rice Mill, Muthur - Trincomalee 94 77 934 7438

Rewathe Child Development Center
5th Post, Kandy Rd - Trincomalee 94 26 224 2328

Sivayogasamayam Swami Gangadaranatha Children Home
64 Main St. - Trincomalee 94 26 222 2049

Sri Sanmuga Boys 294 inner Harbor Rd - Trincomalee 94 26 567 0234

Sri Sanmuga Girls 57, Viddyalaya Rd - Trincomalee 94 26 222 2521

Thapovanam Boys
Thirukadaloor - Trincomalee 94 26 222 1469

Thapovanam Girls Thirukadaloor - Trincomalee 94 26 222 1469

Deva Anpu Children Home
Thiththikulam, Murunkanoor - Vavuniya 94 24 4921 859

Hindu Anpakam Children Home
Mannar Rd, Veppankulam - Vavuniya 94 24 222 3683

Salvatorian Girls Home
Iluppaikulam, Neriyakulam, Cheddikulam - Vavuniya 94 24 324 4577

Sri Ahilandeswary Children Home Kovilkulam - Vavuniya 94 24 222 1685

Mother Teresa Elder Home Pampaimadu -Vavuniya 94 24 205 4494

Sivan Elders Home
Ellappar Marutham Kulam - Vavuniya 94 24 222 1685, 94 77 656 7827

Thanagamma Eleders
No. 1 Puthukulam Rd, Puthukula - Vavuniya 94 76 248 2766

சிவபூமி சிங்கள பூமியாகுமாஉ


ஈழத்தில் உள்ள பஞ்ச ஈச்சரங்களையும் புனித பிரதேசங்களாக அறிவிக்க வேண்டும் என்ற தீர்மானம் ஒன்றை வடக்கு மாகாண சபை நிறைவேற்றியுள்ளது. மிகவும் காலம் தாழ்த்தி நிறைவேற்றப்பட்டபோதும், இந்த தீர்மானம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. பஞ்ச ஈச்சரங்கள் மாத்திரமின்றி ஈழத்தின் வடக்கு கிழக்கில் உள்ள பல்வேறு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆலயங்கள் பலவற்றையும் புனித பிரதேசங்களாக பாதுகாக்க வேண்டிய ஒரு நெருக்கடியான காலம் ஏற்பட்டுள்ளது.

ஈழத் தமிழ் மக்களைப்போலவே, அவர்களின் கடவுகள்



களும் இன அழிப்புக்கும் இடப்பெயர்வுக்கும் நில இழப்புக்கும் முகம் கொடுத்து வருகின்றனர். ஈழத்தின் சைவ ஆலயங்கள் சுதந்திரத்திற்கு பிந்தைய காலம் முதல் பிற மத ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி வரும் நிலையில் 2009 இற்குப் பின்னர் இப் போக்கு தீவிரமடைந்துள்ளது. ஈழத் தமிழர்கள் உரிமைக்கான போரில் ஈடுபட்டுக் கொண்டிருக்க, அவர்களின் மொழி, பண்பாடு, சமயத்தை அழிக்கும் முயற்சிகளை ஆக்கிரமிப்பு நோக்கம் கொண்டவர்கள் கடுமையாக நிறைவேற்றி வருகிறார்கள்.

அண்மையில் முகப்புத்தகத்தில் குளோபல் தமிழில் வெளி



யான நேர்காணல் ஒன்றில் ஈழம் என அழைக்கப்பட்டதை குறித்து ஒருவரால் கிண்ணடலாக பதிவொன்று போடப் பட்டிருந்தது. ஈழம் எங்கிருக்கிறது என்று நண்பர் ஒருவர் கிண்டல் செய்திருந்தார். இலங்கை அரசின் தேசிய கீதத்தின் தமிழ் மொழிபெயர்ப்பில் இருக்கிறது ஈழம் என்ற சொல். இலங்கை அரசால் வெளியிடப்படும் பாடப் புத்தகங்களில் ஈழம், ஈழத்து சிவாலயங்கள், ஈழத் தமிழ் இலக்கிய வரலாறு என்றெல்லாம் இருக்கிறது. ஆனால் சிலருக்கு ஈழம் என்றால் எங்கிருக்கிறது என்று தெரியாத ஒரு குறை பாடு ஒன்று ஏற்பட்டுள்ளது.

என்ன செய்வது? எதில் நக்கல் செய்து பொழுதை கழிப்பதென தெரியாதவொரு அற்பமான நோய். தமிழீழத்தை ஏற்பதும் ஏற்காமல் இருப்பதும் அவரவர் விருப்பம். ஆனால் 'ஈழம்' என இலங்கைத் தீவு காலம் காலமாக அழைக்கப்படுவது வரலாறு. இதை திட்டமிட்டு மறைத்துக் கேலி செய்வதை வெறும் நோயெனவும் கடக்க இயலாது. ஒரு புறத்தில் பௌத்த பேரினவாதிகள் ஈழத்தின் அடையாளங்களை அழிக்கும் முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். மறுபறுத்தில் சிலர் ஈழத்தின் சுதேச பண்பாட்டு அடையாளங்களை மறைத்தழித்து வருவதன் மூலம் பேரினவாதிகளுக்கு ஒத்தாசை செய்கின்றனர்.

ஈழத்தை சிவபூமி என்றார் திருமூலர். அந்தளவுக்கு சிவாலயங்கள் நிறைந்த தீவாக ஈழம் காணப்பட்டிருக்கிறது. ஈழத்தின் நான்கு திசைகளிலும் மையத்திலும் சிவாலயங்கள் உண்டு. இந்த சிவாலயங்கள் ஈழத்தில் பல ஆயிரம் வருடங்களாக இருந்து வருகின்றன. கி.பி ஐந்தாம் நூற்றாண்டில் திருமூலர் வாழ்ந்தவர் என்றும் அதற்கு பல ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்த சித்தர் அவர் என்றும் சொல்லப்படுகின்றது. அவர்தான் ஈழத்தை சிவபூமி என்றார். ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரர், மற்றும் சம்பந்தர் தமது பதிகங்களில் ஈழத்தின் ஈச்சரங்களான திருகோணேச்சரம் மற்றும் திருக்கேதீச்சரம்மீது பதிகங்களைப் பாடியுள்ளனர்.

ஈழத் தமிழ் மக்கள் இந்த தீவின் பூர்வீக குடிகள் என்பதற்கு பஞ்ச ஈச்சரங்களே சாட்சிகளாக உள்ளன. இந்த ஈச்சரங்களை சிங்கள பௌத்த மயமாக்கும் முயற்சிகள் தொடர்ந்து தீவிரப்படுத்தப்புடுகின்றன. தெற்கில் மாத்தறையில் இருந்த, தென்னாவரம் எனப்படும் தொண்டீச்சரம் இன்று முற்றாக அழிந்துபோயுள்ளது. (மாத்தறை மாதுறை என அக்காலத்தில் அழைக்கப்பட்டுள்ளது.) அங்கிருந்த சிவலிங்கம் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

தென்னாவரம் தொண்டீஸ்வரம் திருக்கோயில் தெற்கு முனையின் மாத்தறை கடலோரத்தில் அமைந்திருந்தது. இத் திருக்கோயில் 'தேவன்துறை கோயில்', 'நாக ரீச நிலாக் கோயில்' (இக்கோயிலில் உறையும் சிவபெருமான் தமது சிரசில் பிறை நிலவைச் சூடியிருப்பதனால், அவர் 'சந்திர மௌலீஸ்வரர்' என்னும் திருப்பெயரைக் கொண்டிருக்கின்றார். அதனாலேயே இப்பெயர்) என்றும் அழைக்கப் பட்டிருக்கிறது. இதைப்போலவே கொழும்பு இரத்மலானையில் உள்ள நந்தீஸ்வரம் ஆலயமும் போர்த்துக் கீசரால் அழித்து நிர்மூலமாக்கப்பட்டது. அது ஈழத்தின் ஈச்சரங்களில் ஒன்று என்ற வரலாறே இன்று மறைக் கப்பட்டு விட்டது.

அந்நியர்களால் அழிக்கப்பட்ட இந்த ஆலயங்களின் வரலாற்றை ஒரு கதையாக பேசுவதைப் போல எதிர்காலத்தில் ஈழத்தின் எந்த ஈச்சரங்களுக்கும் நிகழ்ந்துவிடக் கூடாது. எனினும் இப்போது, எஞ்சிய ஈச்சரங்களை நோக்கி சிங்கள பௌத்த மயப்படுத்தும் முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. முன்னேச்சரம் ஆலயம்மீது பௌத்த பிக்குகளின் கடுமையான தலையீடுகள் காணப்படுகின்றன. அந்த ஆலயத்தின் வழக்காறுகளை முன்னெடுப்பதில் பல்வேறு சிக்கல்களை அவர்கள் ஏற்படுத்துகின்றனர்.

ஈழத் தலைநரான திருகோணமலையில் அமைந் திருக்கும் திருகோணேச்சரம் ஆலயத்தின் வாசலில் விகாரையும் புத்தர் சிலையும் வைக்கப்பட்டுள்ளன. திருகோணமலையின் பல்வேறு பகுதிகளிலும் புத்தர் சிலைகள் குடியேற்றப்பட்டுள்ளன. கந்தலாய் என்ற தமிழர் பூர்வீக நிலமும் இன்று சிங்கள பௌத்தமயமாகிவிட்டது. அத்துடன் மன்னாரில் கேதீச்சர ஆலய சூழலிலும் விகாரைகள் புத்தர் சிலைகளை திணித்து ஆக்கிரமிக்கும் முயற்சிகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. இங்கு ஆலயத்திற்குரிய பல ஏக்கர் காணிகளை அபகரிக்கப் பட்டுள்ளது.

நகுலேச்சரம்..

இதைப்போலவே, யாழ்ப்பாணத்தில் நகுலேச்சரம்



ஆலயம் அமைந்துள்ள பகுதி, நெடுங்காலமாக இலங்கை இராணுவத்தின் உயர்பாதுகாப்பு வலயமாக காணப் பட்டது. அந்தப் பகுதிகளிலும் புத்தர்சிலைகள் வைக்கப்பட்



டுள்ளன. ஈழத்தின் தொன்மை மிகுந்த, வரலாற்று முக்கியத்துவம் கொண்ட ஆலயங்கள் அமைந்துள்ள பகுதிகளில் பௌத்த சிங்களமயமாக்கல் முயற்சிகள் ஒரு போர் நடவடிக்கையாகவே முன்னெடுக்கப்படுகின்றன. மிகவும் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் இந்த முயற்சி சிவபூமியை சிங்கள பூமியாக்கும் ஒரு சூழ்ச்சிகரமான நடவடிக்கையே.

குருந்தூர்

அண்மைய காலத்தில் முல்லைத்தீவில் குருந்தூர் மலை மற்றும் வெடுக்குநாறி மலையை ஆக்கிரமிக்க பௌத்த



பேரினவாதிகள் கங்கனம் காட்டியுள்ளனர். எனினும் முல்லைத்தீவு இளைஞர்கள் இந்த விடயத்தில் தொடர்ந்து விழிப்பாய் இருப்பதுடன் அவர்களை விரட்டியடித்து மண்ணின் அடையாளம் காக்கும் நடடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறான சூழலிலேயே ஈழத் தமிழ் மக்களின் சைவ ஆலயங்கள் புனித பிரதேசமாக அறிவிக்கப்பட்டு, அவைகள் பாதுகாக்கப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

அதன் முதல் கட்டமாக ஈழத்தின் பஞ்ச ஈச்சரங்களை புனிதப் பிரதேசமாக அறிவிக்கப்படவேண்டும். அத்துடன் அப் புனித பிரதேங்களில் பிற மத அடையாள திணிப்புக்களை முன்னெடுப்பதை தடை செய்ய வேண்டும். தலதா மாளிகளையில் ஒரு சைவ ஆலயம் ஒன்றையோ, சைவ கடவுளின் சிலை ஒன்றையோ நிறுவ இயலுமா? ஆனால் சைவ ஆலயங்களில் புத்தர் சிலைகளை சொருகுவது என்பது மிகவும் இயல்பாக இடம்பெறுகின்றது. இராணுவ அதிகாரம் கொண்டும், அரச அதிகாரம்

சிவ பூமி சிங்கள பூமியாகுமா?

கொண்டும் பேரினவாத அதிகாரம் கொண்டும் இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வடக்கில் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் பலவற்றை அடையாளம் கண்டுள்ளதாகவும் அவற்றை அரசிதழ் ஊடாக அறிவித்துள்ளதாகவும் அரசாங்கம் குறிப்பிடுகின்றது. இராணுவத்தினர் பல்வேறு இடங்களில் புத்தர் சிலைகளை வைத்து, விகாரைகளை கட்டி எழுப் பியுள்ள நிலையில் எஞ்சிய நிலத்தில் நல்லாட்சி அர சாங்கம் ஆக்கிரமிப்பு அடையாளங்களை நிறுவ முயற் சிகளை மேற்கொள்ளுகின்றதா? வடக்கில் பல இடங்களில் பாரிய விகாரைகளை கட்டி பௌத்தமயப்படுத்த நல்லாட்சி அரசு திட்டங்களை வகுத்துள்ளதாக சொல்லப்படுகின்றது.

வெடுக்குநாறி மலை

தமிழ் மக்களின் அடையாளங்களை அழிக்கவும், அவர் களின் உரிமையை மறுக்கவும்,




அவர்களின் நிலத்தை ஆக்கிரமிக்கவும் புத்தரையும் ஒரு ஆயுதமாக சிங்கள தேசம் கையாள்கிறது. இதற்கான பாரிய முயற்சிகளில் நல்லாட்சி அரசு என சொல்லிக் கொள்ளும் இன்றைய அரசும் முயல்கிறது. இந்த அநீதிகள் யாவற்றுக்குமாக தமிழர்கள் ஆயுதம் ஏந்திப் போராடிய நிலையில் தற்போது மீண்டும் அந்த வேலைகளை தமிழ் மண்ணில் அரசாங்கம் மேற்கொள்ளுவது தமிழர்களை மீண்டும் ஆயுதம் ஏந்த வைக்கும் செயல்.

தமிழ் மக்கள் மதவாதிகளல்ல. அவர்கள் அனைத்து மதங் களையும் மதிப்பவர்கள். சக மதங்களை மதிக்கும் பின் பற்றும் போக்கு கொண்டவர்கள். பௌத்தத்தைக்கூட முன் னைய காலத்தில் பின்பற்றியவர்கள். ஆனால் தமிழ் இனத்தை அழிக்கும் நோக்குடன் சைவ ஆலயங் களையும் வைசத்தையும் அழிக்க முற்படும் முயற்சிகள் நடப்பதால் தமிழ் மக்களால் தமது வழிபாட்டு மற்றும் பண்பாட்டு முறைகளையும் ஆயுதங்களாக கையாள வேண்டிய அவசியம் ஏற்படடுள்ளது.

எதற்காக இராணுவத்தினர் நிலை நிறுத்தப்பட்டுள் ளனரோ, எதற்காக சிங்களக் குடியேற்றங்கள் இடம் பெறுகின்றனவோ, அதற்காகவே சைவ ஆலயங்கள் மற்றும் தமிழர் சூழலில் பௌத்த அடையாளங் களை திணிக் கப் படுகின் றன. ஈழக் கனவை சிதைத்துவிடுவதும் தமிழர்களை இத் தீவில் ஒடுக்கி அழித்து விடுவதுமே இதன் இலக்கு. எந்தக் காரணங்களுக்காக தமிழர்கள் ஆயுதம் ஏந்தினார்களோ, அந்த ஆக்கிரமிப்புக் காரணங் களே, இனத்தை ஒழிக்கும் நடவடிக்கைகளைகளாகவும் இனப்பிரச்சினையை தீர்த்துக் கட்டும் ஆயுதங்களாகவும் வழியாகவும் இலங்கை அரசால் பயன்படுத்துகிறது .

நன்றி: தீபச்செல்வன் - ஒக்டோபர் 8, 2018



சங்கத்தமிழ்

ஓவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை

உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203



உங்கள் இராசிக்கேற்றபடி
அதிஸ்டக் கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் செய்து தரப்படும்

லஷ்சுமி பொற்சாலை
Inside of Majestic City Plaza
அழையுங்கள்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6

தமிழர்களை ஏற்று சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்காத வரை இந்த தேசத்தை அறம் நின்று கொல்லும்

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ். சிவகரன்

ஏப்பிரல் 20, 2022

சிங்களவர்கள் தமிழர்களை எதிரிகளாகவும், விரோதிக ளாகவும் நோக்கியதாலேயே தமிழர்கள் சிங்கள தேசத்தை அயல்நாடாக உணர்ந்தனர். உண்மையும், நீதியும், சத்தி யமும் அறவுணர்வும் தமிழர்களின் கோரிக்கையில் இருந்த போதும் சிங்கள தேசம் அதை முழுமையாக புறக் கணித்தது என தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்துள்ளார்.

காலி முகத்திடல் போராட்டம் குறித்து தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கம் இன்று புதன்கிழமை(20) விடுத் துள்ள திறந்த மடலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த மடலில் மேலும் குறிப்பிடுகையில்,
தங்களின் ஜனநாயகப் போராட்டம் கடந்த பத்து நாட் களுக்கு மேலாக தன்னெழுச்சியாக நடப்பதை யிட்டு நாமும் மகிழ்ச்சியடைகிறோம். ஏனெனில் ஜனநாயகப் போராட்டம், ஆயுதப் போராட்டம் என கடந்த 70 ஆண்டு களாக எதிர்கொண்டவர்கள் என்ற வகையில் நீங்கள் நடாத்துவது வாழ்தலுக்கான போராட்டம்.

நாம் நடத்தியது வாழ்வுரிமை இருப்பிற்கான போராட்டம் இரண்டிற்கும் இடையில் பாரிய வேறுபாடு உண்டு.

தமிழ் மக்கள் கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலாக பல்வேறு விதமான அடக்குமுறைக்குள் சிக்கித் தவிக்கிறார்கள். இனக் கலவரங்களான 1956, 1958, 1977,1983 நான்கு கட்ட ஈழப்போர் என வார்த்தையில் வர்ணிக்க முடியாத துயரத்தை எதிர்கொண்டோம்.

சமத்துவமான வாழ்வியல் உரிமை மறுக்கப்பட்டதன் விளைவே வன்முறையாக தோற்றம் பெற்றுள்ளது.

சிங்களவர்கள் தமிழர்களை எதிரிகளாகவும், விரோதிக ளாகவும் நோக்கியதாலே தமிழர்கள் சிங்கள தேசத்தை அயல்நாடாக உணர்ந்தனர். உண்மையும், நீதியும், சத்தியமும் அறவுணர்வும் தமிழர்களின் கோரிக்கையில் இருந்த போதும் சிங்கள தேசம் அதை முழுமையாக புறக்கணித்தது.

அடிமையாக இரண்டாந்தர மனிதர்களாக நடத்தியதன் விளைவே ஆதிக்க எதிர்ப்பின் குறியீடாகவே தலைவர் பிரபாகரன் தோற்றம் பெற்று யுத்தம் உருவெடுத்தது அழ கிய தேசம் உருகுலைந்து, பொருளாதரமின்மையிலும் சிக்குண்டு சின்னாபின்னமாக சிதைவுற்று இனவாதிகளே, இனவாதிகளை அகற்றும். ஜனநாயக யுத்தத்தில் ஈடு படுகிறீர்கள்.

ஆனால் நாம் மகிழ்ச்சியடையவில்லை. நிலப்பறிப்பு குடிப் பரம்பல் மாற்றம் மொழிச்சிதைப்பு, பண்பாட்டுச்சிதைப்பு, பொருளாதார அழிப்பு உயிரிழப்பு தனிச்சிங்கள சட்டம் இது மட்டுமா? பண்டா செல்வா ஒப்பந்தம், டட்லி செல்வா ஒப்பந்தம், சந்திரிக்கா பிரபாகரன் ஒப்பந்தம், ரணில் பிரபாகரன் ஒப்பந்தம் என பலவற்றால் ஏமாற்றப் பட்டுள் ளோம் “இறப்பர் மரத்திற்கு ரணங்கள் புதிதல்ல” என்பதே தமிழர்கள் மனோநிலை.

ஆகவே இந்த ஜனநாயகப் போராட்டத்தை நடாத்துவது யார்? உங்கள் அடிப்படைக் கொள்கை என்ன? 225 பேரும் வேண்டாம் என்றால் நீங்கள் கோரும் இடைக்கால அரசை நடத்துவது யார்? ஆட்சி மாற்றத்தாலோ அல்லது ஜனாதிபதி மாற்றத்தாலோ தற்போதைய பிரச்சினை தீர்ந்து விடுமா? உங்களிடம் என்ன திட்டம் இருக்கிறது? உங் களை பின்னுக்கு இருந்து இயக்குவது யார்? அரச சார்பற்ற நிறுவனங்களா? அல்லது பன்னாட்டு தூதரகங்களா? அல் லது சிங்கள பெருவர்த்தகர்களா? இதுவரை இந்தப் போராட்டத்தின் தலைமை யாரென வெளிப்படையாக உணர முடியவில்லை “புரட்சி என்பது மாலை நேரத்து விருந்தல்ல” என்றார் மாவோ.

ஆகவே இந்தப் போராட்டத்தில் தமிழர்கள் கலந்து கொள்ள வேண்டும் என்று சிங்கள கலைஞர்கள் அழைத்துள் ளனர். நல்லது வரவேற்கின்றோம். ஆனால் நாம் ஏன் வரவேண்டும்? எதற்காக வரவேண்டும்? உங்கள் போராட்டத்திற்கும், எமக்கும் என்ன சம்பந்தம் உண்டு. இதற்கு வருவதால் தமிழர்களுக்கு என்ன நன்மை பயக் கும்?.. போராட்ட இடத்தில் தமிழில் தேசிய கீதத்தை பாடவே முடியவில்லை இனி இழப்பதற்கு ஏதுமற்ற ஏதிலியாய் உள்ள நாம் கடந்த 70 ஆண்டுகளுக்கு மேல் அனுபவித்தவற்றில் சில விடயங்களை நீங்கள் இப்போது எதிர்கொள்கிறீர்கள்.

முதல் முறையாக எதிர்கொள்வது என்பது கடினம்தான். அதை நாமும் உணர்ந்து கொள்கிறோம். எம்மை தமிழ னாக அல்ல மனிதனாக கூட நீங்கள் நினைக்க வில்லையே! மனிதாபிமானத்திற்கு கூட பயங்கரவாத முத்திரை பதித்து பொருளாதார தடை விதித்து எம்மை நசுக்குவதில் கூட்டாக இன்பம் நுகர்ந்தவர்கள் நீங்கள்.

எமது நிலமையை புரிந்து கொண்ட ஒரு சில சிங்கள முற்போக்காளர்களும் உள்ளனர் என்பதையும் நாம் புரிந்து கொள்கின்றோம்.

குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள் என எந்த விதமான பாகுபாடும் இன்றி கொலை, கைது, கடத்தல், என வகை தொகையின்றி உங்கள் வஞ்சத்தை தீர்த்துக் கட்டி னீர்களே! 2009 இறுதி யுத்தத்தில் 146,679 பேரை இனப் படுகொலை செய்தீர்களே! உணவு, மருந்து உறைவிடம் இல்லாமல் கொத்துக் குண்டுகளும், பொஸ்பரஸ் குண்டு களும் வீசி எம்மை அழித்தீர்களே! பல ஆயிரம் பேரை காணாமல் போகச் செய்தீர்களே உங்களிடம் ஒப்படைக் கப்பட்டவர்களை இன்றுவரை காணவில்லையே...!

ஒரு இனத்தை அழித்துவிட்டு அவர்கள் தெருவில் நின்று ஓலமிடும் போது நீங்கள் பட்டாசு கொளுத்தி பால்சோறு உண்டு மகிழ்ந்தீர்களே! இது தானா பௌத்தத்தின் பஞ் சசீல தம்பதக் கோட்பாடு “ஊழிற் பெருவலி யாவுழ மற் றொன்று சூழினும் தான் முந்துறும்” என்றான் வள் ளுவன். இப்போது அறம் உங்களை விரட்டுகிறது.

கல்வி அறிவுடைய முற்போக்கு சிங்களவர்கள் கூட தமிழர் களின் உணர்வுகளை புரிந்து கொள்ளவில்லை. பௌத்த மகா சங்கங்கள் கல்வியியலாளர்கள் கூட வகுப்புவாத இன வாதத்தையே முன்னிலை படுத்துகிறீர்கள். சமஸ்டியை தமிழீழம் என்று சாதாரண சிங்கள மக்களுக்கு இன வாதத்தை ஊட்டுகிறீர்கள்.

சிங்கள இனவாத ஊடகங்களும், அரசியல் வாதிகளும் சொல்வதையே தாரக மந்திரமாக ஏற்றுக் கொள்கிறீர்கள். யுத்தம் முடிவடைந்து பதின்மூன்று ஆண்டுகள் ஆகி விட்டன. இதுவரை எத்தனை சனநாயகப் போராட்டங்கள் நடத்தி விட்டோம். அவையெல்லாம் உங்கள் கண்ணுக்கு தெரியவில்லையா? அல்லது எமது கோரிக்கைதான் நியாயமில்லையா? இருபது ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் வாடும் தமிழர்களை ஒரு கனம் நினைத்துப் பார்த்தீர்களா? தமிழரின் பூர்வீக மரபுவழி தாயக நிலத்தை அபகரித்து புதிய வரலாறு உருவாக்குவது எல்லாம் உங்கள் பார்வையில் சரிதானா?

பயங்கரவாத தடைச்சட்டம், அவசரகால தடைச்சட்டம்



இரண்டையும் வைத்து எவ்வளவு நசுக்குகிறீர்கள். நீங்கள் போராடினால் ஜனநாயக உரிமை அதற்கு பொலிசாரும், இராணுவத்தினரும், நீதிமன்றமும் எவ்வாறு நடந்து கொள்கிறது? நாங்கள் போராடினால் அது பயங்கரவாதம் ஒரு சிவில் செயற்பாட்டாளனாகிய நானே கடந்த பத்து ஆண்டுகளில் சிறை, பொலிஸ் நிலையம், நீதிமன்றம் 23 தடவைகள் பயங்கரவாத குற்றத்தடுப்பு விசாரணை இவ் வாறு என்னைப்போல் பலர் உண்டு.

இது எல்லாம் உங்களுக்கு புரியாது! இப்படி இருக்கையில் நாம் எப்படி இலங்கையராய் சிந்திக்க முடியும்? இலங் கையில் தமிழ் மக்களுக்கு பிரச்சனை உண்டு என்பதை ஆவது புரிந்து கொண்டீர்களா? குறைந்த பட்சம் மனித உரிமை மீறப்பட்டுள்ளது என்பதையாவது ஏற்றுக்கொள் வீர்களா? இனியாவது உணர மாட்டீர்களா?

எதுவும் இல்லாமல் வெறுமனே ஆட்சி மாற்றத்திற்கு குடும்ப ஆட்சியை அகற்றுவதற்கு எம்மோடு கை கொடுங் கள் என்பது எந்த வகையில் நீதியானது. யுத்த வெற்றி நாயகர்கள் என மகுடம் சூடி பௌத்த தேசியவாத மேட்டி மைத்தனத்துடன் ஏகோபித்து வாக்களிக்கும் போது உங் கள் பகுத்தறிவு எங்கே போனது?

தமிழ் மக்கள் இராஜபக்ச களுக்கு ஒரு போதும் வாக்களிக்க வில்லை (2005,2010,2015,2019 ஜனாதிபதி தேர் தலிலும்) 2009ல் தமிழினத்தை அழித்த போது உங் களை மெருகூட்டிய சிங்கக் கொடியுடனே இன்றும் நீங்கள் காலிமுகத்திடலில் நிற்கின்றீர்கள். எங்களுக்கு அதைப் பார்க்கவே அச்சமாக இருக்கிறது.

இந்த இலட்சணத்தில் நாம் எப்படி உங்களுடன் கை கோர்த்துக் கொள்வது.


தமிழர்களின் நீதி பூர்வமான வாழ்வியல் சுய இருப்பின் சமாந்தர சமத்துவ இருப்பை ஏற்றுணர்ந்து இந்த தேசத்தில் உரிமையுள்ள நீண்ட வரலாற்று பாரம்பரியம் உள்ள இனக்குழுமமாக தமிழர்களை ஏற்று சுயநிர்ணய உரி மையை அங்கீகரிக்காத வரை இந்த தேசத்தை அறம் நின்று கொல்லும் என்பதை நீங்கள் இப்போதே உணர் வீர்கள் என்பதே மறுக்க முடியாத உண்மை.என குறித்த மடலில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு தொடர்புகளுக்கு

437.345.4203

Call today to Save energy

Free Estimate!
Call today
$50 OFF
When you order more than $1000



Let us help with...

- Replacement (Door & Windows)
- Custom Door & Windows
- Front Door & Patio Door
- Garden Door
- Door & Windows Re-Caulking (Important)
- Painting Doors & Windows
- Basement Separate Entrance Door
- Home Painting
- Spotlights installation
- California Shutters

PTR DOORS & WINDOWS

-Over 10 years experience-

Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com



ஒரு விரல் விண்வெளி பிரம்மாண்ட முயற்சி

R.S தங்கப் பட்டறை

நவீன டிசைன்களில் நகைகள் செய்துகொள்ளவும்
உங்கள் பழைய நகைகளை மெருகூட்டவும்
எல்லவிதமான திருத்த வேலைகளையும் லேசர்
மூலம் செய்து கொள்ளவும்

குறித்த திகதியில் ஓடர்களை பெற்றுக்கொள்ளவும்
பிறந்த திகதி எண் ராசிக்கேற்ப பொருத்தமான
மாணிக்க கற்களை அவற்றின் இயற்கைத்
தன்மைக்கான சான்றிதழுடன் பெற்றுக்கொள்ளவும்

திருமணத்திற்கு பொன் உருக்குதல் காது குத்துதல்
பல விதமான டிசைன்களில் தாலி செய்து கொள்ளவும்



பழைய நகைகளை மாற்றி
இன்றய காலத்துக்கேற்ப
புதிய வடிவங்களில்
செய்துகொள்ளவும்

தொடர்புகளுக்கு: 416.292.9816 / 416.822.7171
S.மூர்த்தி
Majestic City (Markham & McNicoll)
2900 Markham Rd, Unit A16, Scarborough

அகரம்
Akaram

வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்

Graphic Design Consultant

தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சிணை வடிவமைப்பு (Logo Design)

இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள

அழையுங்கள் (Call):
437.345.4203

Nickon நிக்கொன்

Photo & Video
போட்டோ & வீடியோ

Digital Album
டிஜிட்டல் அல்பம்



உங்கள் குடும்ப மற்றும்
சமூக நிகழ்வுகளை நினைவில்
நிறுத்தி, நிழற்படமாக்கிட...





ஈழத்தமிழர் வரலாறு -07

கி.மு. 03 ஆம் நூற்றாண்டில் பௌத்த மதம் இலங்கையில் அறிமுகமாவதற்கு முன்னர் இந்து சமண, ஆஜிவிக சமயங்கள் இருந்ததற்கான சான்றுகள் காணப்படுகின்றன. இவற்றுள் இந்து மதம் செல்வாக்குடைய மதமாகத் திகழ்ந்தது. இம்மத்தின் தொடக்க காலமாக பெருங்கற்காலப் பண்பாடு விளங்குகின்றது இப்பண்பாட்டில் பின்பற்றப்பட்ட முக்கியபண்பாட்டு அம்சமான குளமும், ஈமைச்சின்னமுறையும் பிற்காலத்தில் ஆலயத்திற்கும் தீர்த்தக் கேணிக்கும் இடையிலான தொடர்புக்கு அத்திவாரமாக அமைந்த தென்பது தொல்லியலாளரின் கருத்தாகும். இப்பண் பாட்டில் தாய்த்தெய்வ வழிபாடு, முருக வழிபாடு என்பன பின் பற்றப்பட்டதை கந்தரோடை, பூநகரி பொம்பரிப்பு போன்ற தொல் லியல் மையங்களில் கிடைத்த சின்னங்கள் உறுதிப்படுத்து கின்றன. இவ்வழிபாட்டு மரபு பௌத்த மதத்தின் வருகையைத் தொடர்ந்து பௌத்த மதத்துடன் இணைந்தும், தனித்தும் வளர்ச்சியடைந்தன. எனினும் பௌத்தமதத்தின் அறிமுகம் இலங்கையின் பண்பாட்டு வரலாற்றில் ஒரு பரிகோடாக அமைந்ததென்பதில் சந்தேகமில்லை. இம்மதமும், இம்மத்திற் குரிய மொழியும் இங்கிருந்த திராவிட மக்களிடையே இனம், மொழி என்ற வேறுபாடு கொண்ட இரு பண்பாட்டு தோன்றி வளரக் காரணமாயின. அவற்றையே வரலாற்றுக் காலத்தில் இருந்து தமிழ் சிங்களப் பண்பாடு என வரலாற்றாசிரியர்கள் வரையறை செய்துள்ளனர். இன்று சிங்களமக்களின் பெரும் பான்மையோர் பௌத்தர்களாகவும், தமிழர்களில் பெரும்பான் மையோர் இந்துக்களாகவும் உள்ளனர். ஆனால் இந்நிலை இலங்கையில் பௌத்த மதம் தோன்றி வளர்ந்த காலத்தில் இருந்ததாகக் கூறுவதற்கில்லை. பௌத்த சிங்கள வரலாற்றை முதன்மைப்படுத்தும் பாளி, சிங்கள இலங்கியங்கள் கூட சிங்கள மன்னர்கள் அனைவரையும் பௌத்த மதத்திற்கு தொண்டாற் றியவர்கள் எனக் கூறவில்லை. அதேபோல் தமிழ் மன்னர்கள் இந்து மதத்தவர்கள் என்வும் கூறவில்லை. மாறாகத் தமிழர்கள் பௌத்தர்களாகவும், சிங்களவர்கள் இந்துக்களாகவும் இருந்தது பற்றிக் கூறுகின்றன. இதற்கு முக்கிய காரணம் பௌத்த மதத்திற்கு முந்திய இலங்கைப் பண்பாடு தென்னிந்தியத் தொடர்பு கொண்டு வளர்ந்தது போல் பௌத்த மதமும் தென்னிந்திய, சிறப்பாக ஆந்திர தமிழ்நாட்டு மாநிலங்கள் ஊடாகப் பரப்பப்பட்டதே காரணமாகும். இதனால் இலங்கையில் தமிழ் பௌத்தமும் தோன்றி வளர்ந்தது.

வட இந்தியாவிலுள்ள மௌரியத் தலைநகருடன் கொண்ட நேரடித் தொடர்பே இலங்கையில் பௌத்தமதம் பரவக் காரணம் எனமகாவம்சம் கூறுகின்றது. ஆனால் இம்மதம் நேரடியாக மௌரியத் தலைநகரில் இருந்து பரவியதென்பதை விட அசோகன் ஆட்சியில் தென்னிந்தியப் பிராந்தியங்களிலிருந்து பரவியதெனக் கூறுவதே பொருத்தமாகும். அசோகன் ஆட்சியில் சேர, சோழ, பாண்டிய அரசுகளைத் தவிர தெனனிந்தியப் பிராந்தியங்கள் மௌரியப் பேரரசின் ஆதிக்கத்திற்கு உட்பட்டி ருந்தது. இங்கெல்லாம் அசோகன் ஆட்சிக்கு முன்னரே பௌத்த மதக் கருத்துக்கள் பரவிவிட்டன. அத்துடன் அசோகனுக்குப் பின்னர் பௌத்த மதத்தை பேணிப் பாதுகாத்து பிறநாடுகளுக்கு பரப்பியபெருமை தென்னிந்திய சிறப்பாக ஆந்தர, தமிழ்நாட்டு அரசர்களுக்கு உரியன.

ஆந்திராவில் உள்ள அமராவதி, நாகர் சுணகொண்டா, பட்டிபுரோலு போன்ற இடங்களும் தமிழ்நாட்டில் உள்ள காஞ்சி, காவேரிப் பூம்பட்டினம், புத்தகாஞ்சி, மதுரை, திருநெல்வேலி போன்ற இடங்களும் முக்கிய பௌத்தமையங்களாகத் திகழ்ந் தன. இங்கு வாழ்ந்த பௌத்தகுருமார் இலங்கை சென்று பௌத்த மதத்தைப் பரப்பிய அதேவேளை இலங்கையைச் சேர்ந்த பௌத்த குருமார் பலர் இங்கு வந்து பௌத்த கல்வியைக் கற்றனர்.

அசோகன் ஆட்சிக்குப் பின்னர் பௌத்த மதம் பல பரிவுகளாகப் பிரிந்தது. இவற்றுள் தேரவாத பௌத்தமும், மகாயான பௌத் தமும் இலங்கையில் பக்கம் பக்கமாக வளர்சசியடைந்தன. இவை வளர்வதற்கு இலங்கை, தமிழ்நாட்டோடும், ஆந்திர வோடும் கொண்டிருந்த உறவே காரணமாகும். ஆந்திராவில் மகாயான பௌத்தத்தை வளர்த்தபெருமை அஸ்வகோசர், நாகர்சுனர் ஆகியோருக்கு உரியது. இவர்களுடன் இலங் கையைச் சேர்ந்த பௌத்ததுறவிகள் நெருக்கமான உறவை வைத்திருந்தனர்.

இவர்களுள் நாகர்சுனரின் மாணவரான ஆரியதேவர் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர். இவரைச் சந்தித்த நாகர்சுனர் எனக்குப் பின் என் அணையாவிளக்கைப் பெற்று அதைக் காக்கும் பொறுப்பை உன்னிடம் தருகின்றேன் எனக்கூறியதாக சீனயாத்திரிகரான யுவான்சுவாங் குறிப்பிட்டுள்ளார். நாகர் சுணகொண்டா என்ற இடத்தில் கிடைத்த கல்வெட்டு ஒன்று இங்குள்ள பௌத்தவிகாரையில் இலங்கை, தமிழ்நாடு, கலிங்கம் ஆகிய இடங்களில் இருந்து வந்த பௌத்த துறவிகள்



கல்வி கற்றதாகக் கூறுகின்றது. இங்கு கண்டெடுக்கப்பட்ட கி. பி. 03 ஆம் நூற்றாண்டுக்குரிய இன்னொரு கல்வெட்டு போதிஸ்ரீறி என்ற பெண் இலங்கைப் பௌத்தர்களுக்காக நாகர்சுண கொண்டாவில் விகாரை கட்டியதாகக் கூறுகிறது. இத்தொடர்பு நீண்ட காலத்திற்கு நீடித்ததை இலங்கையில் கண்டி என்ற இடத்தில் கிடைத்த கி.பி. 1344 ஆம் ஆண்டுக்குரிய கல்வெட்டு எறுதிப்படுத்துகின்றது. இக் கல்வெட்டு இலங்கை மன்னன் தர்மகீர்த்தி என்பவனால் அமராவதியில் பௌத்த சிலையகம் ஒன்று திருத்திக் கட்டப்பட்டது பற்றிக் கூறுகின்றது.

இலங்கையில் பௌத்த மதம் தோன்றிவளர ஆந்திரபிர தேசத்தைவிட தமிழ்நாடு ஆற்றிய பங்களிப்பு அரியது. தமிழ் நாட்டில் கி.பி. 06ஆம் நூற்றாண்டு வரை பௌத்தமதம் செல் வாக்குடன் திகழ்ந்தது. பல்லவர், பாண்டியர் ஆட்சியில் ஆழ்வார், நாயன்மர் தலைமையிற் பக்தி இயக்கம் தோன்றி வளர பௌத்தமதத்தின் செல்வாக்கிற்கான எதிர்ப்புணர்வே காரணம். ஆயினும் இவ்வம்சங்களின் ஆரம்பகால மன்னர் சிலர் பௌத்தர்களாகவே இருந்தனர். இதனால் தமிழ்நாட்டின் நீண்ட கால வரலாற்றில் தமிழ்ப் பௌத்தம் செல்வாக்குடன் திகழ்ந்தது. இவற்றை சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, நீலகேசி, தேவாரம், பெரிய புராணம், பாளி உரைநூல்கள், மேல் நாட்டார் குறிப்புகள் என்பன உறுதிப்படுத்துகின்றன. இதனால் தமிழ்நாட்டுடன் பாரம்பரிய உறவு கொண்டிருந்த இலங்கையிலும் தமிழ் பௌத்தம் செல்வாக்குப் பெற்றிருக்கும் என்பதில் சந்தேக மில்லை.

மகிந்தன் தலைமையில் அசோகன் அனுப்பிய தூதுக்குழு வட இந்தியாவில் இருந்து ஆகாயமார்க்கமாக இலங்கை வந்தடைந் ததாக மகாவம்சம் கூறுகிறது. இது மகாவம்சத்தின் கட்டுக்கதை என்பது வரலாற்றறிஞர்களின் கூற்றாகும். மகிந்தன் காவேரிப் பூம்பட்டினத்தில் தங்கியிருந்து ஏழு விகாரை கட்டியதாக வர லாற்று மரபுண்டு. மணிமேகலை, சிலப்பதிகாரம் ஆகிய நூல்களில் காவேரிப் பூம்பட்டினத்தில் இருந்த விகாரை பற்றிக் குறிப்புண்டு. அண்மையில் இங்கு நடத்திய அகழ்வாய்வில் காலத்தால் முந்திய விகாரையின் அழிபாடுகள் கண்டு பிடிக்கப்

பட்டுள்ளன. இது மகிந்தன் கட்டிய விகாரை என்பது தொல் லியளாரின் கருத்தாகும். இதனால் மகிந்தன் தலைமையிலான தூதுக்குழு தமிழ் நாட்டினூடாக இலங்கைக்கு பௌத்த மதத்தைப் பரப்பியிருக்க வேண்டும் என நம்பப்படுகிறது. இலங்கையில் பௌத்த மதம் அறிமுகமாகிய காலம் தொட்டு தமிழ்நாட்டுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததை தொல் பொருட் சன்றுகள் உறுதிப்படுத்துகின்றன. இலங்கையில் கண்டு பிடிக்கப்பட்ட ஆரம்ப கால பௌத்த துறவிகளது குகை களின் அமைப்பும், அதில் பொறிக்கப்பட்ட ஓரிரு வரி வடிவங்கள் கொண்ட சாசனங்களும் தமிழ்நாட்டு பௌத்த குகை அமைப் புக்களை அப்படியே ஒத்துள்ளன. இவ்வொற்றுமையை அசோகன் கால பௌத்த குகைகளில் காணமுடியாது. இலங்கை யில் அநுராதபுரம், பெரியபுளியங்கும், குடுவில் ஆகிய இடங் களில் கடைத்த கி.மு. 03 ஆம், 02ஆம் நூற்றாண்டுக்குரிய பிராமிக் கல்வெட்டுக்கள் தமிழ்நாட்டு வர்த்தகர்கள் இங்கு வாழ்ந்த பௌத்த துறவிகளுக்கு தானம் அளித்தாகக் கூறு கின்றன. அதேபோல் தமிழ்நாட்டுக்கு சென்ற இலங்கையை நேர்ந்த தமிழ் வர்த்தகர் அங்கு வாழ்ந்த பௌத்த துறவிகளுக்கு தானம் அளித்ததாக திருப்பரங்குன்றம், குடுமியாமலை கல்வெட்டுகள் கூறுகின்றன. மேலும் இலங்கையில் தமிழர் தொடர்பாக கிடைத்த கல்வெட்டுகள் பௌத்த துறவிகளுக்கு அளிக்கப்பட்ட தானங்கள் பற்றி விரிவாகக் கூறுகின்றன.

இலங்கையில் அரசியல் குழுக்குழப்பங்கள், உணவுப் பஞ்சங்கள் ஏற்படும் காலங்களில் எல்லாம் இங்கு வாழ்ந்த பௌத்த குருமார் தமிழ்நாடு சென்று அங்கு தங்கி விட்டு மீண்டும் இங்கு வந்ததாக மகாவம்சம் கூறுகின்றது. கி.பி. 02ஆம் நூற்றாண்டுக்குரியதாகக் கூறப்படும் மணிமேகலை யில் காவேரிப்பூம்பட்டினப் பௌத்தப் பள்ளியின் தலைவரான அறவண அடிகள் வட இலங்கையில் உள்ள நாகதீபத்திற்கும், மணிபல்லவத்திற்கும், தென்னிலங்கையில் உள்ள சிவனொளி பாத மலைக்கும் சென்று அங்கிருந்த பாதபீடிகையை தொழுத தாகக் கூறப்பட்டுள்ளது. மகாசேனன் ஆட்சியில் சோழநாடு தமிழ்பௌத்த பிக்குவான சங்கமித்திரர் இலங்கை வந்து மகாயான பௌத்த மத்தைப் பரப்பியதாகமகாவம்சம் கூறுகிறது. இவரின் ஆலோசனைப்படி மகாசேனமன்னன் தேரவாத பௌத்தத் தலைமைப்பீடமான மகாவிகாரையை இடித்து மகாயான பௌத்தத்தின் தலைமைப்பீடமான அபயகிரி விகாரையைக் கட்டினான். கி.பி. 05ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் இருந்து வந்த புத்தகோசர், தர்மபால, புத்தத்த, சுமதி, ஜோதிபாலா, போன்ற தமிழ்நாட்டுப் பிக்குகள் இலங்கையில் உள்ள விகாரைகளில் பல காலம் தங்கியிருந்து பௌத்த போதனைகளை நடத்தியதாக சூளவம்சம் கூறுகின்றது. இவர்களால் பாளி சிங்களமொழியில் எழுதப்பட்ட பௌத்த உரை நூல்களை இலங்கைப் பௌத்தர்கள் பெரிதும் போற்றினர். இக்காலப் பகுதியில் ஆறு தமிழர்கள் அநுராதபுரத்தில் ஆட்சி புரிந்ததாகச் சூளவம்சம் கூறுகிறது. இவர்களில் பரிண்ட, தாதிகன் ஆகியோரின் ஆட்சி தென்னிலங்கையில் பரவியதை அறகம, கதிர்காமம் ஆகிய இடங்களில் கிடைத்த கல்வெட் டுக்கள் உறுதி செய்கின்றன. அத்துடன் இக்கல் வெட்டுக்கள் இவர்கள் பௌத்த மதத்திற்கு ஆற்றிய பணிகள் பற்றியும் கூறுகினறது.

கி.பி. 06ஆம் நூற்றாண்டில் இருந்து தமிழ்நாட்டில் ஏற்பட்ட பக்தி இயக்கத்தினால் தமிழ்பௌத்தம் படிப்படியாக வீழ்ச்சியடையத் தெடாங்கியது. இதனால் தீவிர தமிழ்பௌத்தர் இலங்கையில் வந்து குடியேறினர். இருப்பினும் கணிசமான அளவிற்கு தமிழ் பௌத்தம் பல்லவர் ஆட்சியில் இருந்து சோழர் ஆட்சிக்குப் பின்னரும் இருந்ததற்கு சான்றுகள் உண்டு. கி.பி. 07ஆம் நூற்றாண்டைச் சோந்த சீன யாத்திரிகரான யுவான்சுவாங் 300 இலங்கைப் பிக்குகளை காஞ்சிபுரத்தில் சந்தித்ததாகக் கூறுகிறார். இக்காலத்தில் மகாயான பௌத்தத்தை பரப்புவதில் தீவிர அக்கறை காட்டிய வஜ்சிரபோதி என்பவர் இலங்கையிலும் சீனாவிலும் பௌத்த மதப் பரப்பக் காரணமாக இருந்தார். திரியாய், குச்சவெளி பொன்ற இடங்களில் கிடைத்த பல்லவர் கால கல்வெட்டுகள் 06ஆம் நூற்றாண்டின் பின்னரும் தமிழ் நாட்டில் இருந்து மகாயான பௌத்தம் பரவியதை உறுதிப் படுத்துகின்றது. தமி நாட்டில் நாகபட்டினத்தில் உள்ள சூடாமணி விகாரை கி.பி. 10ஆம் நூற்றாண்டில் முதலாம் இராசராச சோழனால் கட்டப்பட்டது. தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் தமிழ்ச்சாசனத்துடன் கூடிய சோழர்கால புத்தர், போதிசத்துவர் ஆகியோருக்குரிய வெண்கல விக்கிரகங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இவ்வகை விக்கிரகங்கள் இலங்கையிலும் கிடைத்துள்ளன. இலங்கையிற் திருகோணமலை மாவட் டத்தில் இருந்து இதுவரை 25 தமிழ்க் கல்வெட்டுக்கள் பௌத்த மதம் பற்றிக் கூறுகின்றன. அவற்றுள் ஒரு கல்வெட்டு இராசராச சோழனால் திருகோணமலையில் இராசராசப் பெரும்பள்ளி என்ற பெயரில் விகாரை ஒன்று அமைக்கப்பட்டதாகக் கூறுகிறது. இவற்றில் இருந்து சோழர் ஆட்சிக் காலத்திலும் தமிழ்ப் பௌத்தம் தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் ஒரளவு வளர்ச்சி பெற்றிருந்ததைக் காணமுடிகிறது.

இன்று பௌத்தமதமும், பௌத்த கலாச்சாரமும் சிங்கள மக்களுக்குரியதாக உள்ளது. ஒரு காலத்தில் தமிழ்நாட்டைப் போல் இலங்கையிலும் தமிழர்களின் ஒரு பிரிவினர் பௌத்தர் களாகவும் சிங்கள மக்களில் ஒரு பிரிவினர் இந்துக்களாகவும் இருந்துள்ளனர். அநுராதபுர அரசியல் தமிழ் மன்னர்களும், சிங்கள மன்னர்களும் மாறி மாறி ஆட்சி புரிந்ததாக தீபவம்சம், மகாவம்சம், சூளவம்சம் போன்ற பாளி நூல்கள் கூறுகின்றன. தமிழ் மன்னர்களில் சிலர் பௌத்தர்களாக இருந்தும் சில தமிழ் மன்னர்கள் பௌத்த மதத்திற்கு ஆதரவு கொடுத்தும் ஆட்சி செய்துள்ளனர் என இந் நூல்கள் கூறுகின்றன. இதனால் இன்றைய தமிழ் மக்களின் ஒரு பரிவினரின் மூதாதையினர் தமிழ் பௌத்தர்களாக இருந்தனர் எனக் கூறுலாம். இதையே தமிழர் பிராந்தியங்களில் காணப்படும் பௌத்த எச்சங்கள் உறுதிப்படுத்துகின்றன. கி. பி. 09ஆம் நூற்றாண்டின் பின்னர் ஏற்பட்ட பக்தி இயக்கத்தின் செல்வாக்கும், அதைத் தொடர்ந்து ஏற்பட்ட சோழர் ஆட்சியும் தமிழ்நாட்டைப் போல் இலங்கை யிலும் தமிழ்ப் பௌத்தம் வலுவிழக்க காரணமாயின்.




சிங்களபௌத்தம் உருவாக்கிய பொய்யே “மகாவம்சம்”

இன்றும் எழுதப்படுகிறது

வட்டுக்கோட்டை தீர்மானம் 1976

தவிசாளர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம், கியுசி, பா.உ (காங்கேசன்துறை)



1976 மே 14ஆம் தேதியன்று (வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள) பண்ணாகத்தில் கூடுகின்ற தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் முதலாவது தேசிய மாநாடு,

இலங்கைத் தமிழர்கள் தங்களின் தொன்மைவாய்ந்த மொழியினாலும் மதங்களினாலும் வேறான கலாசாரம், பாரம்பரியம் ஆகியவற்றினாலும் ஐரோப்பிய படையெடுப்பாளர்களின் ஆயுதப்பலத்தினால் அவர்கள் வெற்றி கொள்ளப்படும் வரை பல நூற்றாண்டுகளாக ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் தனிவேறான அரசாகச் சுதந்திரமாக இயங்கிய வரலாற்றின் காரணமாகவும் எல்லாவற்றுக்கும் மேலாக தமது சொந்தப் பிரதேசத்தில் ஒரு தனி நாட்டினமாக வாழ்ந்து தம்மைத் தாமே ஆளும் உலவுருதியாலும், இலங்கை வாழ் தமிழ் மக்கள் சிங்களவரில் இருந்து வேறுபட்ட ஒரு தனிநாட்டினம் என்று இதனால் பிரகடனப்படுத்துகிறது.

1972இன் குடியரசு அரசியலமைப்பு தமிழ் மக்களைப் நவ காலனித்துவ எஜமானர்களான சிங்களவர்களால் ஆளப்படும் ஓர் அடிமைத் தேசிய இனமாக ஆக்கியுள்ளதென்றும் தமிழ்த் தேசிய இனத்தின் ஆட்சிப்பிரதேசம், மொழி, பிரசாவுரிமை, பொருளாதார வாழ்க்கை, தொழில் மற்றும் கல்வி வாய்ப்புக்கள் ஆகியவற்றை இழக்கச்செய்வதற்கு சிங்களவர்கள் தாம் முறைகேடாகப் பறித்துக் கொண்ட அதிகாரத்தைப் பயன்படுத்துகின்றனரென்றும் அதன்மூலம் தமிழ் மக்களின் தேசியத் திற்கான இயற்பண்புகள் யாவும் அழிக்கப்படுகின்றனவென்றும் இம்மாநாடு உலகுக்கு அறிவிக்கின்றது.

மேலும் தமிழ் ஈழம் என்ற தனிவேறான அரசொன்றைத் தாபிப்பதற்கான அதன் ஈடுபாட்டுக்கடப்பாடு தொடர்பில், வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களுக்கு வெளியே வாழ்கின்றவர்களும் வேலை செய்கின்றவர்களுமான பெரும்பான்மையான பெருந்தோட்டத் தொழிலாளர்களின் ஒரு தொழிற்சங்கமான இலங்கைத் தொழிலாளர்காங்கிரஸ் வெளிப்படுத்திய அதன் ஒவ்வாமைகளைக் கருத்தில் கொள்கின்ற அதேவேளையில், ஒவ்வொரு தேசிய இனத்தினதும் உள்ளியல்பான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சுதந்திரமான, இறைமை பொருந்திய, சமயச்சார்பற்ற, சமதர்மத் தமிழீழ அரசை மீட்டளித்தலும் மீள உருவாக்குதலும் இந்நாட்டில் தமிழ்த் தேசிய இனம் உளதாயிருத்தலைப் பாதுகாக்கும் பொருட்டுத் தவிர்க்கமுடியாததாகியுள்ளதென இம்மாநாடு தீர்மானிக்கின்றது. இம்மாநாடு மேலும் பிரகடனப்படுத்துவதாவது:

அ. தமிழ் ஈழ அரசு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள மக்களைக் கொண்டதாக இருக்கவேண்டுமென்பதுடன் இலங் கையின் எந்தப்பகுதியிலும் வசிக்கின்ற தமிழ் பேசுகின்ற மக் களுக்கும் தமிழ் ஈழத்தின் பிரசாவுரிமையை விரும்பித் தெரிகின்ற உலகின் எப்பகுதியிலும் வசிக்கின்ற ஈழ வம் சாவழித் தமிழர்களுக்கும் முழுமையான, சமமான உறுதிப்படுத்தவும் வேண்டும். தமிழ் ஈழத்தின் ஏதேனும் சமயத்தைச் சேர்ந்த அல்லது ஆட்சிப்பிரதேசத்தைச் சேர்ந்த சமூகமொன்று வேறு ஏதேனும் பிரிவினரின் மேலாதிக்கத் திற்குட்படாதிருத்தலை உறுதிப்படுத்தும் பொருட்டு தமிழ் ஈழத் தின் அரசியலமைப்பு சனநாயகப் பன்முகப்படுத்தற் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும்.

ஆ. தமிழ் ஈழ அரசில் சாதி ஒழிக்கப்படவேண்டுமென்பதுடன், பிறப்பின் அடிப்படையில் பின்பற்றப்படும் பெருங்கேடான பழக்கமான தீண்டாமை அல்லது ஏற்றத்தாழ்வு முற்றாக ஒழித்துக் கட்டப்படவும் எவ்வகையிலேனும் அதனைக் கடைப்பிடித்தல் சட்டத்தால் தண்டிக்கப்படவும் வேண்டும்.

இ. தமிழ் ஈழம் அவ்வரசிலுள்ள மக்கள் சார்ந்திருக்கக்கூடிய எல்லாச்சமயங்களுக்கும் சமமான பாதுகாப்பும் உதவியும் வழங்குகின்ற சமயச்சார்பற்ற ஓர் அரசாக இருக்க வேண்டும்.

ஈ. தமிழ் அரச மொழியாக இருக்க வேண்டும் எனினும் தமிழ் ஈழத்தில் சிங்களம் பேசுகின்ற சிறுபான்மைகள் அவர்களின் மொழியில் கல்வியையும் அலுவல்களையும் தொடர்வதற்கான உரிமைகள் சிங்கள அரசிலுள்ள தமிழ் பேசும் சிறுபான்மைகள் பாதுகாக்கப்படும் சரி எதிரிடையான அடிப்படையில் பாதுகாக்கப்பட வேண்டும்.

உ. தமிழ் ஈழத்தில் மனிதனால் மனிதன் சுரண்டப்படுதல் தடை செய்யப்படும். உழைப்பின் மகத்துவம் பாதுகாக்கப்படும். சட்டத்தினால் அனுமதிக்கப்படும் எல்லைகளுக்குள் தனியார் துறையின் இருப்புக்கு அனுமதி வழங்கப்படுகின்ற அதே வேளையில், பண்டங்களின் உற்பத்தி மற்றும் விநியோகம் என்பன அரச உரிமையின் கீழ் அல்லது அரச கட்டுப்பாட்டுடன் மேற்கொள்ளப்படும். பொருளாதார அபிவிருத்தி சோசலிசத் திட்டமொன்றின் அடிப்படையில் ஏற்படுத்தப்படும். ஒரு தனிநபரின் அல்லது குடும்பத்தின் செல்வம் தொடர்பில் உச்சவரம்பு விதிக்கப்படும். இவ்வகையில் தமிழ் ஈழம் ஒரு சமதர்ம அரசாக இருக்க வேண்டும்.

தமிழ் தேசிய இனத்தின் இறைமையையும் சுதந்திரத்தையும் வென்றெடுப்பதற்கான போராட்டத்திற்கான செயல்திட்டமொன்றை மிதமிஞ்சிய தாமதமின்றி வகுத்தமைத்து அதனைத் தொடங்கவேண்டுமென தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் செயற்குழுவை இம்மாநாடு பணிக்கின்றது.

மேலும் இம்மாநாடு, சுதந்திரத்திற்கான இப்புனிதப்போரில் தம்மை முழுமையாக அர்ப்பணிக்க முன்வரும்படியும் இறைமையுள்ள தமிழ் ஈழ அரசென்ற இலக்கு எட்டப்படும்வரை அஞ்சாது போரிடும் படியும் பொதுவில் தமிழ்த் தேசிய இனத்துக்கும் குறிப்பாக தமிழ் இளைஞர்களுக்கும் அறைகூவல் விடுக்கின்றது.

(இது 1976 மே 15ஆந் தேதியன்று திரு. செல்வநாயகம், கியுசி. பா.உ அவர்கள் தலைமையில் (வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள) பண்ணாகத்தில் நடைபெற்ற தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் 1ஆவது தேசிய மாநாட்டில் ஏகமனதாகக் கைக்கொள்ளப்பட்ட தீர்மானம். 1977இல் இதனை முன்வைத்துத் தேர்தலுக்குச் சென்ற த.ஐ.வி.மு. தமிழ் வாக்காளர்களிடமிருந்து அமோகமான ஆணையைப் பெற்றது. இதுவே ஈழத்தமிழர் சனநாயக முறையில் நடத்தப்பட்ட ஒரு வாக்கெடுப்பில் சுதந்திரமாகத் தமது விருப்பை வெளிப்படுத்துக் கூடுமாயிருந்த இறுதித் தடவையாயிருந்தது.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் முழக்கம்: தமிழீழம்

வட்டுக்கோட்டைத் தீர்மானம் என்பது தான் என்ன?

சுதந்திரமும் இறைமையுமுள்ள தமிழீழத்தனியரசு என்பதே ஈழத்தமிழரின் அரசியல் அபிலாசை என்ற தமிழீழக் கோரிக்கைக்கான மக்களாணை பெறப்பட்ட அரசியல் தீர்மானம்.

30 வருட அமைதிவழிப் போராட்டத்தின் முடிவுக்காலத்தில், 1976 ஆம் ஆண்டு மே மாதம், தந்தை செல்வாவின் தலைமையில் இலங்கைத்தீவின் வடக்கு கிழக்கு இணைந்த நிலப்பரப்பின் தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் ஒன்றாய்க் கூடி வட்டுக்கோட்டைத் தேர்தல் தொகுதியில் உள்ள பண்ணாகம் எனும் இடத்தில் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானத்தை நிறைவேற்றினார்கள்.

சுதந்திரமும் இறைமையுள்ள தமிழீழ அரசை மீட்டளித்தலும் மீள உருவாக்குதலும் தமிழ்த்தேசியத்தின் மீட்சிக்கு தவிர்க்க முடியாதது என்பது மாத்திரமல்ல ஈழத்தமிழர்களின் அரசியல் இலக்கு தனிவேறான தமிழீழ அரசு என்பதை ஆணித்தரமாக எடுத்தியம்பும் ஒரே ஒரு மக்களாணை பெற்ற தீர்மானமும் இதுதான்.



இத் தீர்மானத்தின் அரசியல் முக்கியத்துவம் என்ன?

தமிழ் இறைமை (Tamil Sovereignty), தமிழ்த் தேசியம் (Tamil Nationhood), அதன் அரசியல் இலக்கு (Independent Statehood) ஆகியவற்றை வரைவிலக்கணஞ்செய்வதுடன் இறைமை மீட்சிக்கான கோட்பாட்டையும் (Reversion to Sovereignty), இன அழிப்புக்குட்பட்ட (Genocide) ஒரு தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டையும் (Right to Self-Determination) ஒரு சேரப் பயன்படுத்தி தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தின் தார்மீக அடிப்படைகளை முன்னெப்போதும் இல்லாதவாறு தெளிவாகவும், பின்னெப்போதும் இதைவிடத் தெளிவாக ஒரு தீர்மானமாக நிறைவேற்றுவதற்கான திறமை ஒன்றின் தேவைக்கான இடைவெளியை விட்டுவைக்காத அளவு மதி நுட்பத்துடனும், தந்தை செல்வா அவர்களினால் இத் தீர்மானத்தின் ஒவ்வொரு சொல்லும் தெளிவுற ஆய்வுக்குட்படுத்தப்பட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தந்தை செல்வா அவர்களே நேரடியாக இத்தீர்மானத்தை இதன் ஒவ்வொரு சொல்லையும் பகுப்பாய்வு செய்து இயற்றினார் என்று A J Wilson எனும் அரசியல் வரலாற்று ஆசிரியர் எழுதியுள்ளார்.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்துக்கென்றே சிறப்பான முக்கியத்துவம் என்ன?

இதன் சிறப்பு என்னவென்றால், அடுத்தவருடம், அதாவது 1977ம் ஆண்டு, இலங்கைத் தீவில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஈழத்தமிழர்கள் தமது பெருவாரியான வாக்குக்கள் மூலம் இத் தீர்மானத்திற்கு மக்களாணை வழங்கியமை. இதுவே தமிழீழத் தனியரசுக்காக இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் வாக்களித்த சனநாயக ரீதியிலான மக்களாணையாக விளங்குகிறது. இதனால் தான் இதை நாம் இன்று மீளவும் சனநாயகமும் கருத்துச்சுதந்திரமும் வாழும் ஏனைய நாடுகளில் எடுத்தாளமுடிகிறது.

1977 இற்குப் பின்னர் தமிழீழம் குறித்த மக்களாணையை இலங்கைத்தீவில் சனநாயக முறையில் முன்வைக்கமுடியாத வாறு அடக்குமுறைச் சட்டங்கள் (1979 பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்) கொண்டுவரப்பட்டது மட்டுமல்ல சிறீலங்காவின் அரசியல் யாப்பிலே 6ம் திருத்தம் என்ற திருத்தத்தையும் 1983 இல் கொண்டுவந்து தனிநாட்டுக்கோட்பாட்டை - அதாவது இந்த சனநாயக ரீதியிலான மக்கள் ஆணையை - யாப்புரீதியாகவே சிறீலங்கா அரசு மறுதலித்துவிட்டது.

இதனால் சுதந்திரமும் இறைமையுமுள்ள தமிழீழத் தனியரசுக்கான தமது மக்களாணையை மீளவும் சனநாயக முறையில் வெளிப்படுத்த முடியாத நிலையே தாயகத்தில் தொடர்கிறது. இன்று வரை இந்த 1977ம் ஆண்டு மக்களாணையே இலங்கைத் தீவிலுள்ள ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை அவர்கள் முதலாவதாக மட்டுமல்ல இறுதியாகவும் தமிழீழத் தனியரசுக்காக வெளிப்படுத்தக்கூடியதாகவிருந்த மக்களாணையாகும்.

1977ம் ஆண்டுத் தேர்தல் வேறு எந்த வகையில் முக்கியமாகிறது?

இந்த 1977ம் ஆண்டுத் தேர்தலே, தமிழர் தாயகத்தைப் பொறுத்தவரை, இறுதியாக, இராணுவக் கெடுபிடிகள், பாரிய இடப்பெயர்வுகள், புலப்பெயர்வுகள் இல்லாத நிலையில் சுதந்திரமான முறையில் நடந்த இறுதித் தேர்தலாகும்.

இது 1972ம் கொண்டுவரப்பட்ட சிங்கள மேலாதிக்க ஒற்றையாட்சிக் குடியரசு யாப்பு அமைக்கப்பட்ட பின்னர் இலங்கைத் தீவில் நடாத்தப்பட்ட முதலாவது தேர்தல். இதனால் இத் தேர்தலிலேயே வடக்குக் கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் ஒட்டுமொத்தமாக இந்த அரசியல் யாப்பை நிராகரிப்பதற்கான வாய்ப்புக் கிட்டுகிறது, ஏனென்றால் தமிழீழ மக்கள் சுதந்திர நாட்டிற்காக வட்டுக்கோட்டைத் தீர்மானத்துக்கு அளித்த மக்களாணை தனது வரையில் 1972ம் ஆண்டு யாப்பை தமிழ்த்தேசியத்திற்கு எதிரானதென்றும், சட்டவிரோதமானதென்றும் அதைத் தமிழர்கள் நிராகரிப்பதாகவும் குறிப்பிட்டிருந்தது.

இந்த வகையில் இன்று வரையுள்ள சிறீலங்காவின் யாப்பை தமிழர்கள் நிராகரித்தமைக்கான சட்டபூர்வமான சனநாயக ரீதியான வெளிப்படுத்தலுக்கான முக்கியத்துவமும் 1977ம் ஆண்டின் தேர்தலுக்கு உண்டு.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்துக்கு மேலதிக சிறப்பம்சங்கள் வேறு ஏதும் உண்டா?

ஒன்றிரண்டல்ல, பல உண்டு. தமிழீழத் தனியரசு அமைக்கப்பட வேண்டியதற்கான அரசியல், வரலாற்று நியதிகளையும், மனிதாபிமான நியாயப்பாடுகளையும் அமைக்கப்படவேண்டிய தமிழீழ அரசின் பிரசாவுரிமை அதன் மத சார்பற்ற, சாதி வேறு பாடற்ற தன்மைகள் போன்ற பல அடிப்படை விவகாரங்களை ஒரு சில பக்கங்களுக்குள் சுருக்கமாகவும் நுட்பமாகவும் இந்தத் தீர்மானம் தொகுத்திருக்கிறது.

அதுமட்டுமல்ல, தமிழீழத்தின் ஒரு பிராந்தியத்தை வேறொரு பிராந்தியமோ அல்லது ஒரு சமய அல்லது சமூகக் குழுவினரை இன்னொரு குழுவினரோ மேலாதிக்கம் செய்யாதிருக்கும் வகையில் சனநாயகப் பன்முகப்படுத்தற் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு தமிழீழ அரசு அமையவேண்டும் என்றும் இத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இவற்றுக்கப்பால், உலகெங்கும் பரந்து வாழும் ஈழத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர்களுக்குத் தமிழீழத் தாயகத்தின் மீதான உரிமையைக் கூட இந்தத் தீர்மானம் நிறுவுகின்றது. இத் தீர்மானத்துக்கு 1977இல் கிடைத்த மக்களாணையை அடிப்படையாகக்கொண்டே பின்னாட்களில் தொடர்ந்த தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது (கிளி நொச்சியில் 2002 சர்வதேச பத்திரிகையாளர் மாநாட்டில் தேசியத் தலைவர் இதைத் தெளிவாகக் குறிப்பிடுகிறார்.)

அளப்பரிய தியாகங்களைப் புரிந்து, தமிழீழ அரசு அமைக்கப் படும் வரை அஞ்சாது போராடுவதற்கான வேண்டுகோளை பொதுவாகத் தமிழ்த் தேசிய மக்கள் அனைவருக்கும், குறிப்பாக இளைஞர்களுக்கும், இந்தத் தீர்மானம் அறைகூவலாக விடுத்திருந்தது.

தமிழீழத்தை வென்றெடுப்பதற்கான போராட்டத்திற்கான செயற்திட்ட மொன்றை வகுக்குமாறு தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் செயற்குழுவை இந்தத் தீர்மானம் பணித்திருந்தது.

தமிழீழம் சமதர்ம அரசாக இருக்கவேண்டும் என்று இந்தத் தீர்மானம் கூறுகிறது. (இது அன்றைய பனிப்போர் நடந்துகொண்டிருந்த காலகட்டத்திற்குரிய உலக ஒழுங்கைக் கருத்திற் கொண்டு பார்க்கப்படவேண்டியது.)

தந்தை செல்வா மறைந்த பின்னர் (மீளவும்) உருவான தலைமை தமக்குக் கொடுக்கப்பட்ட ஆணையை செயற் படுத்த வில்லை. தமிழீழத்திற்கான அரசியல் நிர்ணய சபையை உருவாக்குவதற்கு வடக்கு, கிழக்கில் தெரிவான பிரதிநிகள் செயலாற்றவில்லை. இதனால் இளையோர் வெறுப்படைந்தனர். "கேட்டது தமிழீழம் கிடைத்தது ஜப்பான் ஜீப்" என்பது போன்ற வாசகங்களை தெருச் சுவர்களில் எழுதி தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமை மீதான தமது அதிருப்தியை வெளிக்காட்டினார்கள். இதைத்தொடர்ந்து இராணுவரீதியாக தமிழ் இளையோர் அந்த மக்களாணைக்குச் செயல்வடிவம் கொடுக்க விழைந்தனர். இதுவே ஆயுதப்போராட்டம் தீவிரமடைவதற்கான அரசியல் அடிப்படையைக் காட்டுகிறது.

இன அழிப்பின் ஆழத்தை இன்று கூட தெளிவாக எம்மவர் எடுத்தியம்பும் ஆற்றலை வளர்த்துக்கொண்டிராத அல்லது வளர்த்துக்கொள்ள "விரும்பாத" ஒரு சூழலில் வட்டுக்கோட்டைத் தீர்மானம் அன்றே சிங்களப் பெருந்தேசியவாதிகளின் நுட்பமான பண்பாட்டு இன அழிப்பு (Cultural Genocide) மற்றும் திட்டமிட்ட தாயக மண்பறிப்பு (Colonisation) போன்றவற்றை விடுதலைக்கான தீர்மானத்தை நியாயப்படுத்துவதற்கான முக்கிய காரணிகளாக எடுத்தியம்பியிருக்கிறது.

சிறீலங்காவின் அரசியல் யாப்பு தமிழர்களைப் பொறுத்தவரை சட்டவிரோதமானது என்பதையும் அது தமிழர்களை ஆக்கிரமித்து அடிமைத் தேசிய இனமாக்கியுள்ளது என்பதையும்

குறிப்பிட்டு காலனித்துவ சக்திகளுக்குப் பின் சிங்களப் பெருந் தேசியவாதத்தை ஓர் புதிய ஆக்கிரமிப்புச்சக்தியாக இத் தீர் மானம் இனம் காண்கிறது.

இந்த வகையில் இத் தீர்மானத்தின் அரசியற் கனதியானது 46 வருடங்களுக்கு முன்பே எந்த அளவு ஆழமானதாயிருந்த தென்பது இன்றைய இன அழிப்புப் போரொன்றின் (ஈழப்போர்-4) முடிவில் உலக மனச் சாட்சியின் கதவுகளைத் தட்டும் புலம் பெயர் தமிழர்களால் மீள உறுதிசெய்து காட்டப்பட்டதும் காட்டப்படவேண்டியதாகிறது.

ஒட்டுமொத்தமாகக் குறிப்பிட்டால் வட்டுக்கோட்டைத் தீர்மானம் வரலாற்றுப் பக்கங்களில் குறிப்பிடப்படுவதற்கான ஒரு வெறும் "பழைய மைல்கல்" நிகழ்வு மட்டும் அல்ல, தொடர்ந்து வந்த அளப்பரிய அர்ப்பணிப்புகளாலும் எதிரி மட்டுமன்றி பலவேறு பட்ட சக்திகளின் அநீதியான அணுகுமுறைகளாலெல்லாம் எல்லை மீறிக் கனதிப் படுத்தப்பட்டிருக்கும் தமிழ்த் தேசியத்தின் விடுதலைக்கான மக்கள் ஆணை.

வட்டுக்கோட்டையில் தொடங்கிய தமிழர்களின் போராட்டம் நந்திக்கடலில் நடந்த சமருடன் முடிவடைந்துவிட்டதாக ராஜபக்ச அரசு தனது 18 மே 2009 "வெற்றிப்பிரகடனத்தில்" முழங் கியது. இது எந்த அளவுக்கு வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் சனநாயக அரசியல் தார்ப்பரியத்துக்கு சிறீலங்கா அரசு அச்சம் கொண்டிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது.

வட்டுக்கோட்டை தீர்மானம் நிறைவேற்றி 46 வருடங்கள் கடந்து விட்டது. இதற்கு பிறகு எத்தனையோ நல்லது கெட்டது எல்லாம் நடந்து முடிந்து நாங்கள் நன்றாக களைத்துப்போன நிலையில் இருக்கின்றோம். இதை ஏன் இப்போது மீண்டும் புதுப்பிக்க வேண்டும்? முதலில் இருந்து எல்லாவற்றையும் தொடங்க வேண்டுமா?

* சர்வதேச சக்திகள் பலவும் ஈழத் தமிழர்களுக்கான அரசியல் தீர்வை 13வது திருத்தச் சட்டத்திற்குள் அடக்கிவிடலாம் என்று நினைக்கின்றன. இந்த நிலையில் எமது தீர்க்கமான முடிவை சனநாயக ரீதியில் எடுத்துரைப்பது அவசியம்.

* முள்ளிவாய்க்கால் போர் முடிந்தவுடன் சிறீலங்காவின உந்து தலில் சில நாடுகள் ஈழத்தமிழர்கள் தங்களுடைய தேசியக் கோட்பாட்டைக் கைவிட்டுவிட்டு எந்தவிதமான தீர்வையும் ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைப்பதற்கும் இடமுண்டு. Post conflict என்றும் Post LTTE என்றும் தற்போதைய நிலையை இவர்கள் வர்ணிக்க முயல்கின்ற போதும், ஈழத்தமிழர்களாகிய எமது உண்மை நிலை Post Sri Lankan என்பதை வர்ணிக்க வேண்டும்.

* மேற்குலக நாடுகளின் அரசியல் பண்பாட்டைப் பின்பற்றி மக்கள் ஆணையை முறைக்குமுறை மீள் உறுதி செய்வது, எமது கோரிக்கையின் நம்பகத்தன்மையை வலுப்படுத்தும்.

* இலங்கைத் தீவின் அரசியலில், பரிட்சயம் இல்லாத தற் போதைய இளைய சமுதாயத்தினர்க்கு எமது தேசிய நிலைப் பாடு குறித்த ஒரு அரசியல், சரித்திர அறிவை வளர்க்க இம் முயற்சி உதவும்.

* ஒரு பாரிய இனவழிப்பிற்கு பின்னரும் எமது தேசிய இலக்கை திசை திருப்ப முயலும் அரசியல்வாதிகளுக்கு இத்தகைய முயற்சி ஒரு எச்சரிக்கையாக அமையும்.

* 1977ஆம் ஆண்டு நிறுவப்பட்ட மக்களாணைக்குப் பின், பல தசாப்தங்கள் கடந்த நிலையில், குறிப்பாக 1959ஆம் ஆண் டிற்குப் பின் பிறந்தவர்கள் சனநாயக ரீதியாக தமது தமிழீழத்திற் கான ஆணையை கருத்துச் சுதந்திரம் உள்ள நாடுகளில் தற்போதுதான் முதன்முறையாக இதற்காக வாக்களிக்கும் வாய்ப்பை பெறுகிறார்கள்.

* பிறசக்திகளின் நிர்பந்தங்களின் மூலம் வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கு பின்னால் உருவாக்கப்பட்ட முன்னெடுப்புகள் (திம்பு முதல் ஒஸ்லோ வரை) சுயநிர்ணய உரிமை, உள்ளக சுயநிர்ணய உரிமை போன்ற கொள்கைகளை மாத்திரமே கருத்தில் கொண்டவை. தற்போது, தமிழீழம் மாத்திரமே எமது குறிக்கோள் என்பதை மீளவும் வலியுறுத்த வேண்டிய கடப்பாடு எமக்கு உள்ளது.



முள்ளிவாய்க்கால் வரையான யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் இனப்படு கொலை செய்யப்பட்ட போதுகூட எதுவும் செய்யாது மௌனமாக இருந்த சர்வதேசம், இந்த வாக்கெடுப்பின்மூலம் மட்டும் திரும்பிப் பார்க்கும் என்று நினைக்கின்றீர்களா?

சர்வதேச சக்திகள் பயங்கரவாதத்தின் மீதான போர் என்று சாக்கு போக்கு சால்ல இனிமேல் வாய்ப்பில்லை. சிறீலங்கா அரசு பாரிய மனித உரிமை மீறல், போர்க்குற்றம், இன அழிப்பு புரிந்ததாக உலகநாடுகள் ஏற்றுக்கொள்ளும் நிலை உருவாகி வருகிறது. ஐ.நா, மற்றும் சர்வதேச சட்டங்களின் அடிப்படையில் கொசோவோ மக்கள் போல ஈழத் தமிழர்களும் தனிநாடுதான் ஒரே தீர்வு என்று கேட்கும் உரிமை மேலும் வலுப்பட்டுள்ளது. "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்பதுபோல, இத்தரு ணத்தை தமிழ் மக்கள் தக்க முறையில் பயன்படுத்த வேண் டியது அவசியம். அண்மையில் அயர்லாந்தின் டப்ளின் நகரில் நடைபெற்று முடிந்த மக்கள் நீதிமன்றத்தின் தீர்ப்பு சிறீலங்கா அரசு போர்க்குற்றம் மற்றும் மனிதத்திற்கு எதிரான குற்றம் புரிந்ததாகவும் இன அழிப்புக் குற்றம் விசாரிக்கப்பட வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. அது மட்டுமன்றி பிரான்ஸ் நாடு இன அழிப்பிற்கு எதிரான நீதிமன்றம் அமைக்கும் முன்னெடுப்பை மேற்கொண்டிருப்பதையும் நாம் கருத்திற் கொள்ள வேண்டும்.


நன்றி: புலத்தில் - சனவரி 2010 வெளியீடு





தமிழீழ உட்கட்டுமானம்

STRUCTURES OF THAMILEELAM



சுயநிறைவான தன்னில்தானே தங்கிநிற்கும் பொருளாதார வாழ்வுடைய சமூகமாக எமது சமூகம் உருவாகவேண்டும் என்பதே, எனது விரும்பம்: மக்கள் தம்மைத்தாமே ஆளும் உரியையுடைய சனநாயக ஆட்சி முறையையே நான் விரும்புகின்றேன். இந்தப் புதிய சமூகத்தில், உழைக்கும் மக்கள் மத்தியில் பொருளாதார சமத்துவம் நிலவ வேண்டும்.

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு. திரு. வே. பிரபாகரன் அவர்கள்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வெளியீடு

1. பிரதான நகரங்கள்

மாநிலங்களாகத் தெரியப்பட்ட ஒவ்வொரு பிரதேசத்திற்கும் ஒரு



பிரதான நகரைத் தெரிந்தெடுக்க வேண்டுமென இச் செயற்குழு கருதி அதன்படி செயற்பட்டது. இதற்கான முதற்கட்ட அவதானமாகத் தமிழீழத்தின் வளங்கள் பற்றி ஆய்வு செய்யப்பட்டது. உட்கட்டுமானம் தொடர்பாக 04.08.1993 இல் யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற குழுக்களின் கூட்டத்தில் ஏனைய குழுக்களுடன் நடாத்திய ஆலோசனையோடு பிரதான நகரங்கள் தெரியப்பட்டன. அவை தொடர்பாக மீண்டும் எமது செயற்குழு மீளாய்வு செய்யவேண்டும் என்றும் தீர்மானிக்கப் பட்டது. இதன் அடிப்படையிற் பிரதான நகரங்களின் தெரிவு மேற்கொள்ளப்பட்டது.

1.1 நல்லூர்ப்பிரதேசத்தின் பிரதான நகரம் யாழ்ப்பாணம் ஆகும். இங்கு கூடியளவு உட்கட்டுமான வசதிகள் உள்ளன.

1.2 வரணிப் பிரதேசத்தின் பிரதான நகரம் கொடிகாமம் ஆகும். இது பருத்தித்துறை, சாவகச்சேரி, பளை, வடமராட்சிக் கிழக்குப் பகுதிகளின் மத்தியில் அமைகிறது. இங்கு அபிவிருத்திக்குரிய நிலப்பரப்புக் காணப்படுகிறது. புவியியற் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை அவர்கள் கொடிகாமம் பற்றி ஆய்வு நடாத்தி, அதன் முக்கியத்துவம் பற்றிச் சில கட்டுரைகள் எழுதியுள்ளார்.

1.3 கரைச்சி மாநிலத்ததுக்கு பிரதான நகரம் கிளிநொச்சி நகரம் ஆகும். இங்கு கூடியளவு உட்கட்டுமான வசதிகள் உள்ளன.

1.4 பூநகரி மாநிலத்துக்குப் பூநகரி நகரமே சிறந்தது. சங்குப்பிட்டி, கேரதீவுப் பாலமும் (மகாதேவாபாலம்) போக்குவரத்தும் பூநகரி நகரை முக்கியத்துவப்படுத்து கின்றன. இம் மாநிலத்துக்கான நிர்வாக மையம் இங்கு இருப்பது விரும்பத்தக்கது.

1.5 முல்லைத்தீவு மாநிலத்துக்கு முல்லைத்தீவு நகரம் ஏற்கனவே இருப்பதால், தண்ணீரூற்று பிரதான நகரமாக அமையும். முல்லைத்தீவு நகரம் ஒரு துறைமுகமாகச் செயற்படும்.

1.6 மாங்குளம் வட தமிழீழத்தின் மாநகரமாகும். இவை பற்றி ஆய்வுகள் 1991ல் நடைபெற்றிருந்தன. இங்கு மாநகரம் உருவாவதால் காடு அழிப்பு ஏற்படும் அபாயம் உண்டென்றும், நீர்வளம் போதுமானதாக இருக்குமா என்ற கருத்துக்களும் தெரிவிக்கப்பட்டன. இதனால் தலைநகராகச் செயற்படும் மாநகரம் முறி கண்டியி அல்லது கொக்காவிலில் அமையலாமென்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது.

1.7 மாந்தைப்பிரதேசத்தில் மன்னார் நகரமிருப்பதால், பெருநிலப்பகுதிகளின் அபிவிருத்தி பின் தங்கி யுள்ளது. இங்கு கூடியளவு வளமும் காணப்படு கின்றது. இதனால் உயிலங்குளம் இப்பிரதேசத்தின் பிரதான நகரமாக அமையும்.

1.8 மடு மாநகரத்துக்கு மடுவே நகரமாகும். என்ற முடிவு 04.08.1993 இல் நடைபெற்ற கூட்டத்தில் மேற் கொள்ளப்பட்டிருந்தது. இச் செயற்குழு இதனை மீளாய்வு செய்து நகரத்தை மடு றோட் எனுமிடத்துக்கு மாற்றவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. இவ் வாறு தெரிவு செய்யப்பட்டமைக்கு இரண்டு காரணங் கள் கூறப்பட்டன.

1. மடு ஒரு காட்டுப்பிரதேசமாயுள்ளது. இங்கு நகரம் ஏற்படுத்தப்பட்டால் காட்டுவளம் அழிக் கப்பட்டு விடும்.

2. மடு கோயில் ஒரு புனிதப் பிரதேசமாகப் பேணப்படல் வேண்டும். இப்பகுதி பெரிய நகர மாக்கப்பட்டால். இதன் புனிதத்தன்மை சீர் குலையும் அபாயம் ஏற்படலாம்.


1.9 வவுனியா மாநிலத்துக்கு ஓமந்தை பிரதான நகரமாவது பொருத்தமானது. இதன் வளர்ச்சியின் போது தற்போதைய வவுனியா நகரும் அடங்கும். வவுனியா நகரும் ஓரளவு அபிவிருத்தியடைந் துள்ளபடியால் அது பிரதான நகரமாக இருந்தல் வேண்டுமென 04.08.1993 இல் நடந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருப்பதை இச் செற்குழு மீளாய்வு செய்தது, வவுனியா ஒதுக்கில் உள்ளபடியால் ஓமந்தை சிறந்ததெனக் கருதியது.

1.10 குச்சவெளி மாநிலத்துக்குத் திரியாய் பிரதான நகர மாகத் தெரிவு செய்யப்பட்டது. திரியாய் ஒரு ஆதிக் குடியிருப்பு என்ற வகையில் அது நகரமாவது விரும் பத்தக்கது.

1.11 திருகோணமலை மாநிலத்துக்குத் தம்பலகாமம் தான் அபிவிருத்திக்கு உகந்த நகரமாகும். தற்போதைய திருகேணமலை நகரம் ஒரு வரலாற்றுப் பொக்கிஷ மாகக் கோணேஸ்வரர் கோவிலை உள்ளடக்கிய வகையிற் பேணப்படல் வேண்டும். ஏற்கனவே திருகோணமலைக் கைத்தொழிற் பூங்கா (Trinco Industrial Park) என்ற மாபெரும் அபிவிருத்தித் திட் டமும் இப்பகுதிக்குரியதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் பாரிய திருகோணமலை (Greater Trincomalee) என்றழைக்கப்படும்.

1.12 மூதூர் மாநிலத்தின் பிரதான நகரமாகக் கிளிவெட்டி அமையவேண்டுமெத் தீர்மானிக்கப்பட்டது.

1.13 வாகரை மாநிலத்தின் பிரதான நகரமாக வாகரை நகரம் அமைய வேண்டுமென 04.08.1993 கூட் டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இதனை இக்குழு மீளாய்வு செய்யும் போது மாங்கனி பிரதான நகரமாக



இருப்பது விரும்பத்தக்கதெனக் கருதப்பட்டது.

1.14 மட்டக்களப்பு மாநிலத்தின் பிரதான நகரமாகவும் கிழக்குப் பிராந்தியத்தின் தலைநகரமாகவும் கரடியன்ஆறு அமைய வேண்டுமெனத் தீர்மானிக் கப்பட்டது. இப்பிரதேசத்தில் மட்டக்களப்பு நகரமும் தொடர்ந்திருக்கும். இந்நகரை விஸ்தரிப்பதற்கான இடப்பரப்புக் குறைவாயிருப்பதால், கரடியன் ஆறு நகரமாக அபிவிருத்தி செய்யப்படுவது சிறந்தது.

1.15 வெள்ளாவெளிப் பிரதேசத்துக்குப் பேராறு (மகாஓயா) நகரம் பிரதான நகரமாக அமையவேண்டும். இது மத்திய நகரமாக வளரமுடியும். 04.08.1993 இல் நடைபெற்ற கூட்டத்தில் வெள்ளாவெளிப்பிரதேசத் துக்குப் பெரிய புல்லுமலை நகரமாக அமைய வேண் டுமெனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆயினும் இது இம்மாநிலத்தின் கிழக்கு எல்லையில் அமை வதாலும், கிழக்குப் பிராந்தியத்தின் தலைநகரமான கரடியன் ஆறுக்கு மிகச் சமீபமாக இருப்பதாலும், பேராறு நகரம் விரும்பத்தக்கதாக செயற்குழு தீர்மானித்தது.

1.16 அக்கரைப்பற்று மாநிலத்தின் பிரதான நகரமாகப் பாலமுனை அமையவேண்டுமென்று தீர்மானிக் கப்பட்டது.

1.17 பொத்துவில் மாநிலத்தின் பிரதான நகரமாகப் பொத்து வில் அமையவேண்டும். அருகம்பே துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படும் போது அதனருகிற் காணப்படும் பொத்துவில் நகரமும் விருத்தியடையும்.

1.18 அறுவாக்காடு மாநிலத்தின் பிரதான நகரமாகப் பொம்பரிப்பு அமையவேண்டும்.

1.19 புத்தளம் மாநிலத்தின் பிரதான நகரமாகப் புத்தளம் அமையவேண்டும்.

1.20 சிலாபம் மாநிலத்தின் பிரதான நகரமாகச் சிலாபம் அமையவேண்டும்.

தொடரும்...


உலக வணிகம் ULAGA VANIKAM

2023



LIST YOUR BUSINESS

ON OUR BUSINESS DIRECTORY



உலக வணிகம் ULAGA VANIKAM

விளம்பரம் ஒர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஒர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்யும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

தொடர்புகளுக்கு 437.345.4203

தமிழீழ விடுதலை புலிகள் அரசியற்துறையின் அறிக்கை 26.04.2022

அரசியற்துறை
தமிழீழ விடுதலைப் புலிகள்

26.04.2022

தமிழீழம்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி தொடர்பான, தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியற்துறையின் நிலைப்பாடு.

இலங்கையில் வரலாறு காணாத வகையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் அதிபர் கோட்டபாய ராஜபக்ச மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ச ஆகியோருக்கு கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளதை எமது மக்கள் நன்கு அறிவீர்கள். சிங்கள தேசத்தின் ஆட்சியாளர்களின் மக்கள் நலன் விரோத ஆட்சி முறையால் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியால், இன்று நாடளாவிய ரீதியில் பாரிய மக்கள் கிளர்ச்சியைச் சிங்கள தேசம் எதிர்நோக்கியுள்ளது. ஆட்சி மாற்றத்திற்காகச் சிங்கள மக்கள் இன்று வீதியில் இறங்கிப் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். அறுபத்தொன்பது லட்சம் சிங்கள மக்களின் வாக்குகளால் வெற்றி பெற்றதாக மார்தட்டிய சிங்கள ஜனாதிபதியை, இன்று அதே மக்கள் வீட்டுக்கு போ என வீதியில் இறங்கிப் போராடுகின்றார்கள். ஈழத் தமிழரை இனவழிப்புச் செய்த போரின் வெற்றி நாயகர்களாக இவர்களைக் கொண்டாடிய சிங்கள மக்களே இவ்வளவு விரைவாக அவர்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழுவார்கள் என யாருமே எதிர்பார்க்கவில்லை.

சிங்கள தேசத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழர் தேசமும், இந்தப் பொருளாதார நெருக்கடியால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்பது மறுக்கமுடியாத உண்மை. ஆயினும் இந்தப் பொருளாதார நெருக்கடிக்கான மூலகாரணம், பல தசாப்தங்களாக எம்மீது நடாத்தப்பட்ட ஆக்கிரமிப்பு இனவழிப்பு யுத்தத்திற்காக உலக நாடுகள் எங்கும் வாங்கிக் குவித்த கடனே ஆகும். இக்கொடிய ஆக்கிரமிப்பு யுத்தத்தின் வடுக்களைத் தாங்கி நிற்கும் எம்மிடமே அந்த யுத்தத்தினால் ஏற்பட்ட கடன் பளுவையும் சுமத்தும் சூழ்ச்சிகரத் திட்டத்தைச் சிங்கள அரசு வகுத்துவருகிறது. புலம்பெயர் மக்களே! வர்த்தகப் பெருந்தகைகளே! முதலீட்டாளர்களே! இவர்கள் விரித்துள்ள வலைக்குள் சிக்கி நீங்கள் ஏமாந்துவிட வேண்டாம். உங்கள் உடன்பிறப்புக்களைக் கொன்றழிக்கச் செலவான சிறீலங்கா அரசின் கடனை ஈடுசெய்ய நீங்கள் முதலீடு செய்வதைப் புறக்கணித்து, வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் வாழும் தமிழ் மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் உங்கள் முதலீடுகள் நேரடியாக அம் மக்களைச் சென்றடைய வேண்டுமென நாம் எதிர்பார்க்கிறோம்.

ஈழத் தமிழருக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைக் கருத்திற் கொண்டு, இந்திய அரசின் அனுசரணையுடன் தொப்புள்கொடி உறவுகளாகிய தாய் தமிழகமும், தமிழக அரசும் முன்னெடுத்துள்ள பொருளாதார உதவித் திட்டங்களை நாம் நன்றியுணர்வோடு வரவேற்கின்றோம். இவ்வுதவிகள் உங்களையும் எம்மையும் பிரிக்கும் கடலைத் தாண்டி நேரடியாகவே எமது மண்ணில் இந்திய நடுவண் அரசின் உதவியுடன் கொண்டுவந்து சேர்ப்பதோடு, தமிழ் மக்களின் கைகளிலேயே நேரடியாகக் கிடைப்பதற்கான வழிமுறைகளை ஏற்படுத்தும்படி உரிமையுடன் உங்களைக் கேட்டுக்கொள்கின்றோம். அத்துடன் இவ் அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி ஈழத் தமிழ் மக்களிற்கான நிரந்தர அரசியல் தீர்வுக்கான அழுத்தத்தை இந்திய மத்திய அரசுக்குக் கொடுக்குமாறு உரிமையோடு வேண்டுகின்றோம்.

சிங்கள தேசத்தில் ஏற்படப்போகும் எந்த ஆட்சி மாற்றமும் ஈழத் தமிழ் மக்களிற்கு எவ்விதமான விமோசனத்தையும் தந்துவிடப் போவதில்லை. எமது பட்டறிவில், இன்றுவரை ஆட்சிப் பீடத்தில் அமர்ந்த எல்லாச் சிங்கள அரசுகளுமே தமிழர்களைக் கொல்வதிலும், எமது உரிமைகளைப் பறிப்பதிலும், எமது நிலங்களை அபகரிப்பதிலும், எமது வளங்களைச் சுரண்டுவதிலும், தமிழரின் குடிசனப் பரம்பலை மாற்றியமைப்பதிலும் போட்டி போட்டுத் தமது அதிகாரத்தைக் காப்பாற்றி வந்திருக்கிறார்கள். ஆரம்பத்தில் இனக் கலவரங்களை நடாத்தித் தமிழர்களை அழித்தவர்கள், இறுதியாகத் தற்பாதுகாப்புக்காக ஆயுதம் தரித்த, தமிழ் மக்கள் மீது போர் புரிந்து இனவழிப்பை நடாத்தியுள்ளார்கள். அதியுச்ச இனப்படுகொலை செய்த ஒருவரைத்தான் சிறீலங்கா மக்களும் அதிக வாக்களித்து நாட்டின் அதிபராக்கியிருந்தார்கள். சிங்கள மக்களில் பெரும்பான்மையானோரின் வாக்குரிமை இன்றுவரை யார் மிகச் சிறந்த இனவாதியோ அவருக்குப் புள்ளடி போட்டு ஆட்சிப் பீடத்தில் ஏற்றுவதற்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஈழத் தமிழர்களாகிய நாம் ஒருபோதும் எமது பொருளாதார மீட்சிக்காகப் போராடவில்லை, மாறாக எமது வாழ்வுரிமை, இழந்த எமது இறைமை மற்றும் பறிபோன எமது நிலத்தை மீட்கவே போராடிக் கொண்டிருக்கின்றோம். சிங்களவர்களின் வரலாற்று வாழ்விடங்களின் ஒரு அங்குல நிலம்கூட எமக்கு வேண்டாம். நாம் 2009க்கு முன் யுத்த நெருக்கடிக்குள்ளும் சுதந்திர மனிதர்களாக, தன்னிறைவான தற்சார்புப் பொருளாதாரத்துடன், சிறப்பான தலைமைத்துவம் கொண்ட நடைமுறை அரசின் கீழ் வாழ்ந்துவந்தோம். இப் பொருளாதார நெருக்கடி எமக்கு ஒன்றும் புதிய விடயமல்ல. ஆயினும் தற்போது ஏற்படுள்ள நிலைமைகளைப் பயன்படுத்தி எமது மக்களையும், இளையவர்களையும் சிலர் தவறாக வழிநடத்திச் சிங்கள தேசத்தின் ஆட்சி மாற்றப் போராட்டங்களின் பகடைக்காய்களாகப் பயன்படுத்த விளைகின்றார்கள். இது தொடர்பாக அனைத்துத் தமிழ் மக்களையும் விழிப்புடன் செயல்படுமாறு அன்புரிமையோடு கேட்டுக்கொள்கின்றோம். இராஜபக்ச குடும்பத்தைச் சர்வதேச விசாரணையூடாக கூண்டில் ஏற்றித் தண்டனை பெற வைப்பதனூடாக,

இனிவரும் சிங்கள ஆட்சியாளர்கள் தமது சுயநல அரசியலுக்காக இனவாதத்தைத் தூண்டி அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்றொழிக்கும் நடைமுறையைக் கைவிடப் பண்ணவேண்டும் என்பதில் நாம் உறுதியாகவுள்ளோம்.

அன்புக்குரிய எம் தாயக, புலம்பெயர் தமிழ் உறவுகளே! ஒருபுறம் பகைவர் எம்மினத்தைக் அழித்துக் கொண்டிருக்க, மறுபுறம் கருத்து வேறுபாடுகளால் நாமே எம்மினத்தைச் சிறுகச் சிறுகச் சிதைத்துக் கொண்டிருக்கிறோம் என்பது உங்களுக்குப் புரியவில்லையா? நாம் எமது இனத்தை நேசிப்பது உண்மையானால் எம்மினத்தின் விடுதலைக்காக உழைக்கும் நாம் அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்படுவோம் வாருங்கள்! தாயகத் தமிழ்த் தேசியக் கட்சிகளே! புலம்பெயர் அமைப்புக்களே! அரைகுறைத் தீர்வுகளுக்காக அவசியமான விடுதலையை விட்டுக் கொடுத்துவிட வேண்டாம். சமகாலப் பூகோள மாற்றங்கள் மற்றும் உள்நாட்டு அரசியல் நிலைமைகள் என்பன எமக்குச் சாதகமாகக் கனிந்து வருகின்ற சூழ்நிலையைக் கச்சிதமாக நாம் கையாளவேண்டிய கடப்பாடு உங்கள் எல்லோருக்கும் உள்ளது. ஈழத் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் உறுதிப்படுத்தப்படாத எந்த அரைகுறைத் தீர்வுகளுக்கும் மக்கள் ஆணையை மீறி ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் உங்களில் எவருக்கும் கிடையாது என்பதைப் புரிந்து செயற்படுங்கள்.

அன்பார்ந்த சிங்கள உறவுகளே!

நாம் சிங்கள மக்களுக்கு விரோதிகள் அல்லர், எமது தமிழீழ விடுதலைப் போராட்டமும் சிங்கள மக்களுக்கு எதிரானது அல்ல, இலங்கை பிரித்தானியக் குடியேற்றவாதிகளின் பிடியிலிருந்து விடுதலை பெற்ற பின், கடந்த 74 ஆண்டுகளாக எம்மை ஆண்டு வரும் சிங்கள இனவாத அரசியல்வாதிகள் பாராளுமன்ற ஆட்சியைக் கைப்பற்றுவதற்காகக் கையிலெடுத்த இன அடக்குமுறைக் கொள்கையே நாம் பிளவுபட்டிருப்பதற்கான அடிப்படைக் காரணமாகும். ஆயுத பலத்தினால் எமது மக்களை அடிமை கொள்ள முனையும் சிங்கள அரசுக்கும், அரசுப் படைகளுக்கும் எதிராகவே நாம் தற்காப்புப் போர் புரிய நிர்ப்பந்திக்கப்பட்டோம். இந்தத் தேவையற்ற போர் தமிழ் மக்களை மட்டுமன்றி சிங்கள மக்களையும் ஆழமாகப் பாதித்திருக்கிறது என்பதை இப்போதுதான் நீங்கள் உணரத் தொடங்கியுள்ளீர்கள். இனவெறி கொண்ட அதிகார வர்க்கத்தின் அடக்குமுறைக் கொள்கையால் இலட்சக் கணக்கான தமிழர்கள் மட்டுமல்ல ,கடந்த 51 வருடங்களில், இந்த அதிகார வர்க்கத்திற்கு எதிராகப் புரட்சி செய்த பல்லாயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களும் கொல்லப்பட்டுள்ளார்கள். அத்தோடு இந்த அதிகார வர்க்கத்தைப் பாதுகாக்க இராணுவத்தில் இணைந்த அப்பாவிச் சிங்கள இளைஞர்களும் அநியாயமாகப் பலியிடப்பட்டிருக்கிறார்கள்.

2009 ஆம் ஆண்டு தமிழ் மக்கள் மீது போர்தொடுத்து இனவழிப்பு நடாத்தியதும் இதே இனவாத அரசியல்வாதிகளே, சமீபத்தில் ஈஸ்டர் தாக்குதலை நடாத்தி இஸ்லாமிய நண்பர்களுடன் விரோதத்தை ஏற்படுத்த முனைந்தவர்களும் இதே அரசியல்வாதிகள் தான். இன, மத, சாதி பேதங்களால் எம்மைக் குத்திக் குதறி

2009க்குப் பின் நாட்டின் அபிவிருத்திக்காக உதவி வழங்கும் நாடுகளால் பாரியளவு நிதி கொடுக்கப்பட்டிருந்தும், அந்த நிதி நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படாது, அவசியமற்ற பாதுகாப்புத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட காரணத்தால், இன்று தனது நாட்டு மக்களின் அடிப்படைத் தேவைகளைக் கூடப் பூர்த்தி செய்ய முடியாத பொருளாதார நெருக்கடி நிலை சிறீலங்காவில் ஏற்பட்டுள்ளது. சிறீலங்காவின் இன்றைய பொருளாதார நெருக்கடி நிலை குறித்து அனைத்துலக சமூகம் பூரண விசாரணைகளை நடாத்துவது அவசியமானதாகும்.

அதேவேளையில் தமிழர்களாகிய நாங்கள், உதவி வழங்கும் நாடுகளிடமும், சர்வதேச நாணய நிதியத்திடம் வலியுறுத்துவது என்னவென்றால், உங்களது இராணுவ, பொருளாதார, கேந்திர நலன்களுக்கு எந்தளவு முக்கியத்துவம் கொடுக்கிறீர்களோ, அதேயளவு முக்கியத்துவம் ஈழத் தமிழர்களுக்கான ஒரு நிரந்தர அரசியற் தீர்வு விடயத்திலும் கொடுக்கப்பட வேண்டுமெனத் கேட்டுக்கொள்கிறோம். இந்த நாடு நிரந்தரமாக இப் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள வேண்டுமெனில், ஈழத் தமிழர்களின் தேசிய இனப் பிரச்சனை உலகம் ஏற்றுக்கொண்ட சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையில் தீர்க்கப்படவேண்டுமென நாம் வலியுறுத்துகிறோம்.

நன்றி.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

பா. தயாமோகன்

.....

அரசியற்துறை

தமிழீழ விடுதலைப் புலிகள்.

முள்ளிவாய்க்கால் நினைவு நாள்

Mullivaikkal Remembrance Day

13 ஆம் Yrs ஆண்டு

மே May 18

2009

ஈழத்தமிழின அழிப்பு நாள்

தமிழ்த்தேசிய துக்க நாள்

Eelam Thamil GENOCIDE DAY

Thamil National MOURNING DAY

May 18 2022

Only in 2009 Over 146. 679 Eelam Thamils were murdered and more then 70,000 Thamils unaccounted. Over 95,000 Thamil Women Widowed by Sri Lanka's Government Forces, More then 50,000 Thamils Children Orphaned.



1948 தொடக்கம்
தமிழீழத்தில் தமிழர்களுக்கு
எதிரான கட்டமைக்கப்பட்ட
இன அழிப்பு
தொடர்கிறது...

Since 1948 Structural Genocide Continues Against Eela Thamils by Sri Lankan Government

Ontario Government Recognized Thamil Genocide Education Week May 11 to 18 2022

The Genocide of Thamils in Sri Lanka is one of biggest tragedies of the 21st century and yet the World still remains silent

Government of Canada & United Nations Recognize Thamil Eelam Genocide and demand International Investigationon Genocide of Eelam Thamils

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் The thirst of the Thamils is the Homeland of Thamileelam சங்கத்தமிழ்